255

255
8-AUG 1945
721

ஜனநாயகப் பிரச்னைகள்

எஸ். ஸ்ரீநிவாஸ ஐயங்கார்

அணா 8

பதிப்பாசிரியர்: பி. ஸ்ரீ

தினமணி வெளியீடு 26

தினமணி வெளியீடு : 26

பதிப்பாசிரியர் : பி. ஸ்ரீ.

ஜனநாயகப் பிரச்னைகள்

எஸ். ஸ்ரீநிவாஸ ஐயங்கார்

மொழிபெயர்த்தவர் :

ஏ. ஜி. வேங்கடாச்சாரியார்,

துணை ஆசிரியர் "தினமணி"

321.8

"இருள் அகற்றும்
கைவிளக்கே கற்ற அறிவுடைமை"

தினமணி காரியாலயம்
100, மவுண்டு ரோடு
சென்னை
1945

காபிரைட்]

[விலை அணா 8

W6

தினமணி வெளியீடு

இலக்கிய ஆலோசனையாளர்கள்

ஸ்ரீமதி. எஸ். அம்புஜம்மாள்,
ஆழ்வார்பேட்டை, சென்னை

திரு. கி. சந்திரசேகரன்,
மயிலாப்பூர், சென்னை

,, ஏ. என். சிவராமன்,
"தினமணி" ஆசிரியர்

,, கே. சுவாமிநாதன்,
ஆங்கிலப் பேராசிரியர்,
ப்ரெஸிடென்ஸி காலேஜ், சென்னை

,, டாக்டர் டி. எஸ். திருமூர்த்தி,
நுங்கம்பாக்கம், சென்னை

,, கே. ஏ. நீலகண்ட சாஸ்திரியார்,
சரித்திரப் பேராசிரியர்,
சென்னை யூனிவெர்ஸிடி

,, ஸி. என். முத்துரங்க முதலியார்,
பேட்டை, செங்கற்பட்டு ஜில்லா

,, ஏ. வி. மெய்யப்ப செட்டியார்,
ஸரஸ்வதி ஸ்டோர்ஸ்,
பிரகதி பிக்சர்ஸ், சென்னை

,, எஸ். வையாபுரிப் பிள்ளை,
தமிழ் ஆராய்ச்சித் தலைவர்,
சென்னை யூனிவெர்ஸிடி

பொருள் அடக்கம்

ஜனநாயகப் பிரச்னைகள்— பக்கம்

1. ஹிந்து ராஜ நீதி: ஜனங்களின் உரிமை ... 11
2. ராஜ தர்மமும் யதேச்சாதிகாரமும் ... 13
3. ஜனநாயக உதயம் ... 16
4. ஜனநாயகமும் வோட்டுரிமையும் ... 18
5. இரு வகை ஜனநாயகங்கள் ... 20
6. உரிமையைக் காக்க மக்களின் தயக்கம் ... 21
7. சம்சயங்களும் பீதியும் ... 22
8. ஸர்வாதிகாரங்கள் தோன்றியதேன்? ... 23
9. சுய ஆட்சியும் நல்லாட்சியும் ... 26
10. பிரதிநிதிகளும் வோட்டர்களும் ... 27
11. மிகச் சிறந்த அபேட்சகர்கள் கிடைக்காததேன்? 29
12. அவசியமான வரையறைகள் ... 31
13. வோட்டுரிமை ... 33
14. வோட்டர், அபேட்சகர் வயது வரம்புகள் ... 35
15. கட்டாய உயர்தரக் கல்வி அவசியம் ... 37
16. தொகுதி—தொழில்முறைப் பிரதிநிதித்வம் ... 39
17. வீதாசாரப் பிரதிநிதித்வம் ... 42
18. தனியுரிமைகளுக்கு ஸ்தானங்கள் இருக்கக் கூடாது ... 44
19. தனித்தொகுதி முறை கூடாது ... 45
20. ரகஸ்ய வோட்டு முறையின் கோளாறுகள் ... 46
21. தேர்தல் ஊழல்கள் ... 48
22. கட்சி முறையும் லஞ்ச ஊழலும் ... 50
23. பிரதிநிதியின் உரிமையும் கடமையும் ... 54
24. இரண்டாவது சட்டசபை ... 55
25. ஸர்வஜன வோட், பொதுஜன வாக்கு ... 57
26. சமஷ்டியின் அமைப்பு ... 60

		பக்கம்
27.	நிர்வாகப் பிரச்னைகள்	... 61
28.	மாகாணச் சுய ஆட்சியும் கட்சி அரசியல் முறையும்	... 62
29.	கட்சி-சர்க்காரும் ஜனநாயகமும்	... 63
30.	கட்சிச் சார்பற்ற தேசிய சர்க்கார்	... 70
31.	அரசியல் கட்சிகளைத் தடைசெய்ய வேண்டும்	... 71
32.	சமாதான காலத்தில் சாத்தியமே	... 77
33.	மந்திரி சபையைத் தேர்ந்தெடுக்கலாம்	... 78
34.	நீதி மன்றங்களும் பிரஜா உரிமையும்	... 83
35.	கட்டாய ராணுவ சேவை	... 85
36.	கலாசாரம் ('கல்சர்')	... 89
37.	இந்தியர் எல்லோரும் ஓர் இனம்	... 93

★

8-AUG 1945
MADRAS

முகவுரை

நம் நாடு விரைவில் விடுதலை யடைந்து ஜனநாயகம் தேசத்தில் பரிமளிக்கவேண்டும் என்பது இந்தியர்களாகிய நம்மெல்லோரின் ஒன்றுபட்ட ஆசை. தேசிய காங்கிரஸின் தலைமையில் நடந்து வரும் சுதந்திரப் போர் வெற்றிகரமாக முடிவடையும் நாள் வெகு தூரத்தில் இல்லை. பரிபூர்ண சுயேச்சை உடனடியாகச் சாத்தியமாகாவிடினும், கணிசமான அதிகார மாற்றம் வந்தே தீரும் என்று பல கட்சியினரும் நம்புகின்றனர். அந்த அதிகாரம் இந்நாட்டுப் பொது மக்களுக்கு உரியதே யன்றி எந்தத் தனிக் கட்சி, வர்க்கம் அல்லது குழாத்துக்குச் சொந்தமாகாது. இதைச் சாமானிய மக்கள் வெறுமனே உணர்ந்தால் மட்டும் போதாது. அதிகாரம் பொது ஜனங்களின் பிடியில் உறுதியாக இருந்து வருவதற்கு வேண்டியவாறு, ராஜீய வாழ்வின் எல்லா அம்சங்களையும் உருப்படுத்தி உஷாரா யிருந்து வருவது இன்றிமையாதது. அப்பொழுதுதான் ஜனநாயகத்தை அசைக்க முடியாத அஸ்திவாரத்தின்மீது இந்நாட்டில் அமைக்க முடியும்.

இந்தியாவில் ஜனநாயகம் விரிவாகிப் பரிபூர்ண நிலையை அடைவதைத் தடை செய்வதற்கு எவ்வளவோ சுயநல-சக்திகள் தயாராகக் காத்துக்கொண்டிருக்கின்றன. தேச நன்மையின் பெயரால், வாயில்லாப் பூச்சிகளின் தர்மகர்த்தாக்கள் என்று சொல்லிக்கொண்டே, வரப்போகும் அதிகாரத்தைத் தங்கள் சொந்த லாபங்களை முன்னிட்டுப் பயன் படுத்திக் கொள்வதில் இந்திய பரசிரம ஜீவிகள் ஏற்கெனவே அக்கரை காட்டி வருகிறார்கள். உலகத்தின் மற்றப் பாகங்களிற் போலவே இந்தியாவிலும், சாமானிய மனிதன் ஒரு ஸோஷலிஸ்ட் சமுதாயம் ஏற்படுவதையே விரும்புகிறான். இந்த நோக்கத்துடன் சில ஸ்தாபனங்கள் நம்மிடையே உழைத்து வருகின்றன. சுயநலச் சுரண்டல்-கோஷ்டியினருக்கு இவற்றின் வேலைகள் கட்டோடு பிடிக்கவில்லை. அதிகாரம் தங்கள் கைக்கு வருமாயின், தீவிர சக்திகளை வேரறுப்பதற்கு அவர்கள் சற்றும் தயங்கமாட்

டார்கள். பெரிய பணக்காரர்களும் முதலாளி வர்க்கத்தினரும் தங்கள் சொந்த லாபத்தை முன்னிட்டு நாட்டின் நலனைக் காற்றுவாக்கில் விட்டு, பிரிட்டிஷ் ஆளும் வர்க்கத்தினருடன் ஒத்துப் போய்விடக் கூடிய அபாயம் இருந்து வருகிறது. இதைச் சமீபத்தில் மகாத்மா காந்தி மிகத் தெளிவாக அறிவுறுத்தி யிருக்கிருர். பொருளாதாரத் துறையில் பிரிட்டிஷ் ஆதிக்கம் நீடித்திருப்பதற்காக வேண்டி, பிரிட்டிஷ் - இந்திய முதலாளித்வ அச்சு ஒன்று உருவெடுத்து வருகிறது. இது பலப்படுமாயின், இந்திய ஜனநாயகம் தலை தூக்க முடியாதபடி செய்யவும் முயன்று பார்க்கும் என்பதில் ஐயமில்லை. பரிபூர்ண சுதந்திர லட்சியம் கைகூடுவதுகூட இதனுல் அசாத்தியமாகிவிடலாம். இதைத் தவிர்க்க வேண்டுமானல் பொது ஜனங்கள் விஷயங்களை அறிந்து, மதிப்பிட்டு, உஷாராய் நடந்து கொள்ளக்கூடிய நிலைமையி லிருப்பது ரொம்பவும் முக்கியமாகிறது.

இந்தியர்வின் புது ஜனநாயகத்தை எதிர்நோக்கும் பிரச்னைகள் யாவை என்பதை காலஞ் சென்ற ஸ்ரீ எஸ். ஸ்ரீநிவாஸையங்கார் ஐந்தரை வருஷங்களுக்கு முன்னமேயே அலசி ஆராய்ந்து, தம்முடைய திடமான கருத்துக்களைப் போதிய ஆதாரங்களுடன் வெளியிட்டிருக்கிருர். இந்திய தேசிய காங்கிரஸின் அக்ராஸனராகவும், தென்னுட்டில் ராஜீயத்தின் போக்கை அடியோடு மாற்றியும் இவர் முதன்மையான அனுபவத்தைப் பெற்றவர். காந்திஜி, ஜவாஹர்லால் தவிர இந்திய ராஜீயப் பிரச்னைகளைப் பற்றித் தீர்க்காலோசனை செய்துள்ள தலைவர் ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸையங்கார் ஒருவர்தாம். இவருடைய மேதை சாதாரணக் கட்சிக் கட்டுப் பாடுகளுக்குள் தேங்கி உறங்கிக் கிடக்கக் கூடியதன்று. அதன் காரணமாக இவர் 8 வருஷ காலம் அரசியலிலிருந்து விலகி நிற்க நேரிட்டது. எனினும் இணையற்ற மதிநுட்பத்துடன் நிகழ்ச்சிகளின் போக்கை இவர் இடைவிடாமல் கவனித்து, தம்முடைய அபிப்பிராயத்தைப் பட்டவர்த்தனமாக வெளியிடத் தயங்கியதே யில்லை.

மாகாண சுய ஆட்சி 1937-ல் அமலுக்கு வந்தவுடன், மறுபடியும் பொது வாழ்வில் சேர்ந்து இவர் ஆற்றிய பெருந்தொண்டை யாரும் மறக்க முடியாது. ஓரளவு ஜனநாயகமாயுள்ள அந்தத் திட்டம் நடைமுறையில் வேலை செய்து வந்த

விதத்தை மனத்தில் வைத்தே ஜனநாயகத்தைப் பற்றிய தம்முடைய ஆராய்ச்சியை ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸையங்கார் நடத்தினர். 1939-ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 9-ந் தேதி ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார் ஞாபகார்த்தப் பிரசங்கமாகத் தம் முடைய கருத்துக்களை இவர் வெளியிட்டார். அவை தமிழில் வெளிவந்தால்தான் பொது மக்கள் விஷயங்களை அறிய முடியுமென்பது இவருடைய கருத்து. அந்தப் பணி யாற்றும் பொறுப்பு எனக்குக் கிடைத்ததற்காக மகிழ்ச்சி யடைகிறேன்.

சட்டசபை யமைப்பு, வோட்டுரிமை, தொகுதி நிர்ண யம், மந்திரி சபை யமைப்பு, லஞ்ச ஊழல்கள், பொது வாழ்வில் பின்பற்ற வேண்டிய சம்பிரதாயங்கள் ஆகிய பிரச்னைகளைச் சரித்திரக் கண்ணோட்டத்துடன் ஸ்ரீமான் ஐயங்கார் ஆராய்ந்திருக்கிருர். கட்சி-சர்க்கார் கூடாதென்பது இவருடைய திடமான அபிப்பிராயம். உலகப் படிப்பினை ஒருபுற மிருக்க, புதிய ஜனநாயக பரீட்சையில் இறங்கும் இந்நாட்டு மக்கள் கூடியவரை ஒருமுகமாகவே அரசியல்-பாரத்தை வகிப்பது சாலச் சிறந்ததென்பது இவருடைய உறுதியான நம்பிக்கை. அரசியல்-கட்சிகள் தனித் தனியாக வேலை செய்வதை இவர் ஆட்சேபிக்கவில்லை.. ஆனல் ஒரு நிர்ணயமான வேலைத் திட்ட அடிப்படையில், முற்போக்குக் கட்சிகளெல்லாம் ஒன்றுபட்டு அதிகாரத்தை ஏற்று நடத் தினலொழிய, ஜனநாயகம் உறுதிப்படா தென்பது இவ ருடைய சித்தாந்தம். பொது ஜன ஐக்கிய முன்னணி, இந்தியர் எல்லோரும் ஒரே இனத்தவர் என்ற நம்பிக்கை ஆகிய இரண்டையும் முதன்மையாகக் கொண்டு உழைத் தால்தான் இந்தியாவுக்கு விமோசனம் கிடைக்கு மென்ற இவரது கருத்துக்குப் பேராதரவு கிடைப்பது திண்ணம்.

தேசிய அஸ்திவாரத்தின்மீது ஒரு ஸோஷலிஸ்ட் சமு தாயத்தை இந்திய மக்கள் உருப்படுத்த வேண்டும் என்பதுவே ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸையங்காரின் அபிலாஷை. அது கைகூடும்படி செய்வதற்கு ஜனநாயக வழியில் எதை யெல்லாம் செய்யவேண்டும், எதை யெல்லாம் தவிர்க்க வேண்டும் என்பதை "ஜனநாயகப் பிரச்னைகள்" தெளிவு படுத்துகிறது. இரத்தினச் சுருக்கமாய், சூத்திரங்கள் போல ஸ்ரீநிவாஸையங்கார் ஆங்கிலத்தில் வெளியிட்ட கருத்துக்களை,

அரசியலகராதி தெளிவுபடாமலிருக்கும் தமிழில் எடுத்துரைப்பதிலுள்ள குறைபாடுகளை நான் அறிவேன். எனினும், ராஜீயப் பிரச்னைகளைப் பற்றிய சிந்தனையை ஊக்கப்படுத்த வேண்டும் என்ற பேரவாவுடன் எழுதப்பட்ட இப் புஸ்தகத்தைத் தமிழ் நாட்டினர் அனுதாபத்துடன் ஏற்றுக்கொள்வர் என்று நம்புகிறேன்.

சென்னை,
17—5—'45.

ஏ. ஜி. வேங்கடாச்சாரி

★

ஜனநாயகப் பிரச்னைகள்

மனித வர்க்கத்தின் ஒழுங்கான முன்னேற்றத்தைத் தடுத்து, இன்ப வாழ்க்கையை நடத்த அவன் செய்யும் முயற்சியை எத்தனையோ விஷயங்கள் பாதிக்கின்றன. குழப்பம் நிறைந்த ராஜீய சிந்தனையும், அதன் விளைவாகத் தோன்றும் களேபரமான அரசியல் கருத்துக்களும் ஸ்தாபனங்களும், மற்ற எல்லாவற்றையும்விட, இவ்வகையில் அதிக முக்கியத்வம் வாய்ந்தவை. சுதந்திரம், ஜனநாயகம் என்பவை இரட்டை லட்சியங்கள். சமுதாயமாகச் சேர்ந்து வாழும் மனித வர்க்கத்தின் ஜீவாதாரமான மனோபீஷ்டத் தேவைகளாக இவை நிர்ணயமானது மெதுவான வளர்ச்சியின் மூலமாகவேதான். பண்டைக்கால அதீனியா மட்டுமே இதற்கு விலக்காயிருந்தது. சாதாரண கிராம நிர்வாகங்கள், நகரத் துரைத்தனங்கள், ஜாதியத் தலைவனின் அதிகாரங்கள், உறுதியான பந்தங்களில்லாத ஏகாதிபத்தியங்கள்—இவ்வாருக, படிப்படியாக, அரசியல் ஸ்தாபனங்கள் முன்னேறின. கடைசியில், ஒன்று பார்த்தால் ஒன்று போல, பிரம்மாண்டமான, ஜன நெருக்கம் மிகுந்துள்ள, பிரதேசங்கள்மீது மத்திய ஆதிபத்திய அதிகாரம் செலுத்தும் நிலைமை வந்தது. இதனிடையே சுதந்திரம், ஜனநாயகம் இரண்டின் நடைமுறையும் தன்மையும்—அவற்றின் அர்த்தமும் கூட —நாம் அறியாமலேயே மாறுதல் அடைந்து வந்திருக்கின்றன. இவ்விரண்டின் இன்றைய பொருளும் கருத்தும் பண்டைக் காலத்திய நிலையை முற்றிலும் அனுசரித்தவைகளாக இல்லை.

ஜனநாயகத்துக்காக நடைபெற்ற நீடித்த போராட்டம் இங்கிலாந்தில் வெற்றியளித்தது 1688-ம் ஆண்டில். பிரான்ஸிலும், வட அமெரிக்காவிலும் பதினெட்டாம்

நூற்றுண்டின் கடைசிக் கால் நூற்றுண்டில் அது பய னளித்தது. மற்ற உலக நாடுகள் பலவற்றில் பத்தொன் பதாம் நூற்றுண்டிலும், இந் நூற்றுண்டின் ஆரம்பத் திலுமே வெற்றி கிடைத்தது.

இரண்டரை நூற்றுண்டுகளில் உலகின் தோற் றத்தை அடியோடு மாற்றி, மதிப்பிட முடியாத விளைவுக ளுடன் கூடியனவாக இருந்த ராஜீயக் கருத்துகள் முந்திய ஆர்வத்தையும், சக்தியையும் இப்பொழுது பெற்றிருக்க வில்லை. நாம் இதுகாறும் வசித்துவந்த இவ்வுலகம் கில மாய்க் கிடப்பதைக் கண்கூடாகக் காணலாம். எனவே நீடித்து நிலைக்கக்கூடிய ராஜீய முறைகளை நிர்ணயிப்ப தற்கு இந்தச் சரித்திர பூர்வமான முறையை அதிகமாகப் பயன் படுத்திக்கொள்ள முடியாது. ஜனப் பிரதிநிதி சபையின் மூலம் நடைபெறும் துரைத்தன முறையை (Parliamentary Government) மேதாவியான அரசியல் மாணவன் பூஜிக்கும் காலம் மலையேறிவிட்டது, ஜனநாய கங்களைக் காப்பாற்ற ஒரு தனிவிதி வேலை செய்கிறது என்று இனி நிம்மதியாக இருக்க முடியாது. "முன் னேற்றம் என்பது இயற்கையின் விதியல்ல. மனித சமூகத்தின் வளர்ச்சியானது, எதிர்பார்க்கப் படுபவை களும் திடீரெனக் கிளம்பியவைகளும் சேர்ந்து உரு வானது என்பதை அங்கீகரிக்கத்தான் வேண்டும்" என்று ஒரு பிரசித்தி பெற்ற சரித்திராசிரியர் கூறியிருப்பதி லிருந்து இந்தத் தீர்மானம் மேலும் பலப்படுகிறது.1

உலகத்தின் பொருளாதார அமைப்பு தொன்று தொட்டு ஆழ்ந்த அதிருப்தியைக் கொடுத்து வந்திருக் கிறது. அதை மாற்றி அமைக்க முறையற்ற பரீட்சைகள் நம்மைச் சுற்றிலும் நடைபெறுவதைக் காண்கிறோம். நாம் பழைய ராஜீய அஸ்திவாரத்திலிருந்து வர வர அதிக மாய் விலகிக்கொண்டே போகிறோம். உண்மையிலேயே இது ஆபத்தானது. ஆனால் இதைவிட ரொம்பவும் பிரகாசமாகத் தோன்றுபவை பொருளாதார அதிருப்

1 "ஐரோப்பாவின் சரித்திரம்" எச். ஏ. எல். பிஷர் (1936)

தியும், பரிகாரப் பரீட்சைகளுந்தான்; இத்தகைய நிலையிலிருந்து ஜனநாயகத்தின் பிரச்னைகளில் சிலவற்றை—இந்தியாவைப் பற்றிய விசேஷ திருஷ்டியுடன்—ஆராய முயல்வது அவசியமெனத் தோன்றுகிறது. இந்தியாவின் ராஜீய, அரசியல் லட்சியம் பூர்ண சுதந்திரமா, அல்லது வெஸ்ட்மின்ஸ்டர் - சட்டத்தின் கீழுள்ள டொமினியன் அந்தஸ்தா, அல்லது இந்தியா எப்பொழுதும் சுதந்திரப் பாதையிலேயே இருக்க உத்தேசித்திருக்கிறதா என்பது இந்த ஆராய்ச்சியைப் பாதிக்காது.

ஹிந்து ராஜ நீதி: ஜனங்களின் உரிமை

புராதன இந்தியாவில் ஜனநாயகச் சின்னங்களும், குடியரசு ஸ்தாபனங்களுங் கூட இருந்தன வென்பதை, ஆராய்ச்சி மனப்பான்மையுள்ள மாணவன் எடுத்துக் காட்டுவது சாத்தியமே. ஆனால் இங்நாட்டில் அவை உறுதியாக வேரூன்றவில்லை யென்பதும், வளர்ச்சியடையவில்லை என்பதும் தெளிவான விஷயம். இதற்குக் காரணங்களைத் தேடியலைய வேண்டியதில்லை. புராதன ஹிந்து ராஜ நீதியானது, ஜனப் பிரதிநிதிகளைக் கொண்டு சர்க்காரை நடத்தும் முறையைச் சுறுசுறுப்பாய் வளர்ச்சியடையவொட்டாமல் தடை செய்தது, அல்லது அனுவசியமாக்கிவிட்டது. புராதன இந்தியாவில் ராஜாங்கம் என்ற கருத்தே இக்காலக் கருத்துக்கு அடியோடு மாறுபட்டிருந்தது. அப்பொழுது இருந்த ராஜாங்கம் இன்றைய ராஜீய துரைத்தனத்தைப் போல இருக்கவில்லை; தர்ம சாஸ்திரங்களில் நிர்ணயிக்கப்பட்ட சமூக அமைப்புத் தான் அரசியலாக இருந்தது.

ஹிந்து மன்னன் தத்துவ ரீதியிலோ அல்லது நடைமுறையிலோ யதேச்சாதிகாரியாக இருக்கவில்லை. வேத காலத்தில்கூட ஜனங்களின் கூட்டம் அல்லது ஸமிதி தான் அவனைத் தேர்ந்தெடுத்தது.2 அநேகமாய் ஜனங்கள் ஒரு குறிப்பிட்ட குடும்பம் அல்லது குழாத்திலிருந்தே

2 அதர்வ வேதம்—"ஹிந்து ராஜரிகம்" கே. பி. ஜயஸ்வால் (1924).

மன்னனைப் பொறுக்கி யெடுத்துக் கொண்டிருக்கக்கூடும். ஆனால் அது தேர்தலாகத்தான் இருந்தது. ஒரு மன்னனைத் தேர்ந்தெடுக்கவோ, சிம்மாசனத்தை விட்டு நீக்கி விடவோ, அல்லது வாபஸ் பெற்று விடவோ ஜனங்களுக்கு உரிமை யிருந்தது என்று அநேகமாய்த் தெளிவாக ஏற்படுகிறது. மன்னன் எப்பொழுதும் தன் மந்திரி சபையின் ஆலோசனைப்படிதான் நடந்தாக வேண்டியிருந்தது. பெரும்பான்மையோரின் அபிப்பிராயத்தையே மந்திரி சபையின் கருத்தாக மதிப்பது வழக்கமாக இருந்து வந்தது. கௌடில்யரின் அர்த்த சாஸ்திரம் என்ற பழைய நூலிலேயே இந்த முறையைப் பற்றிப் பிரஸ்தாபமிருக்கிறது.3 மன்னனின் கடமைகள் இன்னவை யென்று தர்ம சாஸ்திரங்கள் நிர்ணயித்துவிட்டிருந்தன. அவற்றில் சில தெளிவான சட்ட சம்மதமான கடமைகள். மன்னன் பிறப்பிக்கும் சட்ட சம்மதமான உத்தரவுகளுக்கு மட்டுமே கீழ்ப்படிய மக்கள் கடமைப் பட்டவர்கள்.4 வரி விதிப்பது மன்னனின் அடிப்படை உரிமைகளில் ஒன்று. அது சம்பந்தமாக (மக்களுடன்) எழக்கூடிய பிரச்னைகள் விஷயத்தில் தர்ம சாஸ்திரங்களுக்கு அவன் கீழ்ப்படிந்தாக வேண்டியவன். சமூக அமைப்பையும், பலவேறு ஜாதிகள் அல்லது வகுப்புகளின் கடமைகளையும், உரிமைகளையும் காப்பாற்ற வேண்டுவது மன்னனின் தர்மமாயிருந்ததெனப் பொதுப்படையாகக் கூறலாம். சட்டங்களை நடத்திவைக்கையில், சாஸ்திர நியதிகளைத்தான் அவன் சாதாரணமாகப் பின்பற்றி அந்தந்த ஜாதியின் பழக்க வழக்கங்களைப் பரிபாலிக்க வேண்டும். தேசத்தின் பிரதம நிர்வாகஸ்தனுகவும், சமூக அமைப்பின் ரக்ஷகனுகவும் அவன் நடந்துகொள்ள வேண்டியிருந்தது. வரிவிதித்து வசூலித்து, ராணுவம், போலீஸ், சர்க்கார் இலாகாக்கள் முதலியவற்றை நிர்வகிப்பது மன்னனின் கடமை. இக்காலத்திய சர்க்கார்கள் செய்துவரும் மற்றும் பல கடமைகளை ஜாதிகள், நாடுகள், பரிஷத்துகள், பஞ்

3 'அர்த்த சாஸ்திரம்' கௌடில்யர்—புத்தகம் 1. அத்தி. 15

4 'மனுதர்ம சாஸ்திரம்' 7—13. மேதாதிதி, கோவிந்தராஜர், குல்லூகர் வியாக்கியானங்கள்.

சாயத்துகள் போன்ற சம்பிரதாய ஸ்தாபனங்களும், தர்ம சாஸ்திர பண்டிதர்களும் செலுத்தி வந்தனர். ஆனால் இப்பொழுது இருந்துவரும் பிரதிநிதி ஸ்தாபனங்கள் அல்லது பொறுப்பாட்சி-சர்க்கார் முறையுடன் ஒப்பிடக் கூடிய அரசியல் விதிகளோ, அல்லது முறைகளோ அப் பொழுது இருக்கவில்லை. ஆனால் பிரஜைகளுக்கு மட்டும் நிர்வாகத்தில் முக்கியமான எல்லா விஷயங்களிலு மாவது பங்கு இருந்து வந்தது. தலைநகர வாசிகளான பௌரர்களும், கிராம வாசிகளான ஜனபாதர்களும் மன்ன னின் சுயேச்சைப் போக்குக்குத் தடையாக இருந்து வந்தனர்.5 குடியரசு நாடுகளும், சமஷ்டி ஏற்பாடுகளும் இருந்திருப்பதாகத் தோன்றுகிறது.6 ஆனால் புராதன இந்தியாவின் ராஜீய ஸ்தாபனங்களைப்பற்றித் தொடர்ச்சி யாகவோ அல்லது போதிய அளவுக்கோ ஆதாரங்கள் இருப்பதாகச் சொல்வதற்கில்லை. எனவே, ஆங்காங்குச் சிதறிக் கிடக்கும் ஒரு சில வாக்கியங்களில் தற்காலத்திய பார்லிமெண்டரி ஜனநாயகக் கருத்துக்களை யெல்லாம் காண முயலுகையில் வெகு ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். புராதன ஹிந்து நாட்டில் யாருக்கு ஆதிபத்திய அதிகார மிருந்தது என்ற பிரச்னைக்கு இங்கு இடமில்லை. ஆஸ்டினுடைய வியாக்கியானப்படி ஆதிபத்திய உரிமை மன்னனிடமும், மக்களிடமும் கூட்டாகவே யிருந்தது என்ற முடிவுக்கு வருவதில் சிரமமிருக்க முடியாது.

ராஜ தர்மமும் யதேச்சாதிகாரமும்

மன்னனுடைய ஆட்சி என்பது எவ்வாறு ஆரம்ப மாயிற்று என்ற விஷயமாய் நிச்சயமான ஆதாரங்கள் இருக்கின்றன. முதலில் அராஜகம் இருந்ததாகவும், பிறகு மக்கள் தம்மிடையே ஒரு சமூக ஒப்பந்தம் (Social Contract) செய்துகொண்டு ஒரு மன்னனை நியமித்து, தண்டனை விதிக்கவும், வரி வசூலிக்கவும், மக்களையும் அவர்களுடைய உரிமைகளையும் பாதுகாக்கவும் அவனுக்கு

5 'ஹிந்து ராஜநீதிகம்' கே. பி. ஜயஸ்வால். அத்தியாயம் 27.
6 ஷை 51-52.

அதிகாரமளித்ததாகவும், கருதப் படுகிறது.7 மகா பாரதமும், அர்த்த சாஸ்திரமும் அப்படித்தான் கூறு கின்றன. நவீன ராஜீய சித்தாந்தமும் அதுவே. ஆனால் ஐரோப்பாவில் பல புரட்சிகளுக்குக் காரணமாயிருந்த இந்தத் தத்துவம் பழைய இந்தியாவில் வேறு விதத்தில் உருவாகி, படிப் படியாக மன்னனை மேலோனுக்கி விட்டது.

மன்னன் எல்லாத் தெய்வங்களின் தேஜோமயமானவன் என்றும், மனித ரூபத்தில் வந்திருக்கும் பகவானென்றும் கருதப்படவேண்டு மென்பது மக்களுக்கு மனுவின் உப தேசம்.8 மன்னன் தேர்ந்தெடுக்கப்படுவது போய்ப் பரம்பரைப் பாத்தியதை ஏற்பட்டது. மன்னனின் மந்திரி களும், அவனது பரம்பரைச் சேவகர்களிடையே யிருந்து பொறுக்கி யெடுக்கப்பட்டனர். மன்னன் ஆத்ம வித்தை யிலும், மூன்று வேதங்களிலும், ராஜாங்க சாஸ்திரங் களிலும், பொருளாதாரத்திலும் வல்லவனுயிருக்க வேண்டும் என்பது விதி. மந்திரிகளையும், புரோகிதர் களையும் கலந்து ஆலோசித்த பிறகு தன் யுக்தானுசாரப் படி நடந்துகொள்ளக் கூடியவனுயிருக்கவேண்டுமென்பது யாக்ஞுவல்க்யரின் கூற்று.9 இவற்றின் விளைவாக ஜன சபைகளின் அதிகாரங்கள் படிப்படியாய்க் குறைந்தன. அவற்றின் கடமைகள் வெறும் சடங்குகளாக மாறி விட்டன. ஹிந்து ஜனநாயகம் தர்மத்தின் மூலமாகத்தான் பிரதிபலிக்க முடியும். மன்னனைப் போலவே மக்களும் அதற்கு உட்பட்டவர்கள். தர்ம சாஸ்திரங்களில் காணப் படும் சமுதாய அமைப்பையும், மனிதர்களின் உரிமை களையும் கடமைகளையும் வேண்டுமென்றே மாற்றி அமைப் பதற்கு வேண்டிய அதிகாரத்துடன் கூடிய ஜனநாயக சர்க்கார் புராதன ஹிந்து-கருத்துக்களுக்கு ஒருகால் புறம்பாயிருக்கலாம். அந்தத் திசையில் ஜனநாயகம் வளர்ச்சியடையவேயில்லை. ஆள்வது தர்மந்தான் என்பது

---

7 'மகாபாரதம்', சாந்தி பர்வம், அத்தியாயம் 67; 'அர்த்த சாஸ்திரம்' 1—13.

8 'மனுதர்ம சாஸ்திரம்' 7: 5, 8, 11.

9 யாக்ஞுவல்க்யர். 1, 309—12. வித்யார்ணவரின் மொழி பெயர்ப்பு, 394, 396.

சித்தாந்தமா யிருந்ததே ஒழிய, சுதந்திரமான, நிர்ப்பந்த மற்ற, ஜனநாயகம் உண்மையில் இருக்கவேயில்லை. மற்ற தேசங்களைப் போலவே இந்தியாவிலும் ஜனநாயகம் நசிப்பதிலும், அதிகாரம் மன்னனிடம் சேமிக்கப்படுவதிலுந்தான் இந்தத் தத்வம் கொண்டுபோய் விட்டது. தவிர, ஸ்மிருதிகளில் விவரிக்கப்பட்ட தர்மம் பரிபூர்ணமாகவோ, ஒரே முறையை அனுசரித்ததாகவோ இருக்கவில்லை. சம்பிரதாயங்கள் ஒரு புறமும், தர்ம சாஸ்திர பண்டிதர்கள் ஒரு புறமும் செய்த வியாக்யானங்களாலும், மன்னர்கள் அடிக்கடி மாறியதாலும், அது மாறிக்கொண்டே வந்திருக்கிறது. ஸ்மிருதிகளில் காணப்படாத தர்மம் நிச்சயமற்ற, மர்மமானதோர், கோட்பாடு. அது நபருக்கு நபர் வித்தியாசப்படும்; சரியா, தவறு என்று பரீட்சித்துப் பார்க்க முடியாதது; நடைமுறையில் நிச்சயமற்றும், கொஞ்சங்கூட அமல் நடத்தக் கூடாததாகவும் இருந்தது. எனவே ஜனப்பிரதிநிதிகளின் ஆட்சிக்குப் பதில் மன்னனின் தனிப்பட்ட யதேச்சாதிகார ஆட்சி ஏற்பட்டது. கிராம சுய ஆட்சி தொடர்ந்து இருந்து வந்திருப்பது இதற்கு மாறுபட்ட கருத்துக்கு இடந் தரவில்லை. ஆரம்பத்தில் ஒரு கிராமத்தின் தனியாட்சியோ, அல்லது பல கிராமங்களின் கூட்டு ஆட்சியோ ஜனநாயகமா யிருந்திருக்கலாம். ஆனால் பெரிய தொகுதிகளும், தேசங்களும் கிளம்பியபோது, கிராம ஆட்சியானது ராஜாங்க அமலா யிருந்ததுபோய், ராஜாங்கத்துக்கு உட்பட்ட ஸ்தல சுய ஆட்சி யாகிவிட்டது.

முஸ்லிம் ஆட்சி ஏற்படும்வரை, இந்தியாவின் ராஜீயப் போக்கு, படிப்படியாக, யதேச்சாதிகார முடியாட்சியாகும் திசையிலேயே போய்க்கொண்டிருந்தது. சிற்சில சமயங்களில் மன்னனின் தர்ம புத்திதான் அதைச் சற்று மிதப்படுத்தி வந்தது. புராதன இந்தியாவில் சக்தியுடன்கூட ஜனநாயகம் வளராமல் தடைப்பட்டதற்குக் காரணம், தர்மத்தை அனுசரித்த ஆட்சி என்ற கருத்து முதலிடம் பெற்றிருந்தும், அதன் விளைவாக மன்னர்கள் தெய்விக உரிமைகளைக் கொண்டாடி வந்ததுதான். ஒன்றுக்கொன்று

போட்டியான மதப் பிரிவினைகள் ஏற்பட்டதும், விஸ்தார மான தேசத்தில் பல கிராமங்களிலும், சில நகரங்களிலும் மக்கள் சிதறுண்டு கிடந்ததும், ராஜீய வேலைகளிலோ அல்லது ஜனநாயகப் பிரச்னைகளிலோ, ஆழ்ந்த கவனம் செலுத்துவதற்கு வசதியாக இருக்கவில்லை. ஆரம்பத்தி லிருந்து தொடர்ச்சியாக நடந்தேறி வந்த அந்நியப் படை யெடுப்புகளும், அடிக்கடி தோன்றிய உள்நாட்டுத் தக ராறுகளும் ஜனநாயகம் சுறுசுறுப்பா யிருப்பதற்குப்பிரதி கூலமாயின. எனவே வேறு பல பிரயோஜனகரமான மார்க் கங்களில் தலைசிறந்தோர் கவனம் செலுத்தினரே ஒழிய, லௌகிக ஜனநாயக ராஜரிகத்தில் சிரத்தை காட்டவில்லை.

கௌடில்யரின் அர்த்த சாஸ்திரமும் அதைப் போன்ற மற்ற நூல்களும் பல அம்சங்களில் முக்கிய மானவைதாம். ஆனால் நவீனக் கருத்துக் கேற்றபடி பிரதிநிதித்வ முறையுடன் கூடிய ராஜீய ஸ்தாபனங்களைப் பற்றிய விவரங்கள் அவற்றில் இல்லை. அவை மன்னனை யதேச்சாதிகாரமுள்ள அதிபனுக்கி யிருக் கின்றன. சர்க்காரின் நிர்வாக யந்திரத்தையும், அது வேலை செய்யும் விதத்தையும் பற்றிய விவரங்களை மட்டும் அவற்றில் காண்கிறோம். ராஜரிக நியதிகளையும் மன்னன் நேச அதிபர்களுடனும், எதிரிகளுடனும் எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்பதையும் பற்றித்தான் அவை கூறுகின்றன. தர்மத்தை அனுசரித்து சர்க்கார் நடைபெற வேண்டுமென்ற நியதியானது, முஸ்லிம் ஆட்சி யும் அந்நிய ஆட்சியும் வந்தபிறகு, அடியோடு அழிந்து விட்டது. பழைய ஹிந்து சம்பிரதாயங்கள் கொஞ்ச நஞ்சம் இருந்து வருவதாகக் கருதப்படும் இன்றைய இந்திய சமஸ்தானங்களில்கூட ஜனநாயகத்தின் அடை யாளங்களைக்கூடக் காணோம்.

ஜனநாயக உதயம்

இன்றைய இந்தியாவில் ஜனநாயகம் முற்றிலும் நவீனமானதொரு லட்சியமாகவே இருந்துவருகிறது. அது அப்படித்தான் இருக்கவேண்டும். ஆனால் இப்போதைய

இந்திய ராஜீயத்தில் சிற்சில சமயங்களில் மதக் கோட்பாடுகளும் ஆத்மிகக் கட்டுப்பாடும் பிரஸ்தாபிக்கப் படுகின்றன. அத்தகைய இறக்குமதிகள் பொருத்த மற்றவையாக மட்டுமின்றி அபாயம் நிறைந்தவையாகவு மிருக்கும். இந்தியாவில் ஜனநாயகமென்பது, அடிப்படையான தத்வங்களிலும், விவரங்களிலும் முற்றிலும் லௌகிகமாகவும், நியாயவாதத்தை அனுசரித்ததாகவும், முஸ்லிம்களும், ஹிந்துக்களும், நாஸ்திகர்களும், பகுத்தறிவாளரும், ஆஸ்திகர்களும், எல்லா வகுப்பினரும் மதத்தினரும் ஒப்புக்கொள்ளக்கூடியதாகவும் இருக்கவேண்டும். அஸ்திவாரம் ஒழுங்காக அமைக்கப்படாவிட்டால், புதிதாக வந்திருக்கும் இந்த ஜனநாயகத்தைப் பற்றி நாம் நிச்சயமாயிருக்கமுடியாது. இன்றைய ஜனநாயகம் முற்றிலும் 1935-ஷ இந்திய அரசியல் சட்டத்தின் சிருஷ்டியாகும். இந்தச் சட்டத்தின் கீழ் மாகாணங்களில் மட்டுமே இத்தகைய ஜனநாயக மிருக்கமுடியும். மாகாண சர்க்காரின் அதிகாரங்களுக்கு வரம்புகளுண்டு. ஆனால், அதன் பிரதிநிதித்வத்தை அவை பாதிக்கவேயில்லையென்றும், அதிகார வரம்பு போதிய அளவுக்கு விஸ்தாரமா யிருப்பதால், அது பார்லிமெண்டரி ஆட்சி முறையே என்றும் கூறலாம். தகராறுகளின் விளைவாக அரசியல் சட்டமே முறைப்படி விரிவாக்கப்படும் வரையில் அல்லது வாபஸ் பெறப்படும் வரையில், மாகாண சர்க்கார்கள் விரும்பும் பக்ஷத்தில், தங்கள் அதிகாரத்தை வரம்பின்றி விஸ்தரித்துக் கொண்டே போகமுடியு மென்பதை மற்ற நாடுகளின் அனுபவத்திலிருந்து தெரிந்துகொள்கிறோம். ஆனால், இந்திய அரசியல் சட்டத்தில் காணப்படும் சமஷ்டி அமைப்பை ஜனநாயகமென்று கருதுவதற்கில்லை. அது ஜனநாயகமாக வேண்டுமானால், மாகாணங்களைப் போலவே சமஸ்தானங்களும், அதே தினுசில் ஜனநாயகங்களாகவேண்டும். மேலும், சமஷ்டி-சட்டசபைகளின் வோட்டர்கள் மட்டுமின்றி அதிகாரங்களும் ஜனநாயகத்தை அனுசரித்தேயிருக்கவேண்டும். இந்திய அரசியல் சட்டம் இந்த நிபந்தனைகளைத் திருப்தி செய்விக்கவில்லை. எனவே, சமஷ்டி சாதனப் பிரச்னைகளை இங்கு ஆராயப் போவதில்லை.

ஜனநாயகமும் வோட்டுரிமையும்

தேசத்தை ஆளும் அதிகாரம் எந்தக் குறிப்பிட்ட வகுப்பு அல்லது வகுப்புகள் இடமிராமல், சமூக மக்கள் எல்லோரிடமும் ஒருங்கே இருக்கக்கூடிய அரசியல் முறை தான் ஜனநாயகம் என்றுதான், ஆதியிலும் சரி, ராஜீய முறையிலும் சரி, வியாக்யானம் செய்யப்பட்டிருக்கிறது. சமூகத்தின் அபிப்பிராயம் ஏகோபித்த அபிப்பிராய மாகவோ, மெஜாரிட்டி அபிப்பிராயமாகவோ இருக்க வேண்டும் என்பதுதான் இதன் பொருள். யோக்கியதை யுள்ள பிரஜைகளில் பெரும்பான்மையோரின் விருப்பப்படி நடைபெறும் அரசியல்முறைதான் ஜனநாயகம் என்று பிரைஸ் கூறுகிறுர். முக்கால்வாசிப் பிரஜைகளாவது அத்தகைய யோக்கியதை பெற்றவர்களாக இருக்க வேண்டுமென்பது அவரது கருத்து. பிரஜைகளின் பலா பலம், ஏறக்குறைய அவர்களுடைய வோட் பலத்துக்குச் சரிசமமாய் இருக்கவேண்டுமென்பது இதன் பொதுப்படை யான கருத்து.10 இது அநாவசியமான யதேச்சைக் கருத் துத்தான் என்று தோன்றுகிறது. இது ராஜீய அல்லது மனோதத்துவ முடிபு அல்ல; . மொழி யாராய்ச்சியின் விளைவுதான் எனத் தோன்றுகிறது. ஜனநாயகம் ஏற்பட வேண்டுமானல், எல்லாப் பிரஜைகளுக்கும் ஆள்வதற்கு வேண்டிய யோக்கியதை வேண்டுமென்பதோ, அல்லது அத்தகைய யோக்கியதை யுள்ள எல்லோரும் வோட்டுச் செய்யவேண்டு மென்பதோ அவசியமில்லை. இதை ஒப்புக்கொண்டு விட்டால், பெரும்பான்மையோர் சர்க் காரை நடத்துவதே ஜனநாயகத்துக்குப் போதுமானது என்று ஏற்பட்டுவிடும். வயதுவந்த எல்லா மக்களுக்கும் வோட்டுரிமை அளிக்க வேண்டியதும் ஜனநாயகத்துக்கு அவசியமான நிபந்தனை யென்று விதிப்பது, எண்ணிக் கையைப் பொறுத்த வரையில் சிறப்பான ஜனநாயகமா யிருந்த போதிலும், அமிதமானதாகவே இருக்கும். சமூகத்திலுள்ள எல்லா வகுப்பினரும் பிரிவினரும் ஜன

10 "நவீன ஜனநாயகங்கள்"—பிரைஸ் 1929.

நாயகம் இருப்பதாக நம்பக்கூடியவாறு அவற்றில் போதிய அளவுக்கு யோக்கியதாம்சங்களைப் பெற்றவர்கள் இருந்தால், தன்மை, மனோபாவம் ஆகிய இரண்டையும் பொறுத்தவரையில் ஜனநாயகம் இருப்பதாகவே கூறலாம். தேசத்திலுள்ள பல அந்தஸ்தினரின் அபிப்பிராயங்களையும் பிரதிபலிக்கும் அளவுக்கு அது விரிவானதாய் இருப்பதாகவே கூறலாம். எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு மதிப்பிடும் ஜனநாயகம் எவ்வளவு தூரத்துக்கு உண்மையானதோ, அதே அளவுக்கு இதுவும் உண்மைதான். இரண்டின் நிர்ப்பந்தங்களும் விலக்குகளும் ஒரே மாதிரியானவை. எந்தத் தேசத்திலும் மொத்த மக்களில் முக்கால் பங்கினர் வோட்டுரிமை பெற்றிருப்பது அரிது. இங்கிலாந்து உட்படப் பல தேசங்களில் சமீப காலம்வரை மாதர்களுக்கு வோட்டுரிமை மறுக்கப்பட்டிருந்தது. யுக்த வயதை அடையவில்லை யென்றோ, வேறு காரணங்களுக்காகவோ, வோட்டுரிமை இல்லாதவர்களின் வீதாசாரம் ஒவ்வொரு சமுகத்திலும் அதிகமாகவேயிருக்கும். 20 அல்லது 30 கோடி போன்ற எண்ணிக்கையில் மக்கள் வசிக்காத தேசங்களில் யுக்த வயது வந்த எல்லோருக்கும் வோட்டுரிமை அளிக்கவேண்டுமென்ற கோரிக்கை உசிதமற்றதெனச் சொல்வதற்கில்லை. ஆனால், பெரிய கண்டங்களைப் போன்ற விஸ்தீரணமும், கட்டுக்கடங்காத ஜனசக்தியையு முள்ள தேசங்களில் ஜனநாயகம் ஏற்படுவதற்கு, பாதிப் பேருக்குமேல் வோட்டுரிமை இருக்க வேண்டியது அவசியமெனத் தோன்றவில்லை. இந்தியாவில் இப்பொழுது வோட்டர்களின் தொகை வோட்டுரிமை பெறக் கூடியவர்களின் எண்ணிக்கையில் பாதியைவிட ரொம்பக் குறைவாகவே இருக்கிறது. மூன்று கோடிப் பிரஜைகளுக்கு வோட்டுரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. மக்களில் எல்லா வகுப்பினருக்கும் வோட்டர் ஜாப்தாவில் நியாயமான பிரதிநிதித்வம் கிடைத்திருப்பதாக எடுத்துக் கொள்ளலாம். எனவே, மாகாணங்களில் இப்பொழுது வோட்டுரிமை பெற்றிருக்கும் வீதாசாரம் ஜனநாயகமாகிறதென்று கருதுவது தவறாகாது. ஆனால் வோட்டுரிமை விரிவாக

விஸ்தரிக்கப்படும்வரை இது குறைபாடுகள் உள்ளது தான் என்று கருதவேண்டியிருக்கும்.

ஜனநாயகம் என்ருல் மக்களின் ஆதிபத்யம் என்று பொருள்படும். ஆனுல் அதன் அஸ்திவாரங்கள் சுதந்திரம், சமத்துவம்—என்ற இரண்டுமாக இராவிடில் அது ஜனநாயகமாகாது. சிறந்த ஜனநாயகம் என்ருல், அதன் அடிப்படையானது, சலுகையாக இராமல் நியாயமாக இருக்க வேண்டும். அதன்கீழ் அதிகாரமும் பொறுப்புகளும் சுதந்திரமும் எல்லோரின் பங்காகவுமிருக்க வேண்டும்.

இரு வகை ஜனநாயகங்கள்

ஜனநாயகத்தில் இரண்டு விதங்களுண்டு: (1) நேரடியானது, (2) மறைமுகமானது அல்லது பிரதிநிதித்வமுள்ளது. பிரஜைகள் எல்லோரும் ஒன்ருகச் சேர்ந்து அரசியல் அதிகாரத்தைச் சட்டப்படி செலுத்துவதுதான் நேரடியான ஜனநாயகம். சட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ள முறைகளின்படி ஜனங்கள் தேர்ந்தெடுக்கும் பிரதிநிதிகளிடம் சர்க்காரை ஒப்படைப்பதுதான் இரண்டாவது தினுசு.

கிரீஸிலிருந்த நகர ராஜாங்கங்கள் (City - States) போன்ற மிகக் குறைந்த ஜனத் தொகையுள்ள தேசத்தில் தான் நேரடியான ஜனநாயகம் சாத்தியமாகும். இன்றைய உலகிலுள்ள பெரிய தேசங்களில் இது அனுபவ சாத்தியமல்ல. பொது விவகாரங்களிலும், சர்க்காரின் முடிவுகளை நிர்ணயிப்பதிலும் ஒவ்வொரு பிரஜையும் தானே நேரில் பங்கெடுத்துக் கொள்ளும் ஆட்சி முறையில் ஒரு லட்சம் கூடப் பெரிய எண்ணிக்கையென்று அரிஸ்டாடில் கூறியிருக்கிருர். ஒவ்வொரு பிரஜையும் சர்க்காரில் சம அளவுக்கு மற்றவர்களைப் போலவே பங்கை அனுபவிக்க வேண்டுமென்று கோருவது பெரிய பொதுக் கூட்டங்களின் மூலம் சர்க்காரை நடத்துவதாகும். இது கட்டாயம் அராஜகத்திலோ, அல்லது சர்வாதிகாரத்திலோ தான் கொண்டுபோய் விடும். ஸ்விட்ஜெர்லாந்தில்

இரண்டு வகைகளும் கலந்த ஒரு முறை இருந்து வருகிறது. ஆனால், இக்காலத்தில் மிகச் சிறந்த ஜனநாயகத்துக்கு அதை உதாரணமாகக் காட்ட முடியாது.

பிரதிநிதித்வ ஜனநாயகத்திலும் இரண்டு விதங்கள் உண்டு: (1) இங்கிலீஷ் முறை, (2) அமெரிக்க முறை. இங்கிலீஷ் முறை பார்லிமெண்டெரி அல்லது பொறுப்புள்ள சர்க்கார் எனப் படுவது. ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்படும் ஒரு சட்டசபை, தேசத்தின் தலைவரால் நியமிக்கப்படும் ஒரு மந்திரி சபை—இரண்டும் இந்த வகை-சர்க்காருக்கு இன்றியமையாதவை. சட்டசபையில் பெரும்பான்மையோரின் நம்பிக்கையைப் பெற்றிருக்கும் வரையில் —அதாவது சட்டசபைக்கு ஜவாப்தாரியா யிருக்கும் வரையில் தான்—மந்திரி சபை பதவியை வகிக்கலாம். அமெரிக்க முறையில் அவ்வப்பொழுது தேர்ந்தெடுக்கப்படும் பிரதம நிர்வாகஸ்தருமுண்டு. சட்டசபை எதிராக வோட்டு செய்து அந்த நிர்வாகஸ்தரைச் சாதாரணமாய் அகற்றிவிட முடியாது.

உரிமையைக் காக்க மக்களின் தயக்கம்

ஜனநாயக லட்சியம் எல்லாத் தேசங்களிலும் கைகூடுவதற்கு நீண்ட கால தாமதம் ஏற்பட்டது. அது மிகவும் திறமையான ஆட்சி முறையாக இல்லாமல் மிகச் சிறந்த ஆட்சி முறை யென்று இறுதியாக அனுஷ்டானத்தில் வந்துவிட்டது. இதற்குக் காரணம் அது மனிதனுடைய மனோதத்வத்தில் அழிக்கமுடியாதபடி வேர் விட்டுக் கொண்டிருப்பதுதான். அது பூர்ணமாய்ப் பரிணமிப்பதற்கு இடையூறுன முட்டுக் கட்டைகள் எப்பொழுதுமே எண்ணற்றவையாயிருந்திருக்கின்றன. மன்னர்களின் தெய்விக உரிமைகளுக்குப் பதிலாக, விட்டுக்கொடுக்க முடியாத ஜனநாயக உரிமையை நிலைநாட்டுவதில் மனித சமூகம் எக்காலத்திலும் தயங்கியே நடவடிக்கை எடுத்து வந்திருக்கிறது. இந்த ஆச்சரியத்தை இந்தப் போராட்டத்தின் சரித்திரத்தில் கண்டு வியப்படைகிறோம். மனித வர்க்கத்தின் சந்தோஷத்தையும் சுதந்திரங்களையும் உத்தரவாதம்

செய்வது ஜனநாயக ஆட்சி முறை ஒன்றினுல்தான் சாத்தியம். ஆனுல் இதற்குச் சரியான அங்கீகாரம் கிடைத்ததில்லே. இதற்கான முக்கிய காரணங்கள் (1) பிரத்தியட்ச அனுபவத்தில் ஒரு சிலரிடம் அதிகாரத்தை ஒப்படைக்கவேண்டிய அவசிய மேற்படுவதும், (2) மனிதர் களுக்குச் சுபாவமாயுள்ள கீழ்ப்படியும் வழக்கமுந்தான் என்று இறுதியாக ஏற்படுகிறது.

எத்தனேயோ தினுசான ஜனநாயக ஏற்பாடுகள் உள்ளன. ஒரு நவீன சர்க்காரின் அனுபவ சாத்தியமான பலவேறு தேவைகளே அனுசரித்து ஜனநாயக லட்சியத் துக்கு ஏற்றவாறு அவற்றை உருவாக்கி (இரண்டு பெரிய ஸர்வாதிகாரங்கள் தோன்றியவரை) முதல் ஸ்தானத்தை வகித்துப் பெரிய வெற்றியடைந்தவை, பிரிட்டிஷ், அமெ ரிக்க ஜனநாயக முறைகள் தாம். சோவியத் ஆட்சி முறை சமீப காலத்தில், ஒரு சோஷலிஸ்ட் ஜனநாயகப் பாதையில் திருத்தப்பட் டிருக்கிறது. ஆனுல் அது ஏற்பட்டு இன்னும் ஒரு தலேமுறையாகவில்லே. எனவே, அதன் திறன் இனி மேல்தான் நிரூபிக்கப்படவேண்டும். என்னவாயினும், அது முற்றிலும் வேறுவிதமான பொருளாதார அமைப் புள்ள சமுதாயத்தை அஸ்திவாரமாகக் கொண்டிருக் கிறது. சாதாரண ஜனநாயக முறைகளேப் பற்றித்தான் இங்கே கவனிக்கிருேம். ஸோவியத் முறையை இவைக ளுடன் சேர்க்க முடியாது.

சம்சயங்களும் பீதியும்

ஜனநாயக லட்சியத்தைப் போற்றும் நாடுகளில், அதைப் பற்றிய அவநம்பிக்கை கூடவே இருந்துவரும் போக்கு அடிக்கடி தென்படுவது, குறிப்பிடத்தக்க அம்ச மாகும். அரசியல் திட்டங்களேத் தயாரிப்போரிடமும், ஜனநாயகத் தலேவர்களிடமும் இதைக் காணலாம். அதன் வேகத்தைக் குறைக்கவோ, அல்லது அதிகாரத் தைக் கட்டுப்படுத்தவோ தடைகளும் விதிகளும் இருப் பதே இந்தச் சம்சயத்துக்குப் போதிய உதாரணமாகும். இந்த எண்ணத்துடன்தான் வேண்டுமென்றே இரண்

டாவது சட்ட சபையைத் தோற்றுவித்திருக்கிறார்கள்; அல்லது வைத்துக்கொண் டிருக்கிறார்கள். சட்டசபைகளில் நிறைவேற்றப்படும் சட்டங்களைத்தான் கட்டாயமாய் அமல் நடத்தியாகவேண்டுமே ஒழிய, அதன் தீர்மானங்களுக்குப் பொதுப்படையாக அந்த அந்தஸ்து கிடையாது. பிரதிநிதித்வ முறையும் ஜனநாயக லட்சியத்தில் விசித்திரமான அவநம்பிக்கையை ஆங்காங்குக் காட்டுகிறது. கட்சி அனுகூலங்களைப் பெறவோ, நிர்வாக அசௌகரியங்களைக் குறைக்கவோ, இத்தகைய முறைகள் அனுஷ்டிக்கப்படுகின்றன. பச்சையாகச் சொன்னால், மாறுதல் வந்துவிடுமோ என்ற பயத்தினின்றே இவை யெல்லாம் எழுகின்றன.

ஸர்வாதிகாரங்கள் தோன்றியதேன்?

ஜனநாயகங்களின் படுதோல்வியை உலகெங்கும் சர்வாதிகாரங்களின் தோற்றம் எடுத்துக் காட்டுகிறது. ஆனால் தோல்வியுற்றவை ஜனநாயக நாடுகளில் இன்று இருந்துவரும் ராஜீய முறைகளே ஒழிய, ஜனநாயக லட்சியம் அல்ல. நடைமுறையில் பூர்ணமாய் அவலம்பிக்கப்படாத இடங்களிலும், திடநம்பிக்கையும் உத்ஸாகமும் இல்லாமல் நடத்தப்பட்ட இடங்களிலுமே ஜனநாயகம் கவிழ்ந்துவிட்டது. இம்மாதிரி ஏற்பட்டதற்கு மூன்று காரணங்கள் உண்டு.

முதலாவதாக, ஜனநாயகங்கள் உண்மையான ஜனப் பிரதிநிதி சர்க்கார்களாயிராமல் கட்சி-சர்க்கார்களாகவே இருந்து வந்திருக்கின்றன. அதன் உடனடியாயுள்ள சீர்கேடுகள் மலிந்து இறுதியாக ஏமாற்றத்தை அளிக்கின்றன.

இரண்டாவதாக, இன்று காணப்படும் பொறுப்பாட்சி முறை கடுமையான அல்லது நீடித்த அந்நிய ஆபத்தையோ அல்லது முதல்தரமான ஒரு உள்நாட்டு நெருக்கடியையோ சமாளிக்கக் கூடியதாயில்லை.

மூன்றுவதாக; ஆரம்பத்தில் ஸ்தாபிதமான பிரதி நிதித்வ சர்க்கார் யந்திரம், ரொம்பவும் குறைபாடுகள் நிறைந்ததாகவும், மாறி வரும் பொருளாதாரத் தேவை களுக்கும், தொழில், வர்த்தகம், வேலைப் பிரச்னை முதலிய வைக்கும் ஏற்றவாறு வளைந்து கொடுக்கக்கூடாததாகவும் இருந்து வந்திருக்கிறது. பாதிக்கப்பட்ட மக்களின் மனப் பான்மையில் புரட்சிகரமான மாறுதல்களை ஏற்படுத்த முடிந்திருந்தா லொழிய, ஸர்வாதிகாரங்கள் தோன்றி யிருக்க முடியாது, அல்லது இன்று காணப்படுவதுபோல் வெற்றியின் உச்சியை அடைந்திருக்கவும் முடியாது. சென்ற மகாயுத்தமும், அதன் விளைவுகளும் ஜனங்களுடைய மனத்தில் விரிவான நீண்டகால மாறுதலை ஏற்படுத்தி யிருக்க வேண்டும். தொடர்ச்சியாக இருந்துவந்த பொரு ளாதாரக் கஷ்டம், அவமானமான ஜாதியப் பாகுபாடுகள், பலாத்காரத்துடன் கூடிய ராஜீயக் கலகங்கள் முதலியவை மகாயுத்தத்துக்கு முன் இருந்த ராஜீய ஸ்தாபனங்களின் திறமையிலும், அவற்றின் நடைமுறை வேலையிலும் பழைய கோஷங்களிலும், வரவர அதிகமான அவநம்பிக்கையை உலகின் பல பாகங்களில் மக்களுக்கு விளைவித்துவிட்டன. பரஸ்பர வசைகளும் விரிவான வெறிக்குணமும் நிறைந்த இச்சகாப்தத்தில் எங்கும் சமூகத் தலைவர்கள்கூடக் குப் புறக் கவிழ்ந்து விட்டனர். எனவே, ஐரோப்பிய ராஜீய முறைகள் அளவுகடந்த தொல்லைகளுக்கும் கஷ்டங் களுக்கும் உட்படவேண்டி நேரிட்டதாலும், அமலிலிருந்து வந்த ஜனநாயக அரசியல் தத்துவங்களைப் பல குறை பாடுகள் அரித்துவிட்டதாலும், புதிய ஸர்வாதிகாரங்கள் தோன்றி வளரலாயின. தேசம், ஜாதியம்—இரண்டின் மர்மமான, இன்றியமையாத, கோரிக்கைகளை அங்கீகரிக்க மறுத்துவிட்டதே ஸர்வாதிகாரங்கள் ஏற்பட்டதற்கு இன்னும் முக்கியமான காரணம் என்று கூறலாம். ஜன நாயக பந்தங்களைவிட ஜாதிய, தேசிய பந்தங்கள் முக்கிய மாக முதலிடம் பெறுவன. ஜனநாயகமின்றி ஒரு மக்கள் வாழமுடியும்; ஆனல் திட நம்பிக்கையுள்ள சமாதான பக்தர்களோ அல்லது விக்ஞானிகளோ மனித சாஸ்திர ஆராய்ச்சியிலிருந்து எவ்வளவுதான் ஜாதியத்தைப் புறக்

கணித்தபோதிலும் ஜாதீய நம்பிக்கையில்லாமல் உயிர் வாழ்வது முடியாது. இத்தாலி, ஜெர்மனி—இரண்டு தேசங்களிலுமுள்ள சர்வாதிகாரங்கள் அந்நாட்டு மக்களில் பெரும்பான்மையோரின் சுறுசுறுப்பான நல்லெண்ணமில்லாமல், அவ்வளவு பிரமிக்கத் தக்க வெற்றிகளை அடைந்திருக்க முடியாது. வேண்டாத மக்கள்மீது அங்கே ஸர்வாதிகார ஆட்சிகளைத் திணித்து, அவற்றைப் பலாத்காரத்தைக் கொண்டு நிலை நிறுத்திவரவில்லை என்பதைப் பாரபட்சமற்ற விவகார கர்த்தாக்கள் ஒப்புக்கொண்டுள்ளனர். அதற்கு மாறுபட்ட அபிப்பிராயம் இருந்துவருவதன் காரணம் சிரத்தையுள்ளோர் வேண்டுமென்றேயோ, அல்லது தங்களையு மறியாமல் பாரபட்சமாகவோ செய்யும் பிரசாரந்தான். உலகத்தின் எல்லாப் பாகங்களிலும் ஏராளமான மக்கள் ஸர்வாதிகாரங்களை ஒப்புக்கொண்டிருப்பதால், நாகரிக மனிதன் ஜனநாயக லட்சியத்தில் நம்பிக்கையிழந்துவிட்டதாகவோ, அல்லது யதேச்சாதிபத்தியத்திலும் அடிமை வாழ்விலும் அவனுக்கு விபரீதமான ஒரு புதிய அன்பு பிறந்துவிட்டதென்றோ, நினைத்துவிட வேண்டியதில்லை. மிகவும் அபாயகரமான போர் ஏற்படாமல் தவிர்க்கவும், தேசிய அவமானமென்ற படுகுழியிலிருந்து புதிய ஊக்கத்துடன் வெளிவரவும், மக்கள் தாங்களாகவோ அல்லது தியாகஞ்செய்து கஷ்டப்பட்டு ஸ்தாபித்த பிறருடைய செயலுக்கு உட்பட்டோ, தலைவணங்கும் தாற்காலிக ஏற்பாடுகளாகத்தான் இந்த ஸர்வாதிகாரங்கள் இருக்க முடியும். ஆனால் இந்த விபரீதமான அரசியல் முறைகள், அவை அமலில் இருக்குங்காலையில் ஈவிரக்க மற்ற சுரண்டலும், ஆக்கிரமிப்பும் நிறைந்தனவாயிருப்பதுடன், உலக சமாதானம், சுதந்திரம், ஜனநாயகம், விரிவான நாகரிகம், கலாசாரம் முதலியவற்றிற்கு நிரந்தரமான பேராபத்தாயிருப்பதையும் காண்கிறோம். இந்த ஒரு வியாக்கியானந்தான் நியாயவாதங் கொண்டதெனத் தோன்றுகிறது. எனவே பழைய ஜனநாயகங்கள் கவிழ்ந்து விட்டதற்குக் காரணமாயிருந்த கோளாறுகளைப் புதிய ஜனநாயகம் ஆழ்ந்து

கவனித்து, ஜனப் பிரதிநிதித்வ முறையில் நடைபெறும் சர்க்கார் அமைப்பை வேறு விதத்தில் மாற்றி யமைக்க வேண்டியது அவசியம்.

சுய ஆட்சியும் நல்லாட்சியும்

நல்லாட்சி சுய ஆட்சியாகாது என்பது உண்மை. ஆயினும், சுய ஆட்சியானது நல்லாட்சியாக இருக்க வேண்டுமென்பதும் உண்மைதான். கட்டுப்பாட்டை ஒப்புக் கொண்டு நடந்து கொள்வதன்மூலமே நல்லாட்சியை உத்தரவாதமாகப் பெறலாம். இதுவே சுய ஆட்சியை ஏற்படுத்துவதற்கான காரணங்களில் ஒன்று. முடியாட்சி, ஒரு சிலரின் துரைத்தன முறை, இதர அரசியலமைப்புகள் முதலியவற்ருல் நல்லாட்சி ஏற்படவில்லை யென்பதா லேயே அவை கைவிடப்பட்டன. அவை யெல்லாம் யதேச்சாதிகாரத்திலேயேதான் கொண்டுபோய் விட்டிருக் கின்றன. சிற்சில சந்தர்ப்பங்களில் யதேச்சாதிகாரம் அனுகூலமானதாகவும், பரிசுத்தமானதாகவுங் கூட இருந் திருக்கக் கூடும். ஆனுல் ஜனநாயகங்களில்தான் சுதந்திர மும் நியாயமும், தேசம், மக்கள் இரண்டின் க்ஷேமலாபங் களும் சிறப்பாகப் பாதுகாக்கப்படுகின்றன. சுயமரியாதை யும், மற்றவர்களால் ஆளப்படுவதற்குள்ள தயக்கமுந் தான் சுய ஆட்சிக்கு ஊற்றுப் போன்றவை. ஆனுல் இறுதி யாகப் பார்க்குமிடத்து, கட்சி-சர்க்கார் மூலம் ஜனநாயகம் அமலில் இருக்கு மிடங்களில், ஒரு சிலரின் ஆட்சி உண்மை யில் அகற்றப் படுவதில்லை; ஆனுல், இது நல்லாட்சியின் தேவைகளுக்கும், தனிப்பட்ட பிரஜைகளின் சுதந்திரத் துக்கும் சுயமரியாதைக்கும் அதிக பக்ஷ சமரஸ ஏற்பாடாக இருப்பதன் காரணமாக அது நியாயமெனப் புலப்படு கிறது. ஆகவே ஜனநாயகத்தின் கட்டுப்பாடு செல்லத் தக்க தென்று ஜனங்கள் ஒப்புக்கொள்வதற்கு, அது வெளித் தோற்றத்திலும் அலங்காரத்திலும் மட்டும் ஜனநாயக மாக இராமல், இரண்டாவது கோட்பாடாகிய நல்லாட்சி யாகவும் இருக்க வேண்டும். ஜனநாயகப் பிரச்னைகளை அந்த நோக்குடன் கவனித்துத் தீர்க்க வேண்டும்.

பிரதிநிதிகளும் வோட்டர்களும்

ஜனங்கள் மிகுதியாயுள்ள விஸ்தாரமான பிரதிநிதித்வ ஜனநாயக ஆட்சி முறையில் பல குறைகள் இருக்கத்தான் செய்யும் என்பதை முதலில் ஒப்புக்கொண்டாக வேண்டியிருக்கிறது. பிரதிநிதிகளைச் சட்டசபைக்குத் தேர்ந்தெடுத்து அனுப்புவது, நிர்வாகிகளைப் பொறுக்கியெடுப்பது, சில அபூர்வமான சந்தர்ப்பங்களில் ஸர்வ ஜன வாக்கு எடுப்பது (Referendum), ஜனங்களே சட்டமியற்ற ஆரம்ப உரிமைகளைப் பெற்றிருப்பது (Initiative), பிரதிநிதிகளை வாபஸ் பெறுவது (Recall) போன்ற அனுபவ சாத்தியமான முறைகளின் மூலந்தான் ஜனங்கள் தங்களுடைய அதிகாரத்தைச் செலுத்துகிறார்கள்.

சட்டசபைக்குப் பிரதிநிதிகளைக் குறிப்பிட்ட இடைவெளிக்குப் பிறகுதான் தேர்ந்தெடுக்கிறார்கள். ஆகையால், பிரதிநிதிகள்மீது ஜனங்களுக்குச் சுறுசுறுப்பான, தொடர்ச்சியான, ஆதிக்கம் இருந்து வருகிறதென்று, விவகார ரீதியில் மட்டுமே சொல்லலாம். வோட்டர்கள் விஷய மறிந்தவர்கள் என்றும், பிரதிநிதிகளின் தேர்தலில் சுயபுத்தியுடன் நடந்து கொள்ளக் கூடியவர்களென்றும், சட்டசபையில் அவர்களுடைய நடத்தையை இடைவிடாமல் கவனித்து வருகிறார்கள் என்றும் நினைத்துக் கொள்வது உண்மையல்ல. உண்மையாயிருக்கையில் அதற்கும் பெரிய விலக்குகள் இருக்கும். இந்தியாவைப் போல் ஜனங்கள் கல்வி யறிவு அதிக மில்லாதவர்களாக இருக்கும் தேசங்களில் இது சாத்தியமில்லை. பிரதிநிதிகள் பல காரணங்களுக்காகத் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள். சாமர்த்தியமும் நேர்மையு முள்ள ஒரு அபேட்சகர் வோட்டர்களுக்கு ஆத்திர மூட்டி விடலாம். லாயக்கற்ற ஒருவர் அவர்களைத் தட்டிக் கொடுத்து ஆசைப் பேச்சுப் பேசி மயக்கி விடலாம். கட்சி முறை அமலில் இருக்குமிடங்களில் அபேட்சகர்களைத் தொகுதிகளில்லாமல் கட்சிகளே பொறுக்கி யெடுத்து விடுகின்றன. அபேட்சகரின் குறைபாடுகளையும், முன்னால் செய்யத் தவறியவைகளையும் வோட்டர்கள் மன்னித்து விடும்படிச் செய்வதற்காகப்

பிரசாரமும், நல்லது, கெட்டது, இரண்டுங்கெட்டான் போன்ற எல்லாத் தினுசான செல்வாக்குகளும் உபயோகிக்கப்படுகின்றன. அமிதமான வாக்குறுதிகள், நம்பிக்கையை உண்டு பண்ணக்கூடிய அல்லது ஹாஸ்ய மான ஒரு பிரசங்கம், அல்லது ஆபாசமான வசைமொழிகள் நிறைந்த ஒரு சொற்பொழிவு போன்றவை அநேகமாய் ஜனக் கூட்டத்தின் மனத்தைக் கவர்ந்து விடும். எந்தக் குறிப்பிட்ட தேர்தலிலும் பெரும்பான்மை வோட்டர்கள் தாமாகவே சரியான முடிவுக்கு வந்து அதன்படி வோட்டுச் செய்கிறுர்கள் என்று சொல்வதற்கில்லை. சுறுசுறுப் பாக விஷய மறிந்த பத்திரிகைகள் ஜனநாயகத்திற்குச் செய்யக்கூடிய வெகுவெகு முக்கியமான சேவையை மிகைபடுத்திக் கூறவே முடியாது. வோட்டர்களில் பெரிய விதாசாரத்துக்குக் கல்வியும், பத்திரிகை படிக்கும் வழக்கமும் இருந்தால், பிரதிநிதிகளின் வேலையையும் அவ ருடைய கட்சியின் வேலையையும்பற்றிச் சரியான முடிவுக்கு வருவதற்கு வேண்டிய வசதிகள் இருந்து வரும். தவிர, அடிக்கடி அபேட்சகரின் குட்டுகளை வெளிப்படுத்திச் சந்திக்கு இழுத்து விடும் வழக்கமும் உண்டு. தேர்தலில் போட்டி யிருந்தால், தோஷங்களும் குறைகளும் பரஸ் பரம் வெகுவாக மிகைபடுத்திக் காண்பிக்கப் படுவதுடன், சிற்சில சமயங்களில் சிருஷ்டிக்கவும் படுகின்றன.

கட்சிகள் போட்டா போட்டியாக வோட்டர்களின் முன் சமர்ப்பிக்கும் கொள்கைகளைப் பார்க்கு மிடத்து, சரியான முடிவுக்கு வர அவை போதியவையா யிராதது புலனுகும். இது தான் ஜனநாயகத்திலுள்ள உண்மை யான பலக்குறைவு. ஜனப் பிரதிநிதிகள் மீண்டும் மீண்டும் அபேட்சகர்களாய் நிற்க விரும்புவதால் தேர்தலுக்கு முன் போலவே பிறகுங்கூட அவர்க ளுடன் தொடர்பு வைத்துக்கொள்ளவேண்டி யிருக்கிறது. ஆனுல் இம்மாதிரித் தொடர்பு வைத்துக் கொள்வதும், தொகுதியிலுள்ள வாக்காளர்கள் அவர்களுடைய வேலே களைப் பற்றிக் குணதோஷம் சொல்வதும் காரியாம்சத்தில் பயன் தருவதில்லை யென்பது அனுபவ பூர்வமாகத் தெரிந்த

விஷயம். குற்றங் குறைகளுக்கு ஏதாவது சமாதானங்களை எப்பொழுதும் சொல்ல முடியும். மனிதனுக்குச் சுபாவமாயுள்ள சபலங்கள், அவசர நிமித்தம் செய்யப்படுபவை, கட்சியைப் பலவீனப்படுத்தக் கூடாதென்ற பயம் — இவற்றின் காரணமாக ஜனங்களுடன் தொடர்பும், அவர்களுடைய குணதோஷ விமரிசனமும் இருந்து வருகின்றன என்ற பந்தோபஸ்து வியர்த்தமாய் விடுகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட, நிர்வாக அதிகாரியாயில்லாத, ஜனப்பிரதிநிதி தொகுதியின் நம்பிக்கையை இழந்து விட்டால், அவரை வாபஸ் பெற்று விடும் அதிகாரம் போதிய அளவுக்கு இருக்கவில்லை.12 இருக்குமிடங்களில் கூட அது பிரயோகிக்கப்படுவது துர்லபம். மிகவும் மோசமான பேர்களின் விஷயத்தில் உபயோகிக்க வேண்டிய அசாதாரண ஏற்பாடாகவே அது இருந்து வருகிறது. வோட்டர்கள் சாதாரண முறையில் பிரதிநிதிகள்மீது ஆதிக்கம் செலுத்த இது பயனற்றது.

மிகச் சிறந்த அபேட்சகர்கள் கிடைக்காததேன்?

பெரும் பான்மைத் தொகுதிகளில் மிகச் சிறந்த நபர்கள் எல்லாத் தொகுதிகளிலும் வெற்றி பெருதது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கு இப்பொழுது அனுஷ்டானத்திலிருந்து வரும் முறையில் ஒரு பெரிய குறைபாடாகும். சில தொகுதிகள் மிகச் சிறந்த குணமும், யோக்கியதையு முள்ளவர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்புவது வாஸ்தவம். ஆனுல் பலவற்றில்—ஒருகால் பெரும் பான்மைத் தொகுதிகளில் — சிறந்த நபர்கள் தேர்ந்தெடுக்கப் படாததைக் காணலாம். தேர்தல் முறையே இதற்கு ஏகதேச காரணம் என்று சொல்வதற்கில்லை. சுயநலம், சோம்பல், இதர ஆசைகள் அல்லது ஜோலிகள் முதலியவற்றினுல், தகுதி வாய்ந்த, அனுபவம் மிகுந்த பலர் வோட்டர்களின் ஆதரவைப் பெற முன் வராமலிருந்து விடுகிருர்கள் என்பது ஓரளவுக்கு உண்மை

---

12 பிரைஸ். 2-162.

யாகும். தேர்தலில் தோல்விப் பயத்தையும், வளர்ந்து வரும் செலவையும், நிச்சயமாயுள்ள தொந்தரவையும் ஏற்றுக்கொள்ள எப்பொழுதுமே ஒருவன் தயாராயிருக்க மாட்டான். ராஜீய ஆசைகள் அல்லது தேச பக்தியுடன் கூடிய கடமைகள் உள்ளவர்கள்கூட அதற்கு வேண்டிய திடத்தை எப்பொழுதுமே உள்ளவர்களாக இருக்க முடியாது. இந்தக் காரணங்களை யெல்லாம் நீக்கிப் பார்த்தாலும், எஞ்சியுள்ளவற்றிற்குக் காரணங் காட்டியாகவேண்டி யிருக்கும். ஒரு மனிதன் தேர்தலில் தோல்விக்கும், தேர்தல் 'யோகத்தின்' கவலைகளுக்கும் உட்படத் தயாராயிருக்கலாம்; ஆனால், சூழ்ச்சியைச் சமாளிக்க எதிர்ச் சூழ்ச்சி செய்யவும், நிறைவேற்றக் கூடாதவைகளை வாக்களிக்கவோ, வோட்டர்களை மயக்கவோ, ஏமாற்றவோ, அல்லது தன் கொள்கைகளை எக்காலத்திலும் சமய சஞ்சீவியாக மாற்றிக்கொள்ளக் கூடிய நிலைமையில் வைத்திருக்கவோ சம்மதிக்காமலிருக்கலாம். "ஜனநாயக யந்திரத்தில் பிணைந்து கொண்டு அதன் விளைவான சிரமங்களுக்குத் தயாரா யிருந்தாலொழியத் திறமையும் யோக்கியதையும் மட்டும் ஒருவனைச் சரியான பிரதிநிதியாக்கி விடமாட்டா" என்ற சுருக்கமான, ஆனால் முற்றிலும் அதிருப்திகரமான— பதிலைச் சொல்லி விடலாம்.

"பிரஜைகளில் சத்தியமும் திறமையும் மிகுதியாயுள்ளோரிடையே யிருந்து தேசப் பணிக்குப் போதிய அளவுக்கு ஆட்களை ஜனநாயகம் பெறவே யில்லை"13 என்று பிரைஸ் கூறி யிருக்கிறார். திறமை, அனுபவம் யோக்கியதை இவற்றை ஜனநாயகத்தின் சேவைக்கும் பிணைத்துக் கொள்வதன் அவசியத்தை இப்போதைய தேர்தல் முறைகள் போதிய அளவுக்கு அங்கீகரிக்கவில்லை யென்பதை, மொத்தமாகப் பார்க்குமிடத்து, ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். கல்வியறிவுடன் கூடிய, கட்சி பேதமில்லாத ஜனநாயகம் ஒன்றுதான் இப்போதைய ஏற்பாட்டிலுள்ள இந்த மற்றக் குறைபாடுகளுக்கு ஒரே பரிகாரமாகும்.

13 பிரைஸ். 2-617.

அவசியமான வரையறைகள்

கட்சி முறையைத் திருத்தியமைப்பதாலோ அல்லது ஒழித்து விடுவதாலோ இன்னும் சரியான ஜனநாயக முறை ஏற்பட்டு அமல் நடக்கலாமாயினும், இரண்டு தடவைகளுக்கு மேல் எந்த மனிதனும் மக்களின் பிரதிநிதியாக இருக்க உரிமையில்லை என்று நிர்ணயித்து விடுவது அவசியமெனத் தோன்றுகிறது. அதாவது, ஒரு சட்டசபையில் பிரதிநிதியா யிருப்பவர் அந்தச் சட்ட சபையிலோ அல்லது வேறு சட்ட சபைக்கோ இன்னும் ஒரு முறைதான் தேர்ந்தெடுக்கப்படலாமென்று இருக்க வேண்டும். ஒரே நபர் தொடர்ந்தாற்போல் பிரதிநிதியாக இருந்து வருவது ஜனநாயகத்துக்கு அத்தியாவசியமான தேவையல்ல. ஒரு குறிப்பிட்ட திறமைக்கும், யோக்கியதைக்கும் குறையாமல், நபர்களை மாற்றுவதன் மூலம் அதிக பலம்பெற்ற, உண்மையான ஊக்கம் மிகுந்த பிரதிநிதித்வந்தான் இன்றியமையாதது. இந்த நிபந்தனையிருந்தால், பொறுப்புணர்ச்சியை மங்கவைத்து ஒரே பாதையில் விவகாரங்கள் போவதற்குக் காரணமாயுள்ள பழமை தடுக்கப்படும். இரண்டு தடவைகளுக்கு மேல் யாரும் அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஜனாதிபதி (பிரெஸிடெண்ட்) பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படலாகாது என்று இருந்து வருவதுபோன்ற சம்பிரதாயம் புத்திசாலித்தனமானது. நிர்வாகிகளின் உத்தியோக காலத்தைக் கட்டுப்படுத்துவதை விட, ஜனப் பிரதிநிதிகளின் பதவிக் காலத்தைக் கட்டுப்படுத்துவதன் முக்கியம் குறைவானதல்ல. கட்சி-சம்பந்தமான அவசியங்களினாலோ, அல்லது வேறு காரணங்களுக்காகவோ, சட்டசபைகளின் மெம்பர்களுக்கு மாதாந்தர அல்லது வருஷாந்தரச் சம்பளங்கள் ஏற்பாடு செய்யப்பட்டு வருவதால், இத்தகைய நிர்ப்பந்தம் ஏற்படுவது இன்றியமையாததாகிவிட்டது. தாங்கள் அதிகாரத்துக்கு வரவோ, அல்லது ஏற்கெனவே இருந்துவரும் அதிகாரத்தைக் காப்பாற்றிக்கொள்ளவோ, வோட்டுக்களைப் பெறுவதற்

காக அதீனிய ஜனநாயக காலத்தில் பிரபல ராஜதந்திரிகள் அனுஷ்டித்து வந்த பழைய உபாயந்தான் இது.14

சேவைக்காகப் பணம் கொடுக்கும் முறைதான் அதீனியர்களுக்கு யோக்கியக் குறைவை உண்டுபண்ணிவிட்டதென்று கருதி பிளேடோ, அரிஸ்டாடில் இருவரும் அதைக் கண்டித்திருக்கிறார்கள். இங்கிலாந்தின் உதாரணத்தைப் பின்பற்றி இந்தியாவிலும் மாகாண சர்க்கார்கள் இந்த முறையை ஏற்படுத்தியிருப்பது எல்லா வர்க்கங்களையும் சேர்ந்த பிரஜைகள் ராஜாங்க வேலையில் முழுப் பங்கெடுத்துக்கொள்வதற்கு வசதி அளிப்பதற்குத்தான் என்று நியாயம் கூறலாம். இல்லாவிடில் திறமை, குணம், தேசபக்தி, இவற்றை படைத்துள்ள ஓர் ஏழை வேறு எவ்விதத்திலும் தன் நாட்டிற்குச் சேவை செய்ய முடியாமற்போகும். வோட்டர்கள் தங்கள் இஷ்டப்படி தேர்ந்தெடுக்கச் சுதந்திரம் உள்ளவர்களென்றும் கூறப்படுகிறது. வோட்டர்கள் தேர்தலுக்கு அபேட்சகர்களாய் நிற்க உரிமை உண்டென்றும் சொல்லப்படுகிறது. ஆனால் திறமையின்மையானது காரியாம்சத்தில் இந்த இரண்டையுமே தடைப்படுத்தி விடுகிறது.

மந்திரிகளும் அவர்களுடைய காரியதரிசிகளும் செய்யும் சேவைக்காக அவர்களுக்குச் சம்பளம் கொடுக்க வேண்டுமானால், சட்டசபை மெம்பர்களுக்கும் அவர்களுடைய பொதுஜன சேவைக்காகச் சம்பளம் கொடுக்க வேண்டியதுதான். ஆனால் சேவையைவிடச் சம்பளத்தையே அதிகமாக மதித்து அந்தச் சம்பளத்தைப் பெறுவதற்காகத் தன் திடமான கொள்கைகள் எவ்வாறு இருந்தும், கட்சியை ஆதரிப்போனாகிவிடும் போக்கு, பதவியில் நீடிக்க நீடிக்கப் பலமடைகிறது என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். மேலும்மேலும் தேர்தலுக்கு நின்று எவ்விதத்திலாவது ஸ்தானத்தை வகிக்கவேண்டும் என்ற ஆசை வந்துவிடுகிறது. சம்பளம் வாங்கும் சட்டசபை மெம்பர்கள் சிலர் தங்கள் சுதந்திரத்தை இழந்து மந்திரிகளுக்கு அடங்கி நடக்கும் ஒருவிதமான அதிகாரிகளாகி விடும்

---

14 புராதன சரித்திரம், கேம்பிரிட்ஜ்: 5-104.

போக்கு உறுதிப்படுகிறது. மெம்பர்களாயிருந்தால் கிடைக்கும் சம்பளத்தையே முற்றிலும் நம்பி இருப்பதன் விளைவாக,சுலபமாய் யார்மீது ஆதிக்கம் செலுத்தக்கூடுமோ அவர்களைத்தான் அபேட்சகர்களாய் நிறுத்தும் ஆசை, சாதாரணமாய்க் கட்சித் தலைவர்களுக்கு இல்லாமல் இருக்க முடியாது. தினசரிப் படிச் செலவு (அலவன்ஸ்) தராமல் மாதவாரி அல்லது வருஷவாரியில் பொதுஜனச் சம்பளம் நிர்ணயிக்கப்படுவதுடன், காலவரம்பு நிச்சய மற்றதாகவுள்ள பொதுஜன சேவையில் இந்தக் குறைபாடுகள் இருந்துகொண்டுதான் இருக்கும். துஷ்பிரயோகத்துக்கு இடமில்லாத வரையறைகளை ஏற்படுத்தினால்தான், மொத்தத்தில் பார்லிமெண்டெரி சேவைக்குச் சம்பளம் தருவதற்குத் தீவிர ஆட்சேபம் இல்லாமலிருக்கும். இரண்டு தடவைகளுக்குமேல் சட்டசபைகளில் யாரும் ஸ்தானம் பெறக்கூடாதென்று ஏற்படுத்திவிட்டால் ராஜீயத்தைத் தொழிலாகக் கொள்வதை ரொம்ப தூரம் தடை செய்யலாம். தேசபக்தியுள்ள ஏழைகள் சேவை புரிவதற்கு மற்றவர்களைப்போல் சந்தர்ப்பமும் இதனால் கிடைக்கும் என்பது முக்கியமாய்க் கவனிக்கவேண்டிய விஷயம்.

வோட்டுரிமை

ஜனநாயக லட்சியம் எவ்வளவு தூரம் கைகூடியிருக்கிறதென்பது சட்டப்படி மக்களுக்கு எந்த அளவுக்கு வோட்டுரிமை வழங்கப் படுகிறது என்பதையும், அதை எவ்வளவு தூரம் அவர்கள் உபயோகிக்கிறார்கள் என்பதையுமே பொறுத்திருக்கும். ஆனால் ஜனநாயகம் முறைப்படி உத்தரவாதமாய் வேலை செய்வதற்காக வோட்டர்களுக்கும் அபேட்சகர்களுக்கும் யோக்கியதாம்சங்களை நிர்ணயிப்பது அவசியமாயிற்று. ஜனநாயக தர்மத்திலேயே அத்தகைய முறைப்பாடு அடங்கி யிருக்கிறது. ஒரு நாட்டிலுள்ள பிரஜைகளில் (எல்லோரும் இல்லாமல்) ஏராளமான பேர் வோட்டுரிமை பெற்றிருந்தாலும் அது ஜனநாயகமே. எல்லா மக்களும் வோட்டுக் கொடுக்கும் சக்தியைப் பெற்றவர்களா யிருப்பது எந்த

நாட்டிலும் கிடையாது. சுய ஆட்சி உரிமை என்பது, விவகார ரீதியில் ஒவ்வொருவருக்கும் உண்டு என்பது ஐதிகமாயினும், அது அவரவர்களின் புத்திசாலித்தனத்திற்கும், திறமைக்கும் அநுகுணமாகவேதான் இருக்கும். ஆகையால்தான் மைனராயிருப்பது, பைத்தியக்காரத் தனம், சித்தப்பிரமை முதலியவை யோக்கியக் குறைவுகள் என்று அங்கீகரிக்கப் பட்டிருக்கின்றன. மிகச் சிறந்த ஜன நாயகத்தின்கீழ் யுக்த வயது வந்த எல்லோருக்கும் வோட்டுரிமை இருப்பது இன்றியமையாதது. இதைப் பற்றிச் சந்தேகமே இருக்க முடியாது. பிரிட்டிஷ் இந்தியாவின் ஜனத்தொகையான 25.6 கோடியில், மூன்று கோடிக்கு மேல் மாகாண அசெம்பிளிகளின் தேர்தல்களில் வோட்டளிக்க உரிமை பெற்றிருக்கிறார்கள். வோட்டர்களாயிருக்கக்கூடிய யுக்த வயதினரின் எண்ணிக்கை 13 கோடிக்குக் கொஞ்சம் குறைவாயிருக்கலாம். இப்பொழுதுள்ள வோட்டர்களின் எண்ணிக்கையை இரண்டு மடங்காக்கி விட்டால் ஜனநாயக நோக்கம் கைகூடச் சுமாராகப் போதிய அளவுக்கு அது இருக்கக்கூடும்.

ஜனநாயக அரசியல்களென்று கூறப்பட்டு வந்த முறைகளின் கீழ், சமீப காலம் வரை ஸ்திரீகளுக்கு வோட்டுரிமை இராமலிருந்தது முக்கியமான ஓர் அம்சம். ஆண்களைப்போல் சம நிபந்தனைகளின்பேரில் ஸ்திரீகள் அமெரிக்க ஐக்கிய நாட்டில் வோட்டுரிமை பெற்றது 1920-ல். இங்கிலாந்தில் 1928-ல் தான். ஆனால் எல்லாத் தேசங்களிலும் ஸ்திரீகளுக்கு வோட்டுரிமை இன்னும் ஒப்புக்கொள்ளப்படவில்லை. இந்திய அரசியல்-சட்டத்தின்படி பெண்களுக்கு ஆண்களைப் போலவே சம அந்தஸ்து உண்டு. ஆனால், வோட்டுரிமையே மிகவும் நிர்ப்பந்தப் பட்டிருப்பதுடன், போதாக் குறைக்கு ஸ்திரீகளுக்கு அதிகப்படியான ஒரு யோக்கியதாம்சமும் சேர்க்கப்பட்டிருப்பது முற்றிலும் அதிருப்திகரமான ஏற்பாடு. ஜன சங்கியையில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இருந்துவரும் வீதாசாரத்திற்கு அனுசரணையாக யோக்கியதாம்சமுள்ள ஆண் வோட்டர்களின் எண்ணிக்கையும் பெண் வோட்

டர்களின் எண்ணிக்கையும் இருக்கவேண்டிய அளவுக்குப் பெண்களுக்கு அது வோட்டுரிமையை அளிக்கவில்லை. ஸமத்வத்தையும் நீதியையும் அடிப்படையாகக் கொண்ட ஜனநாயகம் ஸ்திரமாக இருந்து சரிவர அமல் நடப்பதற்கு அது அவசியமானது. வரி செலுத்துவதையோ அல்லது சொத்து வைத்துக்கொண் டிருப்பதையோ பிரதானமாய்ப் பொறுத்ததாக இனி வோட்டுரிமை இருக்கக் கூடாது.

வோட்டர், அபேட்சகர் வயது வரம்புகள்

இந்திய அரசியல் சட்டத்தின்கீழ் வோட்டளிக்க உரிமை பெற, குறைந்த பட்ச வயது 21 ஆக நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது. மாகாண அசெம்பிளிகளுக்கும், கவுன்சில் களுக்கும் அபேட்சகர்களாக நிற்போரின் குறைந்த பட்ச வயது 25, 30 ஆக இருக்கவேண்டுமென்று நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது. பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப் படுவ தற்கு எந்த அளவுக்கு நியாய புத்தி இருக்கவேண்டு மென்று கருதப் படுகிறதோ, அதே அளவுக்கு ஸர்வ ஜன வோட்டில் ஜவாப் அளிக்கவும், நிர்வாகஸ்தர்களைத் தேர்ந்தெடுக்கவும், தேச ஆட்சியில் பங்கெடுத்துக் கொள்ளவும் உரிமை யிருப்பது அவசியமாகிறது. எனவே, வோட்டர்களுக்கு வேறு, அபேட்சகர்களுக்கு வேறு யோக்கியதாம்சங்களை நிர்ணயிப்பதால் ஸமத்வம் ஏற்படாமல், விசேஷ உரிமைதான் ஏற்படுகிறது. இது ஜனநாயகத்தின் அஸ்திவாரத்துக்கே முரணானது. ஒரு தொகுதியின் பிரதிநிதியா யிருப்பதற்குத் தேவையான நியாய புத்தி முதிர்ச்சி யடைவதும், உலக அனுபவம் பெறுவதும் 21–வயதில் சாத்தியமல்ல, 25-வது வயதில் தான் முடியுமென்றால், வோட்டரின் குறைந்த பட்ச வயது இருபத்தைந்து ஆக்கப்படவேண்டும். 21 வயது போதுமானதாகக் கருதப்பட்டால், அபேட்சகர்களின் விஷயத்தில் பேதமிருக்க வேண்டியதில்லை. அத்தகைய குறைந்த பட்ச வயது நிர்ணயம், வெகுவாக யதேச்சையான ஏற்பாடாகத்தான் இருக்க முடியும். 18 வயது அடைந்த

வனுக்குச் சட்டப்படி மைனர் நீங்கி விடுகிறது. ஆனால் ராஜீயத் துறையில் இது செல்லுபடியாகாது. 21 அல்லது 25 வயதுதான் வோட்டர்கள், அபேட்சகர்கள் இரு சாராருக்குமே ஒரே மாதிரி இருக்கவேண்டும். அதுதான் நியாயமெனப் புலப்படுகிறது.

அபேட்சகர்களுக்கு வயது-வரம்பு இருக்க வேண்டியது அவசியமென்பதைச் சென்ற ஒன்றிரண்டு தலைமுறைகளில் ஜன நாயகங்களுக்கு ஏற்பட்ட அனுபவங்கள் தாராளமாய் நிரூபிக்கின்றன. சுறுசுறுப்பான ஒரு பிரதிநிதிக்கு அவசியமான புத்திக் கூர்மை, ஆக்ரஹ சக்தி, தேக திடம், உழைப்பு, தைரியம் முதலிய குணங்களை 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் பெரும்பான்மையோரிடம் போதிய அளவுக்குக் காணமுடியாது. அந்த வயதுக்கு மேற்பட்டவர் மந்திரியாகவோ, ராஜதந்திரியாகவோ அல்லது தலைவராகவோ இருக்கும் பட்சத்தில் தாராள புத்திக்குப் பதில் பொறுமை தலைதூக்குவதைக் காணலாம். அவர் போரிடவோ, அல்லது வற்புறுத்திக் கூறவோ விரும்பாமல், சூழ்ச்சி, சதி முதலியவற்றில் பற்றுதல் காண்பிப்பார்; மற்றவர்களால் ஆட்டிவைக்கப்படும் பலவீனராகவோ, அல்லது முன்கோபமும் சூழ்ச்சிப் புத்தியுங் கொண்ட ஸர்வாதிகாரியாகவோ தான் இருப்பார். பொதுஜன சேவைப் பதவிகளுக்கு ஒரு வயது - வரம்பு இருப்பது நல்ல ஏற்பாடு. ஜனங்களின் பிரதிநிதிகளில் சிலர் மந்திரிகளாகவோ, அல்லது காரியதரிசிகளாகவோ வரலாம். அவர்கள் செய்யவேண்டிய வேலை, இந்நாட்டில் ஒரு குறிப்பிட்ட வயதில் கட்டாயம் சேவையிலிருந்து விலகியாக வேண்டிய சர்க்கார் உத்தியோகஸ்தர்களின் வேலையைவிட, ரொம்பவும் சிரமமும் தொல்லையும் நிறைந்தது. மற்ற தேசங்களில் இது எவ்வாறிருந்த போதிலும், வேலை செய்யக்கூடிய வயதை ஒருவர் சாதாரணமாகக் கடந்து விட்டாராகில், அவர் கட்டாயம் விலகியாகும்படி நிர்ப்பந்திக்கும் ஏதாவது வயது - வரம்பு இந்தியாவுக்கு இன்றியமையாதது. சுயேச்சையாகவே ஒருவர் பொது வாழ்விலிருந்து விலகிக் கொள்ளும் போக்கு இந்தியாவில் அடியோடு

காணவே காணோம். தொடர்ச்சியாக மும்முரமாய்ச் சேவை செய்வதற்கு ஒரு வயது-வரம்பு இயற்கையான அவசியமே. ஆனால் வோட்டருக்கு இந்த ஏற்பாடு அனாவசியம்.

கட்டாய உயர்தரக் கல்வி அவசியம்

வோட்டுக் கொடுப்பதற்கு இன்றியமையாத யோக்கியதாம்சமாக எழுத்தறிவு இருக்க வேண்டுமா? என்ற வெகு முக்கியமான பிரச்னை அடுத்தாற்போல் கிளம்புகிறது. மேற்கத்தி ஜனநாயக நாடுகளில் எல்லோருமே படித்தவர்களாகையால் அங்கே இது ஒரு பிரச்னையாக இருக்கவில்லை. ஆனால் இந்தியாவில் இப்பொழுது 100-க்கு 8 பேர்தான் படித்தவர்களாக இருக்கிறார்கள். ஜனத்தொகையில் 90%-க்கு மேல் கிராமத்தில் வசிக்கிறார்கள். மற்ற தேசங்களிலுங்கூட வோட்டுரிமை விஸ்தரிக்கப்பட்ட பிறகு கல்வி பரவியதே ஒழிய அதற்கு முன்னால் அல்ல என்பதும் ஞாபகத்திலிருக்க வேண்டும். லோதியன் கமிட்டி பின்வருமாறு கூறியிருக்கிறது: "எழுத்தறிவு இல்லையென்றால், தன் அறிவுக்கும் அனுபவத்துக்கும் உட்பட்ட விஷயங்களைப் பற்றிப் புத்திசாலித் தனமாக வோட்டுக் கொடுக்கும் திறமையில்லை என்று பொருளல்ல. உலகமெங்குமுள்ள கிருஷிகர்களைப் போலவே இந்திய விவசாயியும் சுமாரான சாமர்த்தியசாலிதான். எனினும் எழுத்தறிவின்மையானது, அறிவையும் அதைப் பெறுவதற்குள்ள சக்தியையும் ரொம்பவும் குறுக்கி விடுகிறது. புத்தகங்களையோ, பத்திரிகைகளையோ படிக்க அவனால் முடியாது. எனவே தன் மாகாணம் அல்லது இந்தியா முழுவதையும் பற்றி, அல்லது வெளியுலகத்தைப் பற்றி அவன் தெரிந்துகொள்ளக் கூடியது, தன்னையடுத்தாற்போல் பெரும்பான்மையும் எழுத்தறிவில்லாதவர்களாகவே இருப்போருடன் சம்பாஷிப்பதன் மூலமாக அறிவதுதான்."16

வோட்டுரிமையைச் செலுத்துவதற்கு அதிகமான கல்வி தேவையில்லை என்பது வாஸ்தவம். ஆனால்,

16 லோதியன் அறிக்கை 1—17.

சாதாரணமாகச் சொல்லப்படுவது போல வோட்டு முறை சுலபமாயிருக்கவில்லை. ஜனநாயகத்தின் ஆரம்ப காலத்தில் இருந்ததிலிருந்து முற்றிலும் மாறுபட்ட வகையில் அது ரொம்பவும் சிக்கலாகி விட்டது. துரைத்தனத்தின் கொள்கைகள், நடவடிக்கைகள், செயல்கள், நிர்வாக விவரங்கள், எல்லாவற்றிற்கும் மேலாக, பொருளாதாரம், பணப் பிரச்னை, ஸர்வ தேச உறவுகள் முதலியன சாதாரணப் பிரஜைக்குப் புரியக் கூடாதவாறு ரொம்பவும் சிக்கலாய்விட்டன. பத்திரிகைகளோ, வெவ்வேறு விதமாய்க் குழப்பமாக ஒன்றுக்கொன்று முரணாக எழுதுவது அவனைப் பிரமிக்க வைக்கிறது. கல்வி-யோக்கியதாம்சத்தைப் பொருட்படுத்தாமல் வோட்டுரிமையை விரிவாக விஸ்தரிப்பதால் ஒரு கட்சி - சர்க்கார் வாய்மொழியாக இஷ்டம்போல் பிரசாரம் செய்து அனுகூலமடையலாம். கல்வி தரப்படும் அளவு வெகுவாகப் பரவவேண்டியதன் அவசியத்தை அது கவனியாமலேயே இருந்துவிடலாம்.

தம் கருத்துக்கள், கொள்கைகள், வாதங்கள் முதலியவற்றைப் போட்டி அபேட்சகர்கள் விளக்கமாய் எடுத்துரைப்பதால் அவர்களுடைய கோரிக்கைகளைச் சீர்தூக்கிப் பார்த்து நீதிபதிபோல் வோட்டுக்கொடுப்பது சுலபம் என்று கூறப்படலாம். ஆனால், நேர் விரோதமான கூச்சல்களும், ஸம்வாதங்களின் புகை - மூட்டமும், எழுத்தறிவில்லாத வோட்டர்கள்—ஏன் படித்தவர்கள்கூட—தங்கள் நியாய புத்தியை இறுதியில் கைவிடும்படி செய்துவிடுகின்றன. கல்வியின் மூலம் கிடைக்கும் பரந்த ஞானமும், அதிகமான நம்பிக்கையுந்தான் ஒருவன் நாட்டின் அரசியல் விஷயங்களில் கலந்துகொள்வதற்கு வசதியளிப்பது. அது இல்லாவிடில் பகுத்தறிவைத் திருப்தி செய்விக்காமல், அறியாமை, மூட நம்பிக்கை, குரோதம், மாத்ஸர்யம் முதலியவற்றை அக்கரைக்காரர்கள் கிளப்பிவிடுவதை எதிர்ப்பதற்கு அவனால் கொஞ்சமும் முடியாது.

பத்திரிகைகளில் நடக்கும் சர்ச்சைகளைக் கவனித்துத் தெரிந்துகொள்ளும் சக்தியும், போட்டியாயுள்ள

கொள்கைகளேயும் நடவடிக்கைகளேயும் பற்றிய உண்மைக ளுடன் கூடிய பத்திரிகைகளேயும் புஸ்தகங்களேயும் படிப்பதும், செம்மையாயுள்ள ஜனநாயகத் திட்டத் திற்கு இன்றியமையாதவை. மொத்தமாகச் சொல்லு மிடத்து, இந்திய ஜனநாயகம் தோல்வியுருமலிருக்க வேண்டுமானுல், பாமர மக்களின் கல்வி ரொம்பவும் பெருகுவதற்கு வழி செய்யுமாறு நிர்ப்பந்தித்தாக வேண்டும். ஆரம்பக் கல்வியைவிட உயர்ந்ததும், மெட்ரி குலேஷன் அல்லது எஸ்.எஸ்.எல். ஸிக்குக் குறைந்தது மான ஒரு வகுப்புவரை கல்வியை எல்லோருக்கும் கட்டாய மாக்குவது ஒன்றுதான் நியாயமான பரிகாரம் எனத் தோன்றுகிறது. அதை சர்க்காரின் நேரடியான பொறுப் பாக்கிவிடவேண்டும். ஆரம்பக் கல்விக்கு ஏற்பாடுகளேச் செய்வதைவிட, கட்டாய உயர்தர (செகண்டரி)க் கல்விக்கு ஏற்பாடு செய்வது சர்க்காரின் கடமை என்பது தெளிவான விஷயம். ஆரம்பக் கல்வி சர்வ சாதாரண மாகப் பிரஜாவுரிமைத் தேவைகளுக்கு முற்றிலும் போதாததா யிருப்பதுடன், பெரும்பான்மையோர் சம்பந்தப்பட்டவரை மேற்கொண்டு படிக்காவிடில் வியர்த்தமாகவும் போய்விடுகிறது.

தொகுதி அல்லது தொழில்முறைப் பிரதிநிதித்வம்

ஜனநாயகத்தின் கருத்தையும், அடிப்படைகளேயும் வளர்ப்பதைவிட, வோட்டர் ஜாபிதாத் தயாரிப்பு, வோட்டு அளிக்கும் வழி, தேர்தல்களில் அனுஷ்டிக்கப் படவேண்டிய வழிபாடுகள் முதலியவை கொண்ட பிரதி நிதித்வ ஏற்பாடுகளில் அதிகமான சிரத்தை காணப்படு கிறது. எனினும், சுலபமாகவோ சரிவரவோ பரிகாரங் களுக்கு இடமில்லாத பல பிரச்னைகள் இதில் இருக்கத் தான் செய்கின்றன. தொகுதிகளின் அமைப்பு முதல் பிரச்னே. தேசத்தில் யோக்யதாம்சமுள்ள எல்லாப் பிரஜைகளேயும் ஒரே வோட்டர்த் தொகுதியாக்குவதா, அல்லது பல பகுதிகளாகப் பிரிக்கவேண்டுமா என்பது

அவ்வளவு பிரதானமல்ல என்றே தோன்றுகிறது. ஜன நாயக தத்துவ ரீதியை அப்படியே பின்பற்றுவதானால், எல்லா வோட்டர்களும் ஒரே தொகுதியாயிருந்து சட்ட சபைக்குள்ள பிரதிநிதிக ளெல்லோரையும் தேர்ந் தெடுப்பதுதான் சந்தேகமற மிகச் சிறந்த ஏற்பாடாகும். ஆனால் எங்கேயும் இதில் கஷ்டமும் அசௌகரியங்களும் நிறைய இருக்கின்றன. வோட்டர்களைப் பல தொகுதிக ளாகப் பிரித்துப் பிரதிநிதிகளின் எண்ணிக்கையை அவற் றிடையே விநியோகிப்பதுதான், பொதுவாகக் கூறு மிடத்து, சௌகரியமுள்ள ஒரே வழியாகும். நியாயமாக இது நடைபெற்றால், ஜனநாயக லட்சியத்தை அடைவதற் குப் போதுமானதாக இருக்கும். மக்களுக்கு நியாயமான பிரதிநிதித்வம் கிடைக்கக் கூடியவாறு எப்படி வோட்டர் களைத் தொகுதி சேர்ப்பது என்பது அடுத்த பிரச்னை. இந்தக் கேள்விக்குப் பதில், எந்தக் காரியங்களுக்குப் பிரதி நிதிகள் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள் என்பதையே பொறுத்திருக்கும். தேசியப் பிரச்னைகள் சம்பந்தமாகவும், அதற்கு உட்பட்ட வகையில் பொருளாதார, ஸ்தல நல வுரிமைகளைப் பற்றியும் தன் கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்குத்தான் வோட்டர்கள் பிரதிநிதியாக ஒரு நபரைத் தேர்ந்தெடுக்கவேண்டும் என்பதே உண்மையில் நோக்கமாயிருக்க வேண்டும்.

பிரதேசவாரித் தொகுதிகளாகப் பிரிப்பதுதான் சம் பிரதாயமாக இருந்துவரும் ஏற்பாடு. இது சுலபமானது, சௌகரியமானது. தேசிய, ஸ்தலப் பிரச்னைகளைப் பற்றித் தொகுதியிலுள்ள ஒவ்வொரு பிரிவினரின் கருத்தையும் தெரிந்துகொள்வதற்கு இது அனுகூலமானது. பலதரப் பட்ட கருத்துக்களோடு கூடியவருடன் அடிக்கடி சேர்ந்து பழகும் சந்தர்ப்பம் இயற்கையாகவே பிரதிநிதிக்குக் கிடைக்கிறது. ஆனால், சமீபத்தில் வேறொரு கருத்தினர் தோன்றி யிருக்கின்றனர். பொருளாதார நலவுரிமையை அல்லது செய்யும் வேலையை அடிப்படையாகக் கொண்டு தொழில் முறைப் பிரதிநிதித்வ ஸ்தாபனங்கள் இருக்க வேண்டும் என்பது அவர்களுடைய கருத்து. தேசத்தின்

பொது விவகாரங்களை முக்கியமாய்க் கவனிப்பதற்காகப் பிரதிநிதிகள் போகிறார்கள் என்று இராமல், தனித்தனியாக ஒவ்வொரு பொருளாதார நல வுரிமையைப் பாதுகாக்கவே செல்லவேண்டுமென்றால், இந்த முறையை ஆதரிப்பதற்கு நல்ல காரணங்க ளிருக்கின்றன. ஆனால் இந்த முறையின் கீழ், பொருளாதாரப் பிரிவுகளிடையே உள்ள தகராறுகள் கடுமையாகித் தேசம் முழுவதன் நன்மை பின்னணிக்குப் போய்விடும். இதில் மற்றொரு பிரதிகூலமும் உண்டு. அத்தகைய தொழில் முறை ஸ்தாபனங்களின் வோட்டர்கள் தேசமெங்கும் சிதறுண்டிருப்பார்க ளாகையால், தொழில் அல்லது வேலை சம்பந்தப்பட்டவை தவிர மற்றப் பிரச்னைகளைப் பற்றி வோட்டர்களின் அபிப்பிராயங்களைத் தெரிந்து கொள்வதற்குச் சந்தர்ப்பங்கள் கிடைப்பது பூஜ்யந்தான். இதன் கீழ் விசேஷ ஸ்தல உரிமைகளுக்கு அடியோடு பிரதிநிதித்வம் இல்லாமற் போய் விடும். பிரதேசத் தொகுதியிலோ, எப்பொழுதுமே வியக்தமா யில்லாவிட்டாலுங் கூட, பொருளாதார உரிமைகளுக்குப் பிரிதிநிதித்வம் கட்டாயம் இருக்கிறது. பிரதிநிதித்வம் தேவையாயுள்ள பொருளாதார நலவுரிமைகளின் வேலைகளைத் தெளிவாக வரையறுக்கும் பெரிய கஷ்டம் இதில் இருக்கிறது. இதைத் தர்க்க ரீதியான முடிவுக்குக் கொண்டுபோனால், ஒவ்வொரு மிகச் சிறிய பிரிவின் பொருளாதார நலனையும் பாதுகாக்கவேண்டி ஏற்பட்டு, பிரதிநிதித்வம் மிக மிகச் சிறிதாகிவிடும். சௌகரியத்தை முன்னிட்டுப் பிரிவுகளைப் பெரிதாக்கிச் சிறு பிரிவுகளைப் பொருட்படுத்தா திருந்தால், திட்டம் எந்தக் காரியங்களுக்காக ஏற்பட்டதோ, அவை அடிபட்டுப்போம். வகுப்பு வித்தியாசங்களைப் போக்கடிக்க, தொழில் முறை பிரதிநிதித்வ முறையினால் முடியுமா என்பது சந்தேகமே. ஒவ்வொரு பொருளாதாரப் பிரிவிலும் வகுப்புவாரிப் பிரிவுகளைச் சிருஷ்டிப்பதன் மூலம் வித்தியாசங்கள் அதிகமாகவும் கூடும்.

விதாசாரப் பிரதிநிதித்வம்

பிரதேசவாரித் தொகுதி முறையில் சமப் பிரதிநிதித்வந் தான் நிர்ணயமான கொள்கையாக இருக்க வேண்டும். எனவே, ஒவ்வொன்றும் ஒரு மெம்பரைத் தேர்ந்தெடுக்கக் கூடியவாறு ஒரே மாதிரியாகத் தேர்தல் தொகுதிகள் இருக்க வேண்டும். சமப் பிரதிநிதித்வமென்றால் மைனரிடிகளுக்குங் கூட (சிறுபான்மையோருக்குங் கூட)ப் பிரதிநிதித்வ மாகையால், அத்தகைய தொகுதிகளில் மைனரிட்டிகளுக்குப் பிரதிநிதித்வம் இல்லாமற் போகிறது என்ற ஆட்சேபம் கிளம்பி யிருக்கிறது.

உண்மையிலேயே சமத்வமுள்ள ஜனநாயகத்தில் ஒவ்வொரு பகுதிக்கும் வீதாசாரப்படிதான் பிரதிநிதித்வமிருக்கும். வோட்டர்களில் பெரும்பான்மையோருக்கு எப்பொழுதுமே பிரதிநிதிகளிடையேயும் மெஜாரிடி இருக்கும். வோட்டர்களில் மைனரிடியா யுள்ளோர் எப்பொழுதுமே பிரதிநிதிகளிடையேயும் மைனரிடியாகத்தா னிருப்பார்கள் என்று ஜான் ஸ்டுவர்ட் மில் கூறியிருக்கிறார். அபிப்பிராய பேதங்களையும், சமுதாயத்தில் ஒவ்வொரு நலவுரிமையையும் எண்ணிக்கையை அனுசரித்த வீதாசார அளவில் சட்டசபை அப்படியே பிரதிபலிக்க வேண்டும். சட்டசபையில் பலவேறு பிரிவுகளின் வோட்டு வீதாசாரங்களைப் போலவே வீதாசாரப் பிரதிநிதித்வம் இருக்கும் என்ற இந்தச் சித்தாந்தம் ஏற்றுக்கொள்ளக் கூடிய பல நல்ல அம்சங்கள் கொண்டதாக இருக்கிறது. பல நாடுகளில் ஏதோ ஒரு தினுசில் இதை அனுஷ்டித்து வருகிறார்கள். மக்கள் ஏகோபித்த அபிப்பிராய மில்லாதவர்களாயிருந்தால், மெஜாரிடி வோட்டின் மூலமாகத்தான் அபிப்பிராயம் விளக்கமாக வேண்டும் என்பதைப் பற்றிச் சந்தேகமில்லை. பிரதிநிதிப் பதவி வகிப்பது மெஜாரிடியின் காரணமாகத்தான் என்பதும் உண்மையே. ஆனால் அவரை மெஜாரிடியின் பிரதிநிதி என்று மட்டும் கருதுவது சரியாகாது. பிரதிநிதியாக அவரை மெஜாரிடியார் நியமிக்கிறார்கள். அதாவது, மெஜாரிடி வோட்டுகளால் ஓர் அபேட்சகர் தேர்ந்தெடுக்கப்பட்டால், தமக்கு வோட்

டளிக்காதவர் உள்படத் தொகுதியிலுள்ள எல்லோரின் பிரதிநிதியாகவே அவர் பாவிக்கப்படவேண்டும். ஆனால் இந்தக் கற்பனையை ரொம்ப தூரத்துக்குக் கொண்டு போய்விடக் கூடாது. பிரதிநிதி-சபையில் கணக்காசாரப் படி பிரதிநிதித்வம் பெறுவதற்குக் கணித சாதனம் எதுவும் பயன்படாது. வோட்டர்களின் மாறிவரும் அபிப் பிராயங்களுக்கு ஒரு மெம்பர் சரியான பிரதிநிதியாயிருக்க முடியுமா? அவரைத் தேர்ந்தெடுத்தது தவிர, வேறு விஷயங்களில் மெஜாரிடியான வோட்டர்களின் அபிப் பிராயங்களெல்லாம் ஒன்று போன்றவையா? தேசிய முக்கியத்வமுள்ள எந்தப் பிரச்னைகளின் மீதாவது, மெஜாரிடியும் மைனாரிடியும் ஒருமித்த மனமுள்ளவர்களா யில்லையா? தம் தேர்தல் காலத்திலோ, அல்லது பிறகோ, ஒரு மெம்பர் மக்களின் மனோபீஷ்டத்துக்கு ஒருகாலும் பிரதிநிதியாக இருக்க முடியாது. அப்படியிருக்க முயல்வது வெறும் கானல் வேட்டையாகும். ஆனால் மைனாரிடி களுக்குப் பிரதிநிதித்வ மளிப்பது ராஜீய தர்மம் என்ப துடன் ஜனநாயகத்தின் அஸ்திவாரமுமாகும்.

வீதாசாரப் பிரதிநித்வ முறை அவர்களுக்குப் போதிய பிரதிநித்வம் கிடைக்கும்படிச் செய்கிறது. அத்துடன் கூட வோட்டுகள் வீணாவதைத் தவிர்க்கிறது. மேலும், தேசமெங்கும் மொத்தத்தில் பதிவான வோட்டுகளின் வீதாசாரத்தைவிட ரொம்பவும் பெரிய மெஜாரிடியை, கட்சி முறைப்படி நிர்வாகம் செலுத்தும் ஒரு சர்க்காருக்குத் தரும் விபரீதத்தையும் இது தவிர்க்கிறது. ஆனால் ஒற்றை மெம்பர் - தொகுதிக்குப் பதிலாக, பல மெம்பர் - தொகுதி முறை இதில் இடம் பெறுகிறது. இந்தத் தொகுதிகள் மிகப் பெரியனவாயிருக்கு மாகையால், மகத்தான நடை முறைக் கஷ்டங்கள் ஏற்படும். கட்சி முறையை ஆதரிப் போர், அது பலவீனப்படுமே என்ற பயத்தினால் தான் இந்த முறையை ஒப்புக்கொள்வதில்லை. கட்சிமுறை - அரசியல் இல்லாமலிருக்கும் இடங்களில், ஒவ்வொன்றும் ஒரு மெம்ப ரைத் தேர்ந்தெடுக்கும் 'பிரதேசத் தொகுதி முறை' தான் சுமாராகத் திருப்தியான ஏற்பாடாகும். கட்சிமுறை - அர

சியல் இருக்குமிடங்களில், வீதாசாரப் பிரதிநிதித்வந்தான் நிச்சயமாகச் சிறந்த திட்டமாகும். இதைப் பயனுள்ள தாக்க இரண்டு முறைகள்—சர்வ சாதாரண முறைகள்—ஒற்றை மாற்று வோட்டு (Single transferable vote), குவியல் வோட்டு (Cumulative vote) இவை பிரசித்த மாகி அனுஷ்டானத்தில் இருந்து வருகின்றன.

தனியுரிமைகளுக்கு ஸ்தானங்கள் இருக்கக்கூடாது

பிரதேசத் தொகுதிகளுடன்கூட, தனி யுரிமைகளுக் குப் பிரத்தியேகப் பிரதிநிதித்வம் இருக்கும்தேர்தல் முறை கெடுதலான சமரஸ ஏற்பாடு. தத்துவ ரீதியில் அதற்கு ஆதாரமே கிடையாது, காரியாம்சத்தில் மதிப்புமில்லை. மாகாண ஜன சங்கியையில் மைனாரிடியா, மெஜாரிடியா என்பதைப் பொருட்படுத்தாமல் சில வகுப்புகளுக்கும், பொருளாதார உரிமைகளுக்கும் தனித் தொகுதி முறை இந்தியாவில் ஏற்பாடா யிருக்கிறது. அது விசேஷ சலுகையா யிருப்பதுடன் சமத்துவ மற்றது. திடமான ஜனநாயகக் கொள்கைக்கு முரணாகவும் இருக்கிறது; ஒரு நாகரிக சர்க்காரின் நியாயபுத்தி, பரிசுத்தத் தன்மை—இவற்றிற்கு இழுக்கைத் தேடுவதாகிறது. ராஜீய சமுதா யத்தின் சமநிலை இதனால் சலனப்படுகிறது. இம்மாதிரி இதனால் நிலைமை கடினமாவது வர்க்கப் போரில் முடிந்து, விசேஷ உரிமைகளுக்குப் பாதகம் விளைவிக்கும். மைனாரிடி களின் தேவைகள், உரிமைகள் முதலியவற்றைச் சட்ட சபை அலட்சியம் செய்யாமல் தடுப்பதற்கு, பொது ஜன அபிப்பிராயம், பத்திரிகைகள், நபர்களோ, ஸ்தாபனங் களோ செய்யும் மனுக்கள், கட்டுப்பாடான கிளர்ச்சி—இவை போதுமானவையாகும். மெஜாரிடி வோட்டை நிஷ் பிரயோஜனமாக்கும் வகையில், மைனாரிட்டிக்குப் பயன் தரத்தக்க பிரதிநிதித்வமளிப்பது சாத்தியமே இல்லை. அப் படியானால், மைனாரிடிக்கு மெஜாரிடியைப் போல் சமப் பிரதிநிதித்வம் கொடுக்க வேண்டும். அதன்படி மெஜா ரிடிக்குக் குறைவான பிரதிநிதித்வமே இருக்கும். மைனாரிடி களும் மெஜாரிடிகளும் வளைந்து கொடுக்கக் கூடாத நிரந்

8-AUG 1945 MADRAS

தர ஸ்தாபனங்கள் என்ற கோட்பாட்டின் பேரில்தான் தனித்தொகுதித் திட்டம் பூராவும் உருவாக்கப்படுகிறது. பிளவுபடும் ஜலம் ஒன்றுவது போல், இந்தப் பிளவைத் தற்போதைக்கு மட்டுமுள்ள போக்கென அங்கீகரிப்பது தான் ஜனநாயகத்தின் நோக்கமா யிருக்கவேண்டும்.

தனித் தொகுதி முறை கூடாது

மதம் அல்லது ஜாதிப் பாகுபாட்டை அடிப்படையாகக் கொண்டு வோட் முறையை அமைக்கப் பாத்தியதை கொண்டாடுகையில்தான் ரொம்பவும் கடுமையான பிரச்னை கிளம்புகிறது. ஒரு வகுப்பைச் சேர்ந்தவர்கள் மற்ற வகுப்பினர்களுக்குப் பிரதிநிதிகளா யிருக்க முடியாது என்ற கருத்துத்தான் வகுப்புவாரிப் பிரதிநிதித்வத்திற்கு அடிப்படையா யிருப்பது. இந்தக் கருத்து ஜன ஆட்சி முறைக்கும் யமனாயிருக்கிறது. சர்க்கார் வேலைகளை நடத்துகையில் இந்த வகுப்புகள் தம் வகுப்புவாதத் தன்மையைக் கைவிடாமல் தாபத்தை வளர்த்து, பரஸ்பர அவநம்பிக்கைக்குச் சந்தர்ப்பங்களை அளித்து, உணர்ச்சி-வேகமுள்ள ஸம்வாதங்களில் மக்கள் இறங்கும்படிச் செய்யவல்லவை. பொதுவாயுள்ள வேலையிலிருந்து மக்களின் கவனத்தைத் திருப்பிவிட்டு ராஜீயத்திலும், சட்ட சபைகளிலும் வித்தியாச அம்சங்களையும், முடிவில்லாத மோதல்களையும் வகுப்புவாரித் தேர்தல் முறையானது நிரந்தரமாய் வருந்தியழைக்கும். நேரடியாக விசேஷமாய்ப் பிரதிநிதித்வ மளிப்பதன் மூலம் மைனாரிடி வகுப்பின் உரிமைகளுக்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்ற கவலை, அந்த நோக்கம் நிறைவேறாமல் செய்துவிடுகிறது. இதன் கீழ் அபிப்பிராய பேதம் நிரந்தரமாய் விடுகிறது. பொதுத் தொகுதியானது எல்லா வகுப்பினரும் ஒத்துழைக்குமாறு நிர்ப்பந்தித்து, வகுப்பு வித்தியாசங்களை அனுகூலப் படுத்திக் கொள்ளும் அமிதவாதிக்கு இடமில்லாமல் செய்கிறது. மெஜாரிடி வகுப்பைச் சேர்ந்த ஒரு அபேட்சகர் தன் வகுப்பினரான மற்ற அபேட்சகர்களுடன் போட்டி போடுகையில் மைனாரிடி வகுப்பின் வோட்டுகளைப் பெற விரும்புகிறார். இந்த முயற்சியில் அவருடைய மனிதத்

தன்மை அதிகப்படுகிறது. ஒரு ஜனநாயகம் அரசியல் பொறுப்பை நிலையாக மேற்கொள்ளுமுன், ஆழ்ந்த வித்தியாசங்களைச் சந்தேகமற ஒழித்துவிட வேண்டும். இப்பொழுது வகுப்புவாரித் தொகுதிகள் பூர்ணமாய் அனுஷ்டானத்திலிருந்து வருவதுடன் அதிகமாகி வருகின்றன. ஆனால் இந்த வித்தியாசங்கள் குறைந்த காலத்துக்கு இடைக்காலச் சம்பவமாகவே இருக்குமென்றும், ஜன நாயக நடை முறைகளின் கீழே காலக்கிரமத்தில் அவை சமனமாய் விடுமென்றும், தேசத்தின் மனத்தில் நம்பிக்கை தானாகவே சுரக்கிறது.

ரகஸ்ய வோட்டு முறையின் கோளாறுகள்

ரகஸ்ய வோட்டுப் பெட்டி - முறை முற்றிலும் வேறுயுள்ள பிரச்னை யொன்றைக் கிளப்புகிறது. இங்கிலாந்தில் 1872-ல் இது அமலுக்கு வந்தது. கட்சி முறையிலிருந்து கிளம்பிய தாபமும், சமூக நிர்ப்பந்தங்களுமே இதற்குக் காரணம் என்று தெரிகிறது. ஒருகால் வோட்டுச் சுதந்திரம் இதனால் கிடைக்கக்கூடும். தன் உண்மையான உத்தேசத்தை அளிக்க நிச்சயமாக இது வோட்டருக்கு வசதியளிக்கிறது. ஆனால் தன் பிரதிநிதியைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் சுய ஆட்சியில் பங்கெடுத்துக் கொள்வதற்குத் தனக்குள்ள உரிமையைப் பிரஜை ஏன் பகிரங்கமாய்ச் செலுத்தக் கூடாது என்பது தெளிவாக்கப் படவில்லை. தேசீய அசெம்ப்ளிக்கு ஒரு பிரதிநிதியை நியமிப்பது பொதுஜன முக்கியத்துவமுள்ள பொறுப்பான செயல். யோக்கியப் பொறுப்போ, ராஜாங்க காரணங்களோ, அது ரகஸ்யமாகத்தான் இருக்க வேண்டுமெனக் கோரவில்லை. இது சொந்தமான அந்தரங்க விவகாரமல்ல. ஒரு கிளப் அல்லது அது போன்ற ஸ்தாபனத்தில் சேர்ப்பது சம்பந்தமாய் அனுஷ்டிக்கப்படும் வோட்டின் ரகத்தில் இதைச் சேர்க்க முடியாது. பகிரங்கமாக வோட்டளித்தால், ஒரு குறிப்பிட்ட வகையில் வோட்டளிக்கும்படி வோட்டர் நிர்ப்பந்திக்கப் படலாம், அல்லது தாட்சண்யத்துக்கு உள்ளாகலாம்; ரகஸ்யமாக வோட்டளித்தால் அந்தத் தாட்சணியங்களில்லாம

லிருக்கும் என்ற தத்துவத்தின் பேரில்தான் ரகஸ்ய வோட்டு முறை அமைக்கப் பட்டுள்ளது. பய முறுத்துவது, ஒழுங்கற்ற தாட்சண்யங்களுக்கு உட் படுத்துவது இவற்றை உறுதியுடன் எதிர்த்து நிற்கு மாறு வோட்டர்களைப் பழக்குவதும், அவற்றைப் பிர யோகிப்போரைக் கடுமையான தண்டனைக் குள்ளாக்கு வதும் சிறந்த பரிகாரங்களாகும். பகிரங்கமாகத் தங்கள் வோட்டுகளைப் பதிவு செய்யவேண்டி யிருந்தால் சிலர் கொஞ்சம் சங்கடப்படும் படியாக ஒருகால் நேரிடலாம். எனவே, ரகஸ்ய வோட்டுமுறை மனிதனின் பலவீனத்தை உத்தேசித்து அளிக்கப்பட்டுள்ள ஒரு சலுகைதான். அபேட்சகருக்கோ, அவருடைய ஏஜெண்டுக்கோ தம்மைப் போன்ற வோட்டருக்கோ ஒருவாறுகச் சொல்லிவிட்டு, வோட்டுக் கொடுக்குமிடத்தில் வேறு விதமாய் நடந்து கொள்வதற்கு அது சந்தேகமில்லாமல் வோட்டருக்கு இட மளிக்கிறது. முறை தவறிய செயல்களுக்கும், போட்டிக் கட்சிகள் இரண்டிடமிருந்தோ அல்லது ஒன்றிடமிருந்தோ லஞ்சம் வாங்கவும், வசதியளிப்பதால் அது ஆண்மையுடன் கூடிய ஜனநாயகமாகாது. வோட்டுப்பதிவு நிச்சயமாக ரகஸ்யமா யிருக்கும்படி எப்பொழுதும் உத்தரவாதம் செய்ய அதனுல் முடியாது. பயமுறுத்தலினுல் பாதிக்கப் படாத தேர்தலும் எப்பொழுதும் அதன் மூலம் கிடைப்ப தாகச் சொல்வதற்கில்லை. அம்மாதிரி பயமுறுத்துவோரிட மிருந்து தப்ப ஒரே வழிதானுண்டு. அந்த நபர் சொல்லு கிறபடி வோட் செய்யவேண்டும், அல்லது தாம் அம் மாதிரியே வோட் செய்ததாகப் பின்னுல் அவர் நம்பும் படியாகவாவது செய்ய வேண்டும். தாம் வோட் செய்யப் போகும் விதத்தையும், வோட்டுக்குப்பின் தாம் அளித்த விதத்தையும் அபேட்சகருக்கோ, ஏஜெண்டுக்கோ தெரி வித்து விடுவது இந்நாட்டில் அனுஷ்டானத்திலிருந்து வருகிறது. இவ்விஷயத்தில் மௌனம் சாதிப்பது பொது வாக இந்திய குணுதிசயமல்ல. எழுத்தறிவில்லாத வோட் டர்களுக்கு உதவி யளிப்பதற்காகத் தனி வர்ணப் பெட்டி களையும், மற்ற ஏற்பாடுகளையும் வோட்டளிக்கும் இடத்தில் செய்து தருவது வோட்டின் ரகஸ்யத்துக்குப் பங்

கத்தை ஏற்படுத்துகிறது. தாட்சண்யங்களை மறுப்பதற்கு அசக்தர்களாகவோ அல்லது சௌகரியத்தை மதிப்பவர்களாகவோ இருக்கும் ஒரு சிலருக்காக, தைரியமும் பகிரங்க மனமுமுள்ள பெரும்பான்மையோர் குற்றமுள்ள நெஞ்சுடன் போகும்படிச் செய்வதோ, அல்லது ரகஸ்ய உபாயத்தைக் கடைப்பிடிக்கும்படிக் கோருவதோ நியாயமில்லை என்றே தோன்றுகிறது. தேர்தல் - ஜுரத்தின் மற்ற உபாதைகளுடன் கூடத் தங்கள் ஸத்ய நெறியையும் பிரஜைகள் தாழ்த்தி விடும்படியாகப் பயிற்சிக்கக் கூடாது. மொத்தமாகப் பார்க்குமிடத்து, ரகஸ்ய வோட்டு முறை இந்திய நிலைமைக்குத் தகுதியானதா என்பது சந்தேகமாகவே யிருக்கிறது. எவ்வாறுயினும், அதன் அனுகூலங்கள் மிகைபடுத்தப் பட்டுள்ளன.

தேர்தல் ஊழல்கள்

ஜனநாயகப் பிரச்னைகளைப் பற்றிய எந்த ஆராய்ச்சியிலும் தேர்தல் செலவுகள், லஞ்ச விவகாரம் இவற்றை அலட்சியம் செய்ய முடியாது. போட்டியுள்ள தேர்தலினால் ஏற்படும் செலவு ஜனநாயக நாட்டில் எப்பொழுதும் கடினமான பிரச்னை தான். அதைத் தீர்ப்பதற்கு ஒவ்வொரு நாடும் முயற்சி செய்திருக்கிறது. செலவு அதிகமாயிருப்பதால் பலர் தேர்தலுக்கு அபேட்சகர்களாய் நிற்க முடியாமலிருப்பது இதில் ஓர் அம்சமாகும். தங்கள் செலவுகளைக் குறைத்துக் கொள்ளவும், வெற்றி பெறுவதற்குள்ள சந்தர்ப்பங்களை அதிகப் படுத்திக் கொள்வதற்கும் ஏதாவது ஒரு கட்சியின் நோக்கங்களுக்கும் கொள்கைகளுக்கும் ஏற்றவாறு தம் திட நம்பிக்கைகளைப் பலர் மாற்றிக்கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. இது இரண்டாவது கஷ்டம். மூன்றுவதாக, கட்சியின் நிதிகளுக்கு அதிகமாய்க் கொடுப்பவர்கள், அதன் ஆலோசனை - சபைகளில் அதற்கேற்றவாறு செல்வாக்கும் பெறுகின்றனர், அல்லது ஏதாவது ஒரு தெளிவான சொந்த அனுகூலத்தை அடைகின்றனர். செல்வமும், ஆசையும் அதிகமாயிருந்து, செலவை மதியாமல் தேர்தல்கள் நடக்குமிடங்களில் அபேட்சகர்களும் அவர்களது

குடும்பங்களும் நிர்மூலமாய் விடுகின்றன. இரண்டு அல்லது மூன்று தேர்தல்கள்—சில சமயங்களில் ஒன்று கூட—ஒரு மனிதனை மீளாக் கடனில் மூழ்கவைக்கப் போதுமானதாயிருக்கும். எல்லாவற்றிற்கும் மேலாக, தேர்தல்களில் அதிகச் செலவு என்றால் சாதாரணமாக லஞ்சத் தாண்டவம் என்றுதான் பொருள்படும். தேர்தல்-செலவுகளைப் பற்றிய கணக்குகளைச் சமர்ப்பிக்க வேண்டு மென்ற விதிகளும், அதற்கு ஒரு அதிக பட்ச வரம்பு கட்டியிருப்பதும் சந்தேகமின்றி அவசியந்தான். இந்தியா விலும் அம்மாதிரி செய்திருக்கிறார்கள். அதற்கு மேலாக, தேர்தல்-உத்ஸாகத்தையும் வேலைகளையும் நியாயமான எல்லைகளுக்குள் காட்டும்படிச் செய்வதற்கு ஏற்பாடு இருப்பதும் நல்லதாகும். உதாரணமாக ஒரு அபேட்சகரோ, அல்லது அவரது ஏஜெண்டுகளோ அல்லது நண்பர்களோ கீழ்க் கண்டவைகளைச் செய்யக்கூடா தென்று தடுத்து விதி செய்யலாம்: (1) இரண்டுக்கு அதிக மான வேண்டுகோள்களையோ அல்லது விக்ஞாபனங் களையோ வோட்டர்களுக்கு வழங்குவது; (2) இரண்டு தடவைக்குமேல் நேரில் சென்று வோட்டுக் கேட்பது; (3) தொகுதியிலிருக்கும் எந்தக் கிராமம் அல்லது நகரத்திலும் இரண்டு கூட்டங்களுக்கு மேல் போடுவது. தடை மீறப்பட்டால் உரிமைகள் பறிமுதலாகுமென விதி செய்யலாம். அபேட்சகர்களின் விக்ஞாபனங்களை இலவசமாக, அல்லது பெயரளவில் கட்டணம் வாங்கிக் கொண்டு, தபாலாபீஸ் பட்டுவாடா செய்ய வேண்டும். வோட்டுப் பதிவாகும் ஸ்தலத்துக்குச் சென்று வர இல வசப் போக்கு வரத்து வசதிகளைச் சர்க்கார் தரவேண்டும் என்ற முக்கியமான சீர்திருத்தத்தைச் செய்ய வேண்டு மெனத் தோன்றுகிறது. வோட்டுப் பதிவு செய்வதற்காகத் தன் சொந்த வண்டியையோ அல்லது சர்க்கார் வண்டியை யோ தான் உபயோகிக்கலாம். இவற்றின் மூலம் செலவு கணிசமாகக் குறைவதுடன் பொதுஜன வாக்கு பதிவா வதற்குப் பரிசுத்தமான சுற்றுணர்ச்சியும் தோன்றும்.

கட்சி முறையும் லஞ்ச ஊழலும்

நல்ல ஆட்சி முறைக்கு வாய்க்கக்கூடிய மாபெரும் ஆபத்துக்களில் ஒன்று லஞ்ச ஊழல். இது இருக்கு மிடத்தில் உண்மையில் நல்ல ஆட்சி இருப்பதாய்க் கருத முடியாது. மற்ற ஆட்சி முறைகளைவிட ஜனநாயகத்தின் கீழ் இது தாண்டவமாடுவதற்கு இடம் அதிக மிருக்கிறது. நிர்வாகிகளையும் அதிகாரிகளையும் மீறிச் அது சட்டசபை மெம்பர்கள், வோட்டர்களிடையே வியாபித்து அவர்கள்மூலம் சமுதாயம் பூராவுக்குமே பரவுகிறது. பொது மக்களின் பொது அபிப்பிராயத்தின் தரா தரத்தை இது குறைத்துவிடுகிறது. லஞ்சத்தை ருசுப் பிப்பது வெகு கடினம். வாங்கியவனைப்போலவே கொடுத் தவனும் அதைத் தயக்கமின்றி மறுப்பான். பிரைஸ் கூறு கிறார்: "பண்டைக்காலக் குடியரசுகளின் அந்தஸ்துக்கு, அல்லது ரஷ்யா, துருக்கி, சீனா போன்ற பல யதேச்சாதி காரங்களின் அளவுக்குக் கேவலமாகி விடாதபோதிலும், பிரான்ஸிலும் கானடாவிலும் பல அமெரிக்க மாகாண ராஜாங்கங்களிலும் சுற்றுணர்ச்சி முற்றிலும் சிறப் புற்று விளங்குவதாகச் சொல்வதற்கில்லை. தேர்தல்-தொகுதிகள் விஸ்தரிக்கப்பட்டு 1884-ல் கடுமையான சட்டம் இயற்றப்படும்வரையில், இங்கிலாந்தில் வோட்டர் களுக்கு லஞ்சம் தருவது பகிரங்கமான அக்கிரமச் செயலாக இருந்துவந்தது. 17 தொகுதிகள் பெரியன வாக இருந்தால் பெரிய அளவில் லஞ்சம் தருவது சாதாரணமாய் நடை முறையில் அசாத்தியம். லஞ்ச வகைகள் பல. உதாரணமாக, பிரசுரங்களை விநியோகிப் பதற்கு, அல்லது தேர்தல் தினத்தன்று நிலைமையைக் கவனித்துக்கொள்வதற்கு, அல்லது வாக்காளர்களை வோட்டுகளைப் பதிவு செய்யும் இடங்களுக்குக் கொண்டு வருவதற்கு, உழைப்போருக்கு—ஒரு அபேட்சகரோ அல் லது அவருடைய கட்சியோ பணம் கொடுக்கும் வேஷத்தில் இதைக் காணலாம்." மேற்கத்தி ஜனநாயக நாடுகளில் லஞ்சத்தை எழுத்தாளர் பலவேறாக மதிப்பிட்டிருக்

17. பிரைஸ். II. பக்கங்கள் 497, 524.

கிறார்கள். இவற்றில் ரொம்பவும் சாதகமானவை கட்சி முறையைப் பலமாக ஆதரிப்பவையா யிருக்கின்றன. கட்சி விவகார முறையே பலவேறு வகைகளில் லஞ்சத்துக்கு ஊக்கமளிப்பதாக இருக்கிறது என்ற உண்மையை அவர்கள் கவனித்து மதிப்பிடுவதில்லை. மேற்கத்தி நாடுகளைவிட இந்தியாவில் லஞ்ச ஊழல் அதிகமா யிருப்பதாகவோ, அல்லது அங்கிருப்பதைவிடக் குறைவாக இருப்பதாகவோ நினைப்பதற்குப் போதிய காரணம் இல்லை. ஆனால் பணத்தின் சக்தி இங்கே குறைவா யிருப்பதால், லஞ்சத்தின் அளவு சிறிதாக இருக்கத்தான் செய்யும். அதீனிய ஜனநாயக காலத்திலிருந்தே லஞ்சம் பொதுஜனச் செல்வாக்குள்ள சர்க்கார்களை அழித்து வந்திருக்கிறது. ஆகையால் இந்தியாவில் புது ஜனநாயகத்தை இந்தப் பேராபத்தினின்றும் காப்பாற்றுவதற்கு விசேஷக் கண்காணிப்பு தேவை.

இந்த வேலையைச் செய்து முடிக்கக் கல்விமட்டும் போதாது என்பது அனுபவ பூர்வமான உண்மை. உஷாரான பொதுஜன அபிப்பிராயமும், அச்சம் என்பதையே அறியாத பத்திரிகைகளுந்தான் சந்தேகமற அடிப்படையான பாதுகாப்பைத் தரக்கூடியவை. தேர்தல் செலவுகளுக்கு அதிக பட்ச வரம்பு கட்டுவது, கணக்கு அனுப்புவது, தவறினால் விதிக்கப்படக்கூடிய தண்டனைகள் ஆகியவை இந்தக் கெடுதலைச் சமாளிப்பதற்குப் போதுமானவை யல்ல. லஞ்சம் தெளிவாக நிரூபிக்கப்படுகையில் சம்பந்தப்பட்ட அபேட்சகருக்கும் வோட்டர்களுக்கும் குறைந்தது பத்து வருஷ காலத்துக்கு வோட்டுரிமை ரத்து செய்யப்படவேண்டும். நாலு அல்லது ஆறு வருஷங்களுக்கு வோட்டுரிமையை ரத்து செய்யலாமென்ற இப்போதைய ஏற்பாடு போதாது. ஜனநாயகத்துக்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்கள் எல்லாவற்றிலும், தேசத் துரோகத்துக்கு அடுத்தபடியாக மகா கேவலமானது லஞ்சந்தான்.

பேராதரவு அளித்த ஒரு நபர்மீது—அவர் அதிகாரியாகவோ, சட்டசபை மெம்பராகவோ, அல்லது வோட்ட

ராகவோ எவ்வாறிருந்தாலும் சரி—அதிகாரம் செலுத்தும் ஒரு கட்சி லஞ்ச ஊழலுக்காக வழக்கெடுக்க முற்படுவது துர்லபம். கட்சியிலுள்ளோரின் ராஜீய செல்வாக்கு என்ற திரையினுல் பாதுகாக்கப்படும் ஓர் அதிகாரி உத்தியோகத்தை இழக்காமல், லஞ்ச ஊழலுக்காகத் தண்டிக்கப்படாமல், நிம்மதியாயிருக்க முடிகிறது என்பதை அமெரிக்க-பிரெஞ்சு அனுபவங்கள் காண்பிக்கின்றன.

நிர்வாகிகளையோ, அதிகாரிகளையோ, சட்டசபை மெம்பர்களையோ எவரைப்பற்றியிருந்தபோதிலும் சரி, சர்க்காரோ பொதுமக்களோ கவனத்துக்குக் கொண்டுவரும் லஞ்சப் புகார்களைப் பற்றி விசாரித்து முடிவு கட்ட, ஒவ்வொரு மாகாணத்திலும், சுதந்திர நிர்வாகக் கமிஷனே, அல்லது ஹைகோர்ட் நீதிபதி-பதவிகளை வகித்து விலகியவர்கள் அடங்கிய ஒரு மன்றமோ, ஏற்படவேண்டும். தன் நடைமுறையையும், சாட்சியத்தைப் பதிவுசெய்யும் முறைகளையும் நிர்ணயித்துக்கொள்ள அதற்கே அதிகாரமிருக்க வேண்டும். யார்மீதேனும் லஞ்சப் புகார்களைப் பற்றி விசாரிக்க வேண்டுமென இந்தக் கமிஷனை அல்லது மன்றத்தைக் கோர எந்த இரண்டு பிரஜைகளுக்கும் உரிமை இருக்கவேண்டும். இதற்கு எந்த அதிகாரியின் அனுமதியேனும் தேவையாயிருக்கக்கூடாது. செலவுத் தொகை சம்பந்தமாகப் போதிய பந்தோபஸ்துக்கு உத்தரவு பிறப்பிக்கலாம். கெட்ட எண்ணத்துடன் அல்லது பொறுப்பற்றவாறு குற்றச்சாட்டு செய்யப்படும் தாவாக்களில் பின்னுல் நஷ்ட ஈடு தரப்படுவதற்கும் பந்தோபஸ்து செய்துகொள்ளலாம். பசையற்ற அல்லது கெட்ட எண்ணத்துடன் கூடிய புகாரைக் கமிஷனே மன்றமோ உடனடியாகத் தள்ளிவிடலாம். ஆனுல் லஞ்சம் நிரூபிக்கப்பட்டால், பதவியிலிருந்து நீக்குமாறு அல்லது நீண்டகாலத்துக்குப் பிரதிநிதியாகவோ வோட்டராகவோ உரிமையற்றிருக்குமாறு சர்க்காரின் தலைவருக்கு மன்றம் சிபார்சு செய்யவேண்டும். லஞ்சத்துக்காக வேலையிலிருந்து நீக்கப்பட்ட அதிகாரிகளை மறுபடியும் வேலையில் அமர்த்திக்கொள்வது கூடாதெனத் தடை செய்யப்பட

வேண்டும். நாட்டின் குற்றங்களைப் பற்றிய சட்டம் இவ்வளவு கண்டிப்பாயிருந்தும், நல்ல ஆட்சி நடப்பதற்கு நிர்வாகத்திலும் ஜனநாயக யந்திரத்திலும் தூய்மை இருக்கவேண்டுமென்பது ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கும் போது, நாடெங்கும் லஞ்சக் கேஸ்களை கண்டுபிடித்துத் தண்டனை விதிக்கத் தனி வசதிகள் செய்துகொடுக்கப் படாமலிருப்பது ஆச்சரியமாகவேயிருக்கிறது. இத்தகைய வசதிகள் இருந்தாலே, இந்த ஊழல் வெகுவாகக் குறையும். சட்டப்படி தண்டனை விதிப்பதைச் சாதாரணக் கோர்ட்டுகளுக்கு விட்டுவிட வேண்டும். லஞ்ச வழக்குகளை விசாரிப்பதற்கு அவற்றிற்குள்ள அதிகார வரம்பு அப்படியே விட்டு வைக்கப்படவேண்டும். தங்கள் சட்ட சபைக் கடமைகள் சம்பந்தமாகவோ, அல்லது மந்திரிகளிடம் அல்லது அதிகாரிகளிடம் தமக்குள்ள செல்வாக்கை உபயோகிப்பதற்கு ஊக்கமளிக்கும் வகையிலோ, லஞ்சம் பெறும் சட்டசபை மெம்பர்களின் நடத்தைக்காகத் தண்டனை விதிப்பதற்கு இந்தியாவின் இப்போதைய முறையின்கீழ் ஏற்பாடு எதுவும் இல்லாமலிருப்பது வெகு ஆச்சரியமே.

கட்சி முறை எடுபட்டுப்போய், கட்சி நிதிகளைத் திரட்டி நிர்வகிப்பதையும் சட்டப்படி தடை செய்துவிட்டால், ரொம்பவும் சாதுரியமான, ஆனால் பயன் சம்பந்தப்பட்டவரை எவ்வகையிலும் குறைவுபடாத, லஞ்ச முறைகள் ஒழிந்துபோம். தேர்தல் இயக்கத்தில் செலவழிக்கப்படும் பணத்தில் பெரும் பகுதி, கட்சி ஊழியர்களின் பைகளுக்குப் போகிறது, தேர்தல் இயக்கத்தில் கட்சி தானே செலவு செய்யும் மொத்தப் பணம் எவ்வளவென்க் கணக்குத் தருமாறு கோரப்படுவதில்லை. கட்சி நிதியின் நிர்வாகத்திலேயே பெரும் பகுதி லஞ்சமாகக் கொடுபட்ட போதிலும் அதன் கணக்கு வழக்குகள் தணிக்கை செய்யப்படுவதோ, பிரசுரிக்கப்படுவதோ கிடையாது.

உலகில் வேறு எதற்கும் இளைத்ததல்ல என்ற பெயருடன்கூட, 50 ஆண்டுகளுக்கு இந்தியாவில் அதிகார வர்க்கம் நிர்வாகத் தூய்மையை உன்னதமான நிலைமையில்

வைத்திருந்தது. மாகாணங்கள் ஜனநாயகத்துக்கு மாறியுள்ள இத்தருணத்தில், அந்தத் தராதரம் கொஞ்சமேனும் குந்தகமடையாதவாறு தடுப்பதற்கு, இடைவிடாத உஷார் அவசியமாகும். கட்சி முறையைக் கைவிடுவதன் மூலமாகத்தான் இதைச் செய்ய இயலும். சர்க்கார் எந்தக் கட்சியின் ஆதரவை நம்பியிருக்கிறதோ அதில் லஞ்சம் வந்துவிட்டால், கட்டாயம் நிர்வாகத்திலும் அது வருவது தவிர்க்க முடியாததாகிவிடும். அதிகாரம் வகிக்கும் கட்சி என்ற ஒரு சங்கிலியின் பலம், அதிலுள்ள துர்ப்பலமான பல இணைப்புகளின் சக்திக்கு அதிகப்பட்டதாக இருக்காது.

இங்கிலாந்தில் கட்சி முறை திருப்திகரமாயில்லை. ஆனால் பலம் பொருந்திய பொது ஜன அபிப்பிராயமும், ஆளும் வர்க்கத்தினரின் விசேஷித்த சமூக நியதியும் இருப்பதால், இது சகிக்கக்கூடியதாகச் செய்யப்பட்டிருக்கிறது. நியாயம் சொல்லக்கூடாத பல விஷயங்களை இது அனுமதிக்கிறது. ஆனால் "இம்மாதிரி செய்யப்படுவதில்லை" என்ற ஜாபிதாவில் சில விஷயங்கள் போடப்பட்டுள்ளன. இதற்கு இந்த ஒரே உதாரணம் போதுமானது. ஒரு ஒழுங்கீனம் ஏற்பட்டதாகச் சந்தேகத்துக்கு இடமளித்த காரணத்தினால், சமீபத்தில் பால்ட்வின் சர்க்காரில் மந்திரி-அந்தஸ்து வகித்த ஒருவர் ராஜிநாமா செய்யவேண்டி ஏற்பட்டது.

பிரதிநிதியின் உரிமையும் கடமையும்

சட்டசபை மெம்பருக்குள்ள உரிமைகளையும் கடமைகளையும் பற்றிச் சர்ச்சை செய்வது வீணே. வோட்டர்களின் பிரதிநிதி (டெலிகேட்) என்ற வகையில் அவர் கடமை செலுத்த வேண்டும் என்ற வாதம் முற்றிலும் பொருந்தாது. தம் தொகுதியின் கருத்துக்களையும் க்ஷேம லாபங்களையும் பொருட்படுத்தாமல், தம் சொந்த முடிவை யனுசரித்து வோட்டளிக்கத் தமக்கு உரிமையிருப்பதாகவும் அவர் பாத்தியதை கொண்டாட முடியாது. இரண்டையும் ஒன்றுக்கொன்று சமரஸப்படுத்திக்

கூடியவரை சிறப்பாக நடந்துகொள்வது ஒன்றுதான் பகுத்தறிவை அனுசரித்த வழியாகும். அவர் இவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்ற கட்டளை உள்ளடக்கமா யிருப்பதாகப் பாரத்தைப் போடுவது அவருடைய உப யோகத்தை அழிப்பதாகும். எல்லாவற்றிலும் தம் சொந்த முடிவை அனுசரித்தே அவர் நடந்துகொள்ளும் படியாக விடுவது அவருடைய பிரதிநிதித்வ ஹோதா வுக்குப் பங்கம் விளைவிப்பதாகும்.

இரண்டாவது சட்டசபை

சட்டமியற்ற இரண்டு மன்றங்கள் இருக்க வேண்டுமா, அல்லது ஒன்றே போதுமா என்ற விஷயத் தைக் கவனிக்க வேண்டும். ஜனநாயகத்தின் கீழ் இரண்டு சட்டசபைகள் இருக்கவேண்டுமென்பது உளுத்துப் போன கொள்கை. இங்கிலாந்தில் இரண்டாவது சபை இருந்து வருவதற்குள்ள காரணங்கள் முற்றிலும் சரித்திர பூர்வ மானவை. ஆழ்ந்து அலசிப் பார்க்கும் ஆராய்ச்சியாள ருக்கு இதில் சில நற்குணங்கள் புலப்படலாமாயினும், 1911-ம் வருஷத்துப் பார்லிமெண்டரி சட்டம் நிறை வேற்றப்பட்டது முதல், இரண்டாவது சபை ருசிகரமான, காலந்தாழ்ந்து உயிர்வாழும், ஒரு விபரீதமாகவே இருந்து வந்திருக்கிறது.

ஜனநாயகத்தில் தயக்கமற்ற நம்பிக்கையின்மையும், மைனாரிடிகளைச் சமரஸப் படுத்தவேண்டும் என்ற விருப்ப முந்தான், மற்ற நாடுகளில் இரண்டாவது சபைகளின் மூல வித்துக்கள். இந்த மகத்தான பரீட்சை தொடங் கியபோது, பாதுகாப்புகளும் தணிக்கைகளும் அடங்கிய ஒரு முறையை வகுப்பதில் அரசியல் சட்ட கர்த்தர்கள் தங்கள் சாமர்த்தியத்தை யெல்லாம் உபயோகித்தனர். ஜனங்களின் மனோரதம் இரண்டு வழிகளில் சென்று பிரதிபலிக்க வேண்டும் என்பதற்குச் செல்லுபடியாகக் கூடிய காரணம் இல்லை. ஜனநாயகம் ஏன் இரண்டு குரல்கள் மூலம் வெளிப்பட வேண்டுமென்பது புரிய வில்லை. முதல் சபையில் இடம் பெறக்கூடாத கட்சி

யாளர்களின் ஆசைகள் கைகூடுவதற்கு வழி யேற்படுத்தவும், கட்சிக்குள்ளேயே தலைமைப் போட்டிகளை மட்டுப்படுத்தவும், கட்சியின் செல்வாக்கைப் பொதுவாக விஸ்தரித்துக் கொள்ளவும், இரண்டாவது சபையை வைத்திருப்பது பயனுள்ளதாக இருந்து வந்திருக்கிறது. தேர்ந்தெடுக்கப்படும் இரண்டாவது சபை முதல் சபையுடன் ஒத்துப் போவதா யிருக்கும் பக்ஷத்தில், அது அனுவசியமான ஓர் இரட்டைப் பிறவி யாகிறது. ஒத்துப் போகாவிடில், அது சக்தியற்ற ஒரு போட்டி ஸ்தாபனமாகவே விளங்கும். பரம்பரை - பாத்தியதை இல்லாத ஓர் இரண்டாவது சபையில் கட்சி முறையின் கீழ், சர்க்காருக்குப் பெரும்பான்மையோரின் ஆதரவு சாதாரணமாக இருந்து வரும். அதிகாரத்தைக் கண்டிப்பாகச் செலுத்தும் ஒரு சர்க்காருக்கு எதிராக இதனால் பாதுகாப்பளிக்க முடியாது. பலவீனமான ஒரு சர்க்காருக்கு இச்சபை பலக் குறைவையே தரும். முதல் சபையைப்போன்றதாகவே இராதவாறு, பொதுஜன அபிப்பிராயம் பிரதிபலிக்கக்கூடிய ஒரு ஸ்தாபனமாக, ஓர் இரண்டாவது சபையைச் சிருஷ்டிப்பது வெகு கஷ்டம். பலவேறு அரசியல் - சட்டங்களில் வெவ்வேறு பாகுபாடுகளுடன் கூடிய முறைகள் பயனற்றவாறு பின்பற்றப்படுவது இதைக் காட்டுகிறது. முதல் சபை தலை தெறிக்க விவகாரங்களை நடத்திக்கொண்டு போகாதவாறு அதை இரண்டாவது சபை பயனுள்ள வகையில் மிதப்படுத்திக்கொண்டு போகிறது என்ற சித்தாந்தம் கிரியாம்சையில் பலிப்பதேயில்லை. மைனரிடி உரிமைகளுக்கு அது சரியான பிரதிநிதியாக இருக்குமென்று கொள்வதும் தன்னைத் தானே ஏமாற்றிக்கொள்வதில் முடியும் வலை வீச்சுத்தான். முதல் சபையின் முடிவுகளை அது பொதுவாக அங்கீகாரம் செய்கிறது. மொத்தத்தில், இரண்டாவது சபைகள் ஜனநாயக தத்துவத்துக்குப் பொருத்தமானவை யல்ல. அவற்றின் நடைமுறைப் பிரயோஜனமும் கண்கூடாகப் புலப்படவில்லை. இந்தியாவில், அரசியல் சட்டத்தின்கீழ், 11 மாகாணங்களில் ஆறில், —அதாவது சென்னை பம்பாய் வங்காளம், ஐக்கிய மாகாணம், பீஹார், அஸ்ஸாம் ஆகிய

வற்றில்—இரு சபை முறை இருந்து வருகிறது. மாகாணக் கவுன்ஸில் (இரண்டாவது சபை) ஒரு காயமான ஸ்தாபனமாகவே அமைக்கப் பட்டுள்ளது. அதைக் கலைக்க முடியாது. மூன்று வருஷங்களுக்கு ஒரு தடவை அதன் மெம்பர்களில் மூன்றில் ஒரு பங்கினர் விலகவேண்டுமென்று சட்டம் கூறுகிறது. கவுன்ஸிலுக்கு ஒரு சில பேரை நியமிப்பதற்கு ஒவ்வொரு மாகாணக் கவர்னருக்கும் அதிகாரமுண்டு. வங்காளத்திலும் பிஹாரிலும், கவுன்ஸில் மெம்பர்களில் மூன்றில் இரண்டு பங்கினருக்கு மேற்பட்ட தொகையினர் மாகாண அஸெம்ப்ளிகளாலேயே தேர்ந்தெடுக்கப் படுகிறவர்கள். வரி மசோதாக்களை மாகாணக் கவுன்ஸில்களில் பிரேரேபிக்க முடியாது. வருஷாந்தர பட்ஜெட் பற்றிய மானியங்களை அளிக்கவும் மறுக்கவும் நிர்ணயமான அதிகாரம் கவுன்ஸில்களுக்குக் கட்டோடு கிடையாது. இரண்டு சபைகளுக்கு மிடையே வேற்றுமை ஏற்பட்டால், அவை இரண்டும் ஒன்றுகக்கூடும்; வந்துள்ள அங்கத்தினர்களில் அதிகப்படியான பேர் கொடுக்கும் அபிப்பிராயமே செல்லத்தக்கதாக இருக்கும். இவை ஜனநாயகத்தைக் கிரியாம்சையில் தடை செய்தாலும் செய்யக் கூடாவிட்டாலும், இந்தச் சந்தர்ப்பங்களின் கீழ் இரண்டாவது சபைகள் வேலை செய்வதால் உபயோகமே கிடையாது என்பது தெளிவான விஷயம்.

அஸெம்ப்ளியைப் போலவே மாகாணக் கவுன்ஸிலும் கலைக்கப்பட வேண்டும், மாற்றுப்போட்டு மெம்பர்கள் விலகுவது கூடாது. ஐந்து வருஷத்துக்குமேல் இதன் ஆயுள் நீடிக்கக் கூடாது. பொதுஜன சர்க்காரின் கோட்பாடுகளின்படி இவை அவசியமாகின்றன. அஸெம்ப்ளியின் ஆயுள்-காலத்தை 5 வருஷமாக வைத்திருப்பது ரொம்பவும் அதிகம். 3 வருஷம் போதாது, 4 வருஷ ஆயுள் தகுதியானதெனத் தோன்றுகிறது.

ஸர்வஜன வோட், பொது ஜன வாக்கு

நாட்டின் துரைத்தனத்தில் மக்கள் நேரடியாகக் குறுக்கிடுவதற்கு ஏற்பாடு செய்வது, இரண்டாவது-சபை ஏற்

பாட்டைவிட ரொம்பவும் முக்கியமானது. அரசியல் சட்டத் திருத்தங்கள், சாதாரணச் சட்ட நிரூபணம் அல்லது பெரிய கொள்கைப் பிரச்னைகள் ஆகியவை பற்றிப் பொது ஜன அபிப்பிராயத்தை அதிகார பூர்வமாய்த் தெரிந்து கொள்வதற்கு ஸர்வஜன வோட் (Referendum), பொது ஜன வாக்கு (Initiative) என்ற இரண்டு முறைகள் சகஜமாக ஒப்புக் கொள்ளப்படுகின்றன. சட்டசபை நிறைவேற்றும் எந்தச் சாதாரண அல்லது விசேஷ சட்டத்தையும், அரசியல் சட்டத் திருத்தங்களையும், சட்ட சம்மதமான வழியில் அதில் வரையறுக்கப்பட்டுள்ளவாறு பொதுஜனங்களின் வோட்டுக்குக் கொண்டு வருவதுதான் ஸர்வ ஜன வோட்டு. சட்ட பூர்வமாய்க் குறிப்பிடப்பட்ட எண்ணிக்கையில் வோட்டர்கள் ஓர் அரசியல் சட்டத் திருத்தத்தை அல்லது சட்டத்தை மக்களெல்லோரின் வோட்டுக்கும் விடுமாறு சர்க்காரைக் கோருவதுதான் பொதுஜன வாக்கு எனப்படுவது. இவ்விரண்டும்,—முக்கியமாக ஸர்வஜன வோட்,—அமெரிக்க மாகாணங்களிலும் (States) ஸ்விஸ் ஸம்மேளனத்திலும் அனுபவ பூர்வமாய்ப் பயன்பட்டு அனுகூலத்தையும் அளித்துள்ளன. நேரடியாகச் சட்ட நிரூபணம் செய்வதற்குள்ள அதிகாரத்தை இந்தத் தேசங்களிலுள்ள மக்கள் வரவர அதிகமாய்ப் போற்றி வருகிறார்கள். அதைக் கைவிடும் எண்ணம் அவர்களுக்குக் கொஞ்சங்கூடக் கிடையாது.[18] ஆஸ்ட்ரேலியாவிலும் ஸர்வஜன வோட் அனுஷ்டானத்தில் இருக்கிறது. அரசியல் சட்டத்தில் திருத்தத்தைச் செய்வதற்குமுன், ஸர்வஜன வோட் எடுக்கவேண்டியது சட்டபூர்வமான கடமையாகும்.

சட்டசபையின் மதிப்பை இது குறைப்பதாயிருக்கிறது என்பதைத் தழுவியே இவற்றைக் குறித்த ஆட்சேபங்கள் கிளம்பி யிருக்கின்றன. அத்தகைய விளைவு ஏற்படுவதில்லை என்பதை, இவை அமலிலுள்ள நாடுகளின் அனுபவம் நன்கு காட்டுகிறது. சட்டசபையால் நிறைவேற்றப்பட்ட ஒரு சட்டம் பாதகமானதெனக் கருதப்பட்டால், அதை ஊர்ஜிதம் செய்யவோ, அல்லது நிராகரிக்கவோ

18 பிரைஸ். II. 65-வது அத்தியாயம், 466-வது பக்கம்.

மக்களுக்கு 'அப்பீல்' செய்துகொள்வதற்கு இவை வழி ஏற்படுத்துகின்றன. ரொம்பவும் விரும்பத்தக்கதான ஒரு சட்டம் நிறைவேறுவதைச் சுயநல உரிமைக் கோஷ்டிகள் சட்டசபையில் அனுமதிக்காமலிருந்து அதை நிறைவேற்றியாக வேண்டுமென்றால் அதற்கு இவ்வேற்பாடுகள் வழி தருகின்றன. கட்சித் தகராறினால் ராஜ்யம் உலுக்கப்படுகையில், அல்லது சட்டசபை ஊழல்மயமாகு மிடங்களில், நெருக்கடிகளின்போது இவை விசேஷ மதிப்புள்ள உபாயங்களா யிருக்கும். கட்சி யுணர்ச்சியின் விபரீதங்களைச் சரியாக்கித் தேசிய மனோபாவத்தைச் சமனப்படுத்துவதற்கு இவை சந்தேகமறப் பயன்படுகின்றன. ஜனங்களின் அபிப்பிராயத்தை நேரடியாகத் தெரிந்து கொள்வதற்குள்ள இந்த முறைகளை அனுஷ்டிப்பதற்கு எதிராகக் கொள்கையைச் சுட்டி ஆட்சேபம் செய்வது சாத்தியமல்ல. மேல் தணிக்கை பார்க்க மக்களுக்குள்ள அதிகாரத்தை மறுப்பது ஜனநாயகத்தையே மறுப்பதாகும். அசௌகரியங்கள் இருப்பதாகக் கூறி, உண்மையில் இவற்றை ஆட்சேபிக்கவும் முடியாது. ஒரு பொதுத் தேர்தலில் இருப்பதைவிட அதிகமான அசௌகரியம் இதில் கிடையாது என்பதை ஆஸ்ட்ரேலிய, அமெரிக்க உதாரணங்கள் அறிவிக்கின்றன. இங்கிலாந்தில் சில முதன்மையான ராஜதந்திரிகளும் எழுத்தாளர்களும் ஸர்வஜன வோட்டை ஆதரித்து அபிப்பிராயம் கூறியிருந்த போதிலும், அங்கே ஒப்புக்கொள்ளப்படாமைக்குக் காரணம், இந்த ஏற்பாடு அமலுக்கு வந்தால் தங்கள் ராஜீய முறை நிச்சயமாகப் பலவீனப்படும் என்ற பீதி, ஆளும் வர்க்க உணர்ச்சி மிகுதியாயுள்ள அரசியல் - கட்சிகளுக்கு இருந்து வருவதே. இந்த நேரடியான முறைக்குப் பொதுத் தேர்தலைத் தகுதியான மாற்றாகக் கொள்ள முடியாது. பொதுத் தேர்தல் ஒரு தனிப் பிரச்னைமீது நடைபெறுவது துர்லபம். கட்சி, தலைமைப் பதவி, பீதி அல்லது பரபரப்பான ஒரு சம்பவம் போன்ற வெளி விவகாரங்கள் பொதுத் தேர்தலில் பிரமாதமாகிவிடும். ஒரு குறிப்பிட்ட பிரச்னை அல்லது கொள்கைமீது பொதுத் தேர்தலின் முடிவை நிர்ணயமான தீர்ப்பாகக் கொள்ள முடியாது.

மற்ற நாடுகளின் அனுபவத்திலிருந்து, இவற்றை இந்நாட்டிலும் சாதகமாகப் பின்பற்றலாம் என்று ஏற்படுகிறது. இங்குக் கூட, ஜனங்களின் இஷ்டத்துக்கு மாருன ஒரு சட்டத்தைச் சட்டசபையில் மிகப் பெரிய மெஜாரிட்டியுள்ள ஒரு கட்சி நிறைவேற்றக்கூடும். மேலும் மக்களில் பெரும்பகுதியினர் அவசியம் அல்லது விரும்பத்தக்கது எனக் கருதும் ஒரு மசோதாவை அது கொண்டு வராமலிருக்கலாம். ராஜீய விவகாரங்களில் நடைமுறைப் பயிற்சியை அளிப்பதற்கு இது இணையற்ற முறை என்று பிரைஸ் கூறியிருக்கிருர் 19. மாகாணங்களில் ஸர்வஜன வோட் இஷ்டபூர்வ ஏற்பாடாக இருக்கவேண்டும். ஸ்வித்ஜர்லாந்தில் போலக் கட்டாயமாக இருக்கக்கூடாது. சட்டசபை அல்லது ஒரு லட்சம் வோட்டர்கள் கோரும் பட்சத்தில் அதை எடுப்பதாக இருக்கவேண்டும். 'ஆம்' 'இல்லை' என்ற சுளுவான பதிலை மக்கள் நிர்ணயமாகக் கூறக்கூடிய வெகு முக்கியமான பிரச்னைகள் விஷயத்திலும் இது பிரயோகிக்கப்படவேண்டும். ஒரு லட்சம் வோட்டர்கள் கோரும் பட்சத்தில் பொதுஜன வாக்கைப் பதிவு செய்யவேண்டும். இந்த முறைகளை அனுஷ்டிப்பதன் மூலம், புது ஜனநாயகத்தை இந்தியாவில் நிலைக்க வைக்கலாம். முடியரசை அல்லது அதிகாரிகளின் ஆட்சியைப் பல காலமாக அனுபவித்துப் பழகிப்போன மக்கள், சர்வாதிகாரத்தின் கூடமான தோற்றங்களை மட்டுமின்றிப் பகிரங்கமான ரூபத்தையும் எதிர்ப்பதற்கு இதன் மூலம் பயிற்சிபெற முடியும்.

சமஷ்டியின் அமைப்பு

சமஷ்டி அமைப்பின் பரிசீலனையை இங்கு நான் எடுத்துக் கொள்ளவில்லை. ஆனல் பொதுவாக இதைப் பற்றி இங்கு இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். ஜனநாயக ரீதியிலுள்ள சமஷ்டி அமைப்பில் மத்திய சர்க்காருக்கும் சமஷ்டியில் சேர்ந்துள்ள பகுதிகளுக்குமிடையே அதிகாரம் விநியோகிக்கப்

19 பிரைஸ். II. 477-வது பக்கம்.

படுவதை ஜனநாயகத்துக்குரிய யோக்கியதாம்சமாகக் கருதக்கூடாது; சௌகரியத்தைப் பொறுத்த ஓர் ஏற்பாடாகவே இதைக் கொள்ள வேண்டும்; பிரதி நிதித்வ சர்க்கார், திறம்படச் சமூகமாக வேலை செய் வதற்குப் பயன்படுவதாகவே இதைப் பாவிக்க வேண்டும். மிதமிஞ்சிய அதிகாரமானது, ஏகமாக மத்திய சர்க்காரிடம் குவிந்து கிடக்கும். கட்டுக்கடங்காத ஜன நாயகத்தின் கீழ், நிர்வாகஸ்தர்களிடையே யதேச்சாதி காரம் அதிகமாயிருக்குமாகையால், அதைவிடச் சமஷ்டி முறையிலுள்ள ஆட்சியே ஸ்திரத் தன்மையையும், ஆழ்ந்த ஜனநாயக ஆதிக்கத்தையும் உறுதி செய்வதா யிருக்கும் என்று கருதுவது சாத்தியமே. ஆனால் சமஷ் டியின் உறுப்புக்கள் (பகுதிகள்) ரொம்பவும் பெரிதா யிருக்கக் கூடாது. இந்நாட்டின் நிலைமையில், சில மாகாணங்கள் இப்பொழுதிருப்பதை விடச் சிறியனவாக இருந்தால் ஜனங்கள் இன்னும் அதிகமான சிரத்தை கொள்ளும்படி செய்வது சாத்தியமாகும். நிர்வாகிகளின் யதேச்சாதிகாரப் போக்கும் குறையும்.

நிர்வாகப் பிரச்னைகள்

ஜனநாயகப் பிரச்னைகளில் மிகவும் முக்கியமானதைக் கவனிப்போம். ஜனங்களின் பிரதிநிதிகள் அடங்கிய எண் ணிக்கையில் மிகுந்த ஓர் அசெம்ப்ளியால் நாட்டின் நிர்வாகத்தை நேரடியாக நடத்த முடியாது. அன்றாட நிர்வாக அலுவல்களைக் கவனிக்கும் நிர்வாக சபை யொன் றும், சட்ட நிரூபண சபை யொன்றும் இருப்பது இன்றி யமையாததாகிறது. ஆங்கில ஆட்சி முறையிற்போல, நிர்வாக சர்க்கார் சட்ட சபையின் கமிட்டியாகவோ, அல்லது அமெரிக்காவிற்போலப் பலவேறு இலாகாக் களின் தலைவர்கள் கொண்ட ஒரு மந்திரி சபையின் ஒத் தாசையுடன், அதிகாரம் செலுத்தும். தேர்ந்தெடுக்கப் பட்ட பிரெஸிடென்டின் (ஜனாதிபதியின்) அமலாக இருக்கலாம். பிரிட்டனிலிருப்பதுபோன்ற மந்திரி சபை யாட்சி முறைதான் பொறுப்பாட்சி என்று வழங்கப் படுவது. சென்ற இரண்டு நூற்றாண்டுகளில் சர்க்காரின்

ஓர் உறுப்பாக அது விருத்தியடைந்திருக்கிறது. இதில் முரணான அம்சங்களுண்டு. இதைப் பற்றிய சம்பிரதாயங்கள் காலத்திற் கேற்றபடி மாறுபட்டு வந்திருக்கின்றன. மந்திரிகளைச் சட்ட சபையோ ஜனங்களோ தேர்ந்தெடுப்பதில்லை. காமன்ஸ் சபையில் பெரும்பான்மையோரின் நம்பிக்கைக்குப் பாத்திரமா யிருக்கக்கூடியவர்களை மன்னர் மந்திரிகளாக நியமிக்கிறார். இவர்கள் பார்லிமெண்ட் மெம்பர்களாய் இருந்தாகவேண்டும். தங்களுக்குப் பிரதிகூலமாக வோட் அளிக்கப்பட்டால், உடனடியாக அவர்கள் ராஜிநாமாச் செய்தாக வேண்டுமென்பதில்லை. அவர்கள் விரும்பும் பக்ஷத்தில் சபையைக் கலைத்துப் பொதுத் தேர்தலை நடத்துமாறு மன்னருக்கு ஆலோசனை கூறலாம். மாரியட் பின் வருமாறு கூறுகிறார் :

"இங்கிலாந்தில் மந்திரி சபை முறை இதுவரை வேலை செய்து வந்திருப்பதில் ஐந்து கொள்கைகள் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளன :—

(1) சட்ட சபைக்கும் நிர்வாகத்துக்கும் நெருங்கிய தொடர்பு.
(2) நிர்வாக சபையில் ராஜீயக் கருத்தொற்றுமை.
(3) மந்திரி சபை அங்கத்தினர்களிடையே கூட்டுப் பொறுப்பு.
(4) அதன் கூட்டங்களில் மன்னருக்கு இடமிராமை.
(5) ஒரு பிரதம மந்திரியின் தலைமைக்கு மற்றவர்கள் பொதுப்படையாக உட்பட்டிருப்பது." 20

மாகாணச் சுய ஆட்சியும் கட்சி - அரசியல் முறையும்

ஆங்கில முறையிலுள்ள பொறுப்பாட்சி, அரசியல் சட்டத்தின் மூலம் இந்தியாவில் அமைக்கப்பட்டிருக்கிறது. தம் யுக்தானுசாரம் நடந்துகொள்ளவேண்டிய விவ

---

20 'தாற்காலிக ராஜரிக அமைப்பு,' 2-வது பாகம், 58-வது பக்கம்.

காரங்கள் தவிர மற்றவைகளில் ஒவ்வொரு மாகாணக் கவர்னருக்கும் ஒரு மந்திரி சபை உதவியளித்து ஒத்தாசை புரிகிறது. ஆங்கில ஸம்பிரதாயத்துக்கு மாருக, மந்திரி சபைக் கூட்டங்களில் மன்னரின் பிரதிநிதி என்ற முறையில் கவர்னர் தலைமை வகிக்க உரிமை பெற்றவர். சட்டசபை மெம்பரல்லாத ஒருவர் மந்திரியாக நியமிக்கப் படலாம். ஆனால் ஆறுமாத காலத்துக்குள் அவர் மெம்பராகாவிடில் மந்திரி - பதவியை இழப்பார். சட்டசபையின் நம்பிக்கைக்கு மொத்தமாகப் பாத்திரராயிருக்கக்கூடிய நிலைமையிலுள்ளவர்களை (கூடியவரை முக்கியமான மைனரிடி மெம்பர்கள் உட்பட) ஸ்திரமான மெஜாரிடியைப் பெறக்கூடியவர் என்று தமக்கும் தோன்றும் ஒருவரைக் கலந்தாலோசித்து மாகாண கவர்னர் மந்திரிகளாக நியமிக்கவேண்டும் என்று மன்னரின் நியமனப் பத்திரம் கோருகிறது. இங்கிலாந்திற்போல இங்கும் கூட்டுப் பொறுப்பு அமல் நடக்கிறது. இவ்வாருக, நியமனப் பத்திரத்தின் மூலம் கட்சி-அரசியல் முறை இந்தியாவில் புகுத்தப்பட்டுள்ளது.

கட்சி-சர்க்காரும் ஜனநாயகமும்

கட்சி ரீதி சர்க்கார் ஜனநாயகத்தின் உட்பகுதியுமல்ல, பிரதிநிதித்வ ஆட்சி முறைக்கு அது இன்றியமையாததுமல்ல. சட்டசபைகளில் மக்களின் பிரதிநிதிகளாயுள்ளவர்கள் தங்கள் முன்வரும் பிரச்னைகளைத் தராதரம் பார்த்து முடிவு செய்யவேண்டும். அதிலுள்ள அங்கத்தினர்களில் பெரும்பான்மையோருடைய உண்மையான அபிப்பிராயங்கள் அமல் நடக்கவேண்டும் என்பதே பொதுஜன ஆட்சிமுறையின் சித்தாந்தம். அரசியல் சுதந்திரமும் நீதியுமே ஜனநாயகத்தின் அடிப்படை. இவை அதன் பிரதிநிதிகளுக்குக் கிடைக்கா வண்ணம் மறுக்கப்படலாகாது. எனவே, ஒவ்வொரு மெம்பரும் தம் இச்சைப்படி வோட்டளிக்கச் சுதந்திரராக இருத்தல் வேண்டும். ஜனப் பிரதிநிதிகளின் உண்மையான அபிப்பிராயத்தைத் தெரிந்துகொள்ள வேண்டுமானால் கட்சி முறை அரசியலை நிலைநிறுத்துவது நீதியாகாது. கட்சி எங்கே இருக்கிறதோ

அங்கே மெம்பரின் அபிப்பிராயங்களை அது அதிரடித்து வருகிறது. சட்டசபையிலுள்ள கட்சி மெஜாரிடி, சபைக்கு வெளியே கட்சி செய்யும் முடிவுகளையோ, அல்லது கட்சித் தலைவன் செய்யும் தீர்மானங்களையோதான் பதிவு செய்கிறது. சட்ட சபையிலுள்ள மெஜாரிடிக் கட்சி - மெம்பர்கள் யந்திரங்களாக நடந்து கொள்கிறார்கள். தேவையான அளவு வோட்டுகளைப் பதிவு செய்வதற்கு வேண்டிய பதிலி - அத்தாட்சியை (proky)க் கொடுத்து விட்டு அவர்கள் சபைக்கு வராமலேயே இருந்துவிடலாம். அதில் விவாதங்கள் பெரும்பான்மையும் சாங்கியத் துக்கு நடைபெறுபவையாகவும் தன்மையற்றும் காணப் படுகின்றன. சர்ச்சை நடத்துவதன் மூலம் அரசாட்சி செலுத்துவது ஜனநாயகம் என்று சொல்வதற்கில்லை. கட்சி முடிவு செய்வது பார்லிமெண்டுக்கு வெளியில்தானே என்று சொல்லக்கூடும். ஆனால் பதவி வகிக்கும் ஒரு கட்சியில் சட்டசபையில் இல்லாதவர்களும் இருக்கக் கூடும், உண்மையில் அப்படித்தானிருக்கிறார்கள். கட்சிக் கூட்டத்தில் முடிவு ஏற்படுமுன் எதிர்க் கட்சியின் வாதங்களை (பிரேரணைகளைக் கொண்டுவருவோர்) எடுத் துரைப்பதில்லை. கட்சிக் கூட்டங்களில் தலைமை ஸ்தானம் ஸர்வ முக்கியமானது. பிரதம மந்திரியோ அல்லது வேறு மந்திரியோ ராஜிநாமாச் செய்வதாக மிரட்டுவதோ, அல்லது விவாதப் பிரச்னையின் தராதரத்துக்குச் சம்பந்த மில்லாத வியவகார-அவசியமான காரணங்களோ கட்சி யின் முடிவுகளை உருவாக்குவது சகஜம். கடைசியாக, கண்டிப்பாகப் பார்க்குமிடத்து, சர்க்கார் சட்டசபைக்கு ஜவாப்தாரியாக இல்லை. கட்சிக்கும், ஏதோ ஒருவகையில் தவிர, அது பொறுப்புள்ளதல்ல. கட்சிமீது எப் பொழுதுமே அது ஆதிக்கம் செலுத்துகிறது.

கட்சியின் தீமைகள் பல. அவை தெளிவானவை. சட்ட சபையை மட்டுமின்றி நாட்டையும் அதிகாரத்துக் காகச் சண்டையிடும் போட்டாபோட்டிப் பிரிவுகளாகக் 'கட்சி' பிரித்துவிடுகிறது. எப்பொழுதுமே இல்லா விட்டாலும் பொதுவாக ஒரு கட்சி தன் நன்மையை

மதித்தே ஒவ்வொரு பிரச்னையையும் கவனிக்கும். தனக்குப் போட்டியாயுள்ள கட்சிகளுக்கு எதிராகப் பொதுஜன ஆதரவைத் தன்வசப்படுத்தும் நோக்கத்துடன்கூடக் கொள்கைகளை உருவாக்கவேண்டும் என்ற ஆசையே அதற்கு முக்கியமாக இருக்கிறது. இல்லாத இடங்களில் அது வேற்றுமைகளைக் கற்பிப்பது சகஜம். இருக்குமிடங்களில் 'கட்சிகள்' அவற்றைப் பிரமாதமாக மிகைபடுத்திவிடுகின்றன. தேச பக்திக்கும் தேசிய க்ஷேம லாபத்துக்கும் பொருத்தமான வகையில் நியாயமான முடிவைச் செய்யவேண்டியதை முதன்மையாக மதித்து நடந்துகொள்ளவேண்டியிருக்க, கட்சித் தகராறின் சூட்டில், அல்லது எதிர்ப்போனை வென்று ஆகவேண்டுமென்ற விருப்பத்தில், பொது நலன்களை அநேகமாய் மறந்துவிடுகிறார்கள். சாதாரணமாக இருக்கக் கூடியவைகளை விடக் கட்சி - அரசியல் முறையின்கீழ் விருப்பு வெறுப்புகளுக்கு இடம் அதிகமிருக்கிறது. ஒன்றுக்கொன்று எதிரிடையான கருத்துக்களை அல்லது கொள்கைகளைக் கட்டுப்பாடாய் எடுத்துரைப்பதற்காகக் கட்சிகள் அமைக்கப்படுகின்றன வென்று கூறக்கூடும்; ஆனால் பெரும்பான்மையும் அவை தோற்றுவிக்கப்படுவது அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்குத்தான்.

கிரியாம்சையில் கட்சி - அரசியல், ஜனநாயகத்துக்குச் சீட்டுக் கொடுத்துவிடுகிறது. கட்சி என்றால் என்ன? ஒரு தலைவரின்கீழே தேச ஆதிக்கத்தைப் பெறுவதற்காக, பெரும்பான்மை அல்லது சிறுபான்மை மக்கள் அடங்கிய பெரிய பகுதிகளை ஒன்றாகச் சேர்த்தமைக்கும் தனி நபர்கள்கொண்ட கோஷ்டிதான் கட்சி எனப்படுவது. அது எவ்வளவுக்கெவ்வளவு வளைந்து கொடுக்காததாகவும் கட்டுப்பாடுகள் அதிகமுள்ளதாகவும் இருக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு அது ஸர்வாதிகாரமாகிறது என்பதை ஐரோப்பாவின் சமீபகால அனுபவம் காண்பிக்கிறது. ஜனசங்கியையில் பெரும்பான்மையோர்மீது தன் மனோபீஷ்டத்தைத் திணித்துத் தன் சொந்த ஆட்கள் தேர்தல்களில் ஜயிக்கும்படிச் செய்யவே கட்சி முயல்கிறது.

தங்கள் சொந்தப் பிரதிநிதிகளைப் பொறுக்கி யெடுக்க வோட்டர்களுக்குச் சுதந்திரமில்லை. கட்சியே தங்கள் பிரதிநிதி என அவர்கள் ஒப்புக்கொள்கிறார்கள். தங்கள் சொந்தத் தீர்ப்பை அர்ப்பணம் செய்துவிட்டுக் கட்சியின் தீர்ப்புக்கு உட்பட வேண்டுமென, தேர்ந்தெடுக்கப்பட்ட மெம்பர்களைக் கட்சி கோருகிறது. எனவே ஜனநாயகம் அப்பட்டமாகப் பரிமளிப்பதில்லை ; ஸர்வாதிகாரத்தையே காண்கிறோம். இந்தப் பார்லிமெண்டரி ஸர்வாதிகாரத்துக்கும் புதிய ஸர்வாதிகாரங்களுக்கும் இருக்கும் ஒரே வித்தியாசம் இதுதான் : பார்லிமெண்டரி ஸர்வாதிகாரம் எதிர்க்கட்சிக்குப் பேச—செயலாற்றச் சற்று இடம் தருகிறது. எதிர்க்கட்சியை ஒடுக்கிவிட்டுக் குணதோஷ சர்ச்சைகளை அது வாயடைத்து விடுவதில்லை. புது ஸர்வாதிகாரங்களில் எதிர்ப்பு அகற்றப்படுகிறது. குண தோஷ சர்ச்சை அடியோடு ஒடுக்கப்படுகிறது. ஆகையால் கட்சிமுறை-சர்க்காரின் ஸர்வாதிகாரம், அரசியல் சட்டத்துக்குச் சம்மதமான தோற்றங்களை அணிந்திருந்தபோதிலும், பொதுவாக ஏதாவது ஒரு வகையில் வெளிப்படையான ஸர்வாதிகாரத்தில் கொண்டுபோய் விடுகிறது. அமெரிக்காவில் கட்சி-அரசியல்முறை வேலை செய்யும் விதத்தைப் பற்றி பிரைஸ் கூறுகிறார் :

> "அமெரிக்க ஐக்கிய நாடுகளிலுள்ள இரண்டு பெரிய கட்சிகளும் தங்கள் அங்கத்தினர்கள் பத்துலட்சக் கணக்கில் இருப்பதாகக் கூறுகின்றன. நெடுநாட்களாகவே சிறு குழாங்கள்தாம் இவற்றை ஆட்டி வைத்து வந்துள்ளன. ஒவ்வொரு பெரிய நகரிலும், கட்சி ஸ்தாபனத்தின் உயர்தரக் குழுவொன்று—ஒரு அரை டஜன் சூத்திரதாரிகளடங்கியது — இருக்கும். இதற்கு ஸர்வ வல்லமையுள்ள ஒரு எஜமான் இருப்பான்." 21.

கட்சி முறையின் மற்றத் தீமைகள் வருமாறு :— நற்குணமும் திறமையுமுள்ள பலர், கட்சியில் சேர மறுப்பதன் காரணமாக ராஜீய வாழ்வுக்குப் புறம்பாக இருக்க வேண்டி யிருக்கிறது. பலர் மனப் பூர்வமான நம்பிக்கை

21 பிரைஸ் 598, 169 பக்கங்கள்.

யில்லாமல் ஆசை மிகுதியால் தூண்டப்பட்டுக் கட்சியில் சேருகிறுர்கள். அவிசுவாசமும் பகட்டும் அதனுல் வலுக்கின்றன. சூழ்ச்சிக்காரர்களுக்கும் வர்ஜாவர்ஜமற்றவர் களுக்குந்தான் அது தகுதியான இடம்; யோக்கியர் களுக்கு அல்ல. பத்திரிகையை அதன் சீரிய நிலையி லிருந்து கட்சியானது தன் கருவியாகத் தாழ்த்துகிறது. பொது ஊழியங்கள் சம்பந்தமாக உற்றுர் உறவினருக்குப் பதவி தர அது வசதியளிக்கிறது; இதனுல் நிர்வாகத்தின் தரம் குறைந்து போகிறது. பலவேறு வழிகளில் ஊழல்கள் தென்படுவதற்குக் கட்சி சிறந்த மூலாதாரமாகிறது.

எல்லாவற்றிற்கும் மேலாகக் கட்சி-மனப்பான்மை என்பது ஒருதலைப் பட்சமான மனப் பான்மையாகிறது. எந்த ஜனநாயகத்திலும்—முக்கியமாக எழுத்தறிவின்மை அதிகமாகவோ, அல்லது கல்வி போதிய அளவு இல்லா மலோ உள்ள இடங்களில்—அரசியல் கட்சிகள் நடத்தும் தேர்தல் பிரசாரத்தில் போட்டாபோட்டி மாத்ஸர்யங் களைக் காணலாம். மற்றக் கட்சியை மக்கள் தோற் கடிப்பதற்காக உணர்ச்சியை எழுப்பக் கூடிய வகை யில் கட்சிப் பிரசாரம் நடைபெறுகிறது. கட்சியின் தேர்தல் இயக்கம் வெற்றி யடைவதற்கான முக்கிய காரணம் ஒரு குறிப்பிட்ட கொள்கையையோ அல்லது அபேட்சகரையோ போற்றிப் பேணும் பகுத்தறி வல்ல. கட்சியுணர்ச்சி மிகுதியாயுள்ள ஒரு ஜனக் கூட்டத்தின் வெற்றி-வேட்கையையே இதற்குக் காரணமாகக் கொள்ள வேண்டும். காட்டுமிராண்டியை வசப்படுத்துவது இவ்வாறு தான். ஜனநாயக அரசாங்கத்தின் உறுப்பினராகக் கடமை யைச் செலுத்துவதற்கு ஒருவனுக்குப் பாரபட்சமின்மை, நியாய புத்தி, உண்மை நிலை, எதிரிடையான அபிப்பிராயங் களைச் சாவதானமாக ஆராய்ந்தறிவது, அரசாங்கத்தின் பொதுநோக்கம் கைகூடவேண்டும் என்ற ஒரே எண்ணத் துடன் சரியான முடிவுக்கு வரவேண்டுமென்ற ஆசை— ஆகிய குண விசேஷங்கள் வேண்டும். மேலே குறிப்பிட் டுள்ள பிரசார முறை இவற்றை யெல்லாம் சிதைத்து விடுகிறது. எனவே, இந்தியாவில் கட்சி ரீதியில் சர்க்கார்

நடைபெறும் முறையை எந்த ஜனநாயகமும் பின்பற்றும விருப்பது அவசியம்.

கட்சி - அரசியல் முறையின் குணங்களைப் பலர் பல வாறு மதிப்பிட்டிருக்கிறார்கள். 22 அதன் அதிருப்திகர மான அம்சங்களைப் பற்றி எல்லோரிடையேயும் கருத் தொற்றுமை காணப்படுகிறது. ஆங்கிலேய மக்களின் குணவிசேஷத்துக்கு அது முற்றிலும் பொருத்தமுள்ளதா யிருப்பதாகக் கூறி ஆங்கில எழுத்தாளர்கள் அதை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். பலமும் ஸ்திரத் தன்மை யும் உள்ள ஓர் அரசாங்கத்துக்கு வழி செய்வது அதை ஆதரிப்பதன் காரணங்களில் ஒன்று. வோட்டர்களின் அபிப்பிராயத்தைக் கட்சி அடிப்படையில் உருப்படுத்தினல் தான் பயனுள்ள வகையில் அது வெளிப்பட வழியுண்டு என்பது மற்றொரு காரணம். கட்சி - அரசியல் முறையை ஆதரித்துக் கூறப்படும் இவ்விரண்டு காரணங்களும் ஜாக்கிரதையாகக் கவனிக்கப்பட வேண்டியவை. ஆனல் முதலில் ஒரு விஷயத்தை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். இங்கிலாந்தில் கட்சிமுறை - சர்க்கார் ஏற் பட்டதற்குக் காரணம் அதற்கு எவ்விதமான அவசியமும் தோன்றியது அல்ல. ஆங்கில மன்னர்களிடமிருந்து அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு அது அவசியமா யிருந்தது என்பது சரித்திரக் கண்ணோட்டத்துடன் பார்த்தால் தெரியும். எனவே, ஆங்கில ஜனநாயகம் தோன்றி வளர்வதற்கு முன்னமேயே கட்சி வந்து விட்டது. இங்கிலாந்தில் மத அடிப்படையில் 'கத்தோ லிக்கர்' என்றும் 'பிராடெஸ்டெண்டுகள்' என்றும் முதலில் கட்சிகள் பிரிந்தன. பிறகு ஒரு கட்சி மன்னர்களின் உரிமைகளையும், மற்றது மக்களின் உரிமைகளையும் பார்லி மெண்டில் ஆதரித்தது. பிறகு ஒரு கட்சி நிலச் சுவான்தார் களின் உரிமைகளுக்கும், மற்றது தொழில்களிலும் வியா பாரத்திலும் வர்த்தகத்திலும் ஈடுபட்டிருந்த நடுத்தர

22 பிரைஸ், லஸ்கி, போர்ஜியோ, லார்நாட், கிரெடானே, மோஸ்கா, பான், மாரியட், பாஸே, பைனெர், ஓடேகார்ட், ஜோகின் பிரீட்ரிக் முதலியோரின் நூல்களிலிருந்து ஸ்ரீ ஐயங் கார் மேற்கோள்களை எடுத்துக் கூறுகிறார்.

வகுப்பினருக்கும் பிரதிநிதித்துவம் வகித்தன. ஜனநாயகம் விருத்தி யடைந்து வருகையில் வேறு ஒரு விதத்தில் கட்சிகள் பிரிந்தன. வோட்டுரிமை விரிவாக்கப்படுவதை ஆதரிப்போரும் எதிர்ப்போரும், வரி யற்ற வர்த்தகத்தை அல்லது பாதுகாப்பை ஆதரிப்போரும் கட்சி பிரிந்தனர். அயர்லாந்துக்குச் சுதந்திரம் வழங்கவேண்டும் என்போரும், அதை எதிர்ப்போருமாக வேறு ஒரு பிரிவு வந்தது. யுத்தகால நெருக்கடியின் விளைவாக, கட்சி-அரசியல் முறை இங்கிலாந்தில் அநேகமாய்ச் சின்னுபின்னமாகி விட்டது. அடையாளச் சீட்டுகள் மிஞ்சியிருக்கின்றனவே ஒழிய, சில வருஷங்களாகத் தேசிய சர்க்கார்தான் அங்கு இருந்து வந்திருக்கிறது. இங்கிலாந்தின் அரசியல் சரித்திரத்தில் இதுவரை இருந்து வந்துள்ள கட்சிகளைப் போல, சோஷலிஸ்டுகளும் ஒரு கட்சி என்று கருத முடியாது. உறுதியும் விட்டுக் கொடுக்காத சுபாவமும் உள்ள சோஷலிஸ்டுகள் கணிசமான மெஜாரிடியுடன்கூடப் பார்லிமெண்டுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டால், இப்போதைய அமைப்பை அடியோடு மாற்றி விடுவர். அதன் விளைவாகக் கட்சி-சர்க்கார் என்பதே அடியோடு இருக்காது. கட்சி முறை வியக்தமாகச் சிதைந்து வந்தபோதிலும், பல வருஷங்களாக பிரிட்டிஷ் சர்க்கார் பலமும் ஸ்திரத் தன்மையு முள்ளதாக இருந்து வந்திருக்கிறது. லிபெரல்கள் அநேகமாய் அற்றுப்போய் விட்டிருப்பதும், தொழிலாளர் பிரிவின் 'படிப்படியான' தத்துவார்த்த சோஷலிஸமும், தொழிற் சங்கவாதிகளில் பெரிய பகுதிகள் தேசிய சர்க்காரை ஆதரிப்பதும் ஒரு புதிய போக்கை நிலைநிறுத்தி விட்டன. கட்சிச் சச்சரவுகளையும், அகப்பட்டதைச் சுருட்டும் போக்கையும் விட்டொழித்து, தேசம் பூராவின் க்ஷேம லாபத்துக்கு ஏற்றவாறு ராஜரிகத்தை நடத்தக்கூடியவாறு ஜனநாயகத்துக்குப் புத்துயிர் அளிப்பது என்ற உறுதியை அது காட்டுகிறது. தேசிய சர்க்கார் விரும்பத் தக்கதுதானு என்பது பற்றி பிரைஸுக்குள்ள சந்தேகங்களைச் சென்ற பத்து ஆண்டுகளின் சரித்திரம் அகற்றி விடுகிறது. பிரான்ஸிலும் அமெரிக்காவிலும் இத்தகைய போக்கே காணப்படுகிறது. மேற்கத்தி நாடுகளில் கட்சி

முறையால் அனுகூலங்கள் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்கள் தீர்ந்து போய்விட்டதாகவே தோன்றுகிறது.

கட்சிச் சார்பற்ற தேசிய சர்க்கார்

கட்சி முறை-அரசியலுக்கு மாற்று நிச்சயமாகத் தேசிய சர்க்கார்தான். அது கட்சிப் பற்றில்லாதோர் அடங்கிய சர்க்காராக இருக்கலாம். ஆனால் எல்லாக் கட்சிகளும் சேர்ந்த கூட்டு-சர்க்காராக இருக்கலாகாது. கூட்டு-சர்க்கார் முறை அடியோடு திருப்தியற்றது, கட்சி முறையின் குணங்களில்லாமல் அதன் தோஷங்களை யெல்லாம் அதில் காணலாம். கட்சிச் சார்பற்ற சர்க்கார்தான் உண்மையான தேசிய சர்க்காராக இருக்க முடியும். அது பலமுள்ள சர்க்காராக இல்லாமலிருக்குமே என்ற ஆட்சேபம், ஜனநாயகத்துக்கு ஜீவாதாரமான ஓர் அம்சத்தைப் பொருட்படுத்தவில்லை யென்றே தோன்றுகிறது. ஜனநாயகத்துக்குள்ள பலமோ, பலவீனமோ தான் சர்க்காரிலுமிருக்கும். ஜனநாயகத்தைப் பலவீனப் படுத்தாமல், செயற்கைச் சாதனங்களின்மூலம் சர்க்காரைப் பலப்படுத்த முடியாது. யதேச்சாதிகார முறைகள் உட்புகாமலும், ஏதாவது ஒரு வகையில் ஸர்வாதிகாரத்தை வருந்தி அழைக்காமலும் இதைச் செய்யமுடியாது. தேசியசர்க்கார் பலமும் ஸ்திரத்தன்மையுமுள்ளதாக இராது, கட்சி-சர்க்கார்தான் அப்படியிருக்கக் கூடும் என்பது நிரூபிக்கப்படாத அடிப்படை; அனுபவத்துக்கு இது முரணாயிருக்கிறது. பிரதிநிதித்வ ஜனநாயக சர்க்கார் பலமும் ஸ்திரத்தன்மையுமுள்ளதாக இருக்க முடியும் என்பதை அமெரிக்காவில் அமல் நடக்கும் பிரெஸிடெண்ட் - ஆட்சிமுறை காண்பிக்கிறது. இன்று இங்கிலாந்திலுள்ள தேசிய சர்க்கார் முந்திய சர்க்கார்களை விட அதிக பலமும் ஸ்திரத்தன்மையுள்ளதாக இருக்கிறது. இதற்கு நேரெதிராக பிரெஞ்சு மந்திரி சபைகள் அடிக்கடி கவிழ்ந்து விடுவதிலிருந்து, கட்சி முறை எல்லா நாடுகளிலும் சர்க்காரின் ஸ்திரத்தன்மைக்குச் சாதகமானதல்ல என்று ஏற்படுகிறது. பிரெஞ்சுக் கட்சிகள் இங்கிலீஷ் கட்சிகளைப் போன்றவை யல்ல எனக் கூறுவது முரணான வாதமாகும்.

பயனுள்ள வகையில் வோட்டர்களின் அபிப்பிராயங்களைத் திரட்டுவதால் கட்சிமுறை இருக்க நியாயமுண்டு என்பது இரண்டாவது வாதம். ஆனால் கட்சி - சாதனங்களால் வோட்டர்களின் உண்மையான அபிப்பிராயங்கள் வெளிப்படுவதற்குப் பதிலாக, கட்சியின் நிர்ப்பந்தம், தொடர்ச்சியான-கடுமையான-கட்சிப் பிரசாரம் இவற்றின் விளைவாக அந்த அபிப்பிராயங்கள் ரொம்பவும் திரிந்து போகின்றன. கட்சி-கோஷங்கள், பிரசார வித்தைகள், படைபோலத் திரண்டு ஆதரவு தருவோரின் காட்சி, இவையெல்லாமாகச் சேர்ந்து மனத்தை இஷ்டப்படி இழுத்துவிடுகின்றன. இரண்டாவதாக, கட்சியே இயக்கத்தை நடத்தாவிடினுங்கூட அபேட்சகர்கள், அவர்களை ஆதரிப்போர், வோட்டர்கள் முதலியோரின் பிரசங்கங்களுடன் கூடிய ஒரு பொதுத் தேர்தலே அபிப்பிராயத்தின் போக்கைக் காட்டுவதற்குப் போதுமானது. மூன்றுவதாக, சட்ட சபையில் பல பிரதிநிதிகள் செய்யும் விவாதங்கள், ஒரு குறிப்பிட்ட கொள்கை அல்லது திட்டத்துக்குச் சாதகமாகவும் பாதகமாகவும் கூறப்படும் வாதங்கள், இவற்றிற்கு அனுசரணையாக வெளியே பொதுஜன அபிப்பிராயமும் பத்திரிகைக் கிளர்ச்சியும், ராஜீயத் தலைவர்கள் பேசுவதும் எழுதுவதும் காரியம் கைகூடுவதற்குப் பயனுள்ளவை, போதுமானவை.

அரசியல்-கட்சிகளைத் தடைசெய்ய வேண்டும்

கட்சி முறைக்காகப் பரிந்து பேசும் சிலர் கட்சிகள் இருந்தே தீரும் என்று வாதாடுவதுண்டு. மக்களிடையே கருத்து-வேற்றுமை இருக்கத்தான் செய்யும் என்பதையும், ஒரே விதமான அபிப்பிராயமுள்ளவர்கள் சில காரியங்களுக்காக ஒன்று சேரலாம் என்பதையும் தாராளமாக ஒப்புக்கொள்ளலாம். அத்தகைய வேற்றுமைகளால் அநேகமாய் அனுகூலமுண்டு. ஜனநாயகத்தின் வளர்ச்சிக்கும், தீர ஆலோசித்துச் சரியான கொள்கை உருவாவதற்கும் சில சமயங்களில் அவை அவசியமுமாகும். கட்சியுணர்ச்சி முழுக்க முழுக்க ஊறிக்கிடக்கும்படியான வகையில் கட்சியை அமைப்பதோ, கட்சியின் பெயரால்

சட்டசபைத்தேர்தல்களில் அபேட்சர்களை நிறுத்தித்தேர்தல் இயக்கத்தை நடத்துவதோ, அல்லது உயர்ந்த ராஜ்யாதிகாரத்தைப் பெரியதோ சிறியதோ ஆக இருக்கும் ஒரு கோஷ்டியின் அனுகூலத்துக்காகக் கைப்பற்றுவதோ இதற்கு அவசியமேயல்ல. எல்லா அரசியல்—பொருளாதாரப் பிரச்னைகளிலும் ஒரே கருத்துள்ள பிரஜைகளை ஒரே ரீதியில் கட்சி சேர்க்கத் தேவையில்லை. கட்சியின் அல்லது தலைவனின் நலனையே பிரதானமாகக் கருதும் கட்டுத் திட்டங்களுடன், ராணுவ யந்திரம் போல எதிர்ப்பாளரைத் தாக்கும் வகையில் கட்சி அமையக் கூடாது. அது வளைந்து கொடுக்க முடியாததாகவும் இருக்கலாகாது. தங்கள் காரியங்களைச் சாதித்துக் கொள்வதற்கு வேண்டிய துணிச்சலும், சக்தி மிகுந்த போட்டிக் கோஷ்டிகளாகத் தங்களை அமைத்துக் கொள்வதற்கு வேண்டிய சாதுரியமும் தலைமையும் இல்லாத மைனரிடிகள் இருக்குமிடங்களில், இத்தகைய சாதனங்களால் சுதந்திரத்துக்கு ஆபத்துத்தான் ஏற்படுகிறது. ஜனநாயக நாடுகளில் கட்சி-அமைப்பும் கட்சிக் கட்டுப்பாடுந்தான் கட்சிகளின் தன்மையை அடியோடு மாற்றி அவற்றைக் கெடுதல் நிறைந்த சக்திகளாக மாற்றிவிட்டிருக்கின்றன. அமெரிக்காவில் நடைபெறும் பரீட்சை, ஆரம்பத்தில் கட்டுதிட்டத்துடன் கூடிய கட்சி முறையை அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை. கட்சியில் 'ஹோதா'வுள்ள குழு பின்னால் புகுத்தப்பட்ட ஏற்பாடே என்பதும் தெளிவான விஷயம்.23 தன்னுடன் போட்டியிடும் அல்லது தன்மீது ஆதிக்கம் செலுத்தும் ஓர் அதிகார ஸ்தாபனமாக நாட்டின் துரைத்தனமானது எந்தக் கட்சியையும் அங்கீகரிக்கக் கூடாது. அது ஓர் அதிகாரத்துக்குள்

23 *1826—1860* ஆண்டுகளில் அமெரிக்காவில் கட்சி முறை உருவாயிற்று. இதனால் கிடைத்த அனுகூலங்களை விட ஏற்பட்ட பிரதிகூலங்களே அதிகம். ஆஸ்ட்ரேலியா, நியூஜிலாந்து, கானடா, பிரிட்டன்—இவற்றிலும் கட்சி முறையினால் நன்மையைவிடத் தீமையே அதிகமாக நேரிட்டிருக்கிறது என்று பிரைஸ் கூறுகிறார்.

அதிகாரமாக இருக்கக் கூடாது. எனவே சட்டசபைகளிலோ, தேர்தல்களிலோ, அல்லது ஒரு சர்க்காரை நடத்துவதற்காகவோ அரசியல் கட்சிகளை அங்கீகரிக்கக் கூடாது. கட்சி ஸ்தாபனமும் கட்சி நிதி திரட்டலும் தடுக்கப்பட்டுக் குற்றங்களாக்கப்பட வேண்டும். பொருளீட்டும் பெரிய வர்த்தக ஸ்தாபனங்கள் அல்லது கம்பெனிகள் சட்ட விரோதமாக்கப்படலாமென்றால், ராஜ்யாதிகாரத்தைக் கைப்பற்றத் தலைப்பட்டு உழைக்கும் அரசியல் கட்சிகளைத் தடை செய்வதில் சிரமமிருக்க வேண்டியதில்லை. சட்டத்தை மீறி அமைக்கப்படும் அத்தகைய கட்சிகளைச் சேர்ந்தவர்களின் அபேட்சகர்களாக நிற்கும் உரிமையும், வோட்டளிக்கும் உரிமையும், சட்டசபையில் ஸ்தானம் வகிக்கும் உரிமையும் ரத்து செய்யப்பட வேண்டும். மற்ற எல்லாக் காரியங்களுக்காகவும் பிரஜைகள் ஒன்று சேருவதற்குள்ள ஜீவாதாரமான உரிமைகள் கொஞ்சமும் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டும். எந்தக் குறிப்பிட்ட கொள்கையையேனும் ஆதரிக்கும்படி அல்லது எதிர்க்குமாறு மக்களுக்கு அறிவுறுத்துவதற்குத் தனிப்பட்டவர்களுக்கும் சங்கங்களுக்கும் உரிமை யிருக்கவேண்டும். அதாவது, சட்டம் அனுமதிக்கும் வரம்புகளுக்கு உட்பட்டுக் கிளர்ச்சி செய்யும் உரிமை அப்படியே இருந்தாகவேண்டும். ஒரு மாகாண சர்க்காரை நடத்துவது சம்பந்தமாகக் கட்சி முறைக்குள்ள ஆட்சேபம், இந்தியாவுக்கு ஸ்வராஜ்யம் அல்லது பரிபூர்ண சுதந்திரத்தைச் சம்பாதித்துக் கொடுப்பதற்காக, அல்லது இந்தியாவில் எந்த நிர்வாகத்துக்கும் எதிராகப் பிரஜா உரிமைகளை நிலைநிறுத்துவதற்காக அமைக்கப்படும் கட்சிகள் விஷயத்தில் பொருந்தாது. அந்தக் காரியங்களுக்காக இதற்குமுன் போலவே இனியும் கட்சி ஸ்தாபனம் அத்தியாவசியமாகும்.

கட்சி-அரசியல் தோன்றிய நாட்டிலேயே அது அநேகமாய் உதவாக்கரையாகிவிட்ட பிறகு இந்நாட்டில் அதைக் கடைப்பிடிப்பது ஆழ்ந்த கவலையை உண்டுபண்ணுகிறது. இந்தியாவிலுள்ள நிலைமைகளின்கீழ், கட்சியின் தீமைகள்

ரொம்பவும் அதிகமாக இருக்கும். நன்மை பயக்கக்கூடிய இரு கட்சி முறை இந்நாட்டில் அநேகமாய் அசாத்தியம் என்றே தோன்றுகிறது. ஜனங்களை மட்டுமின்றிச் சட்ட சபையையும் பிளவுபடுத்தும்படியாகக் கட்சி அனுமதிக்கப் படுமானால் அதனால் பயனே இல்லை. ஜாதி, மதம், நிறம், மாகாணவாரி அல்லது பாஷை வேற்றுமைகளின் அடிப் படையில் உள்ள கட்சிகள், ஹிந்து, முஸ்லிம், சீக்கிய வகுப்புப் பிரிவினைகளைப் பலப்படுத்தி, இன்றிருப்பதை விட அவற்றை மேலும் கடுமையான தாக்கும். சென்ற தேர் தலில் காங்கிரஸுக்குக் கிடைத்த பிரமிக்கத்தக்க வெற் றிக்கு ஓரளவு காரணம் முந்திய அதிகாரவர்க்க அமலை எதிர்த்துப் போராடியதன் மூலம் அதற்குக் கிடைத்த நன்மதிப்பாகும். ஆனால் அதன் முக்கியமான காரணம், மாண்டேகு-செம்ஸ்போர்ட் சீர்திருத்தங்களின்கீழ் அமலி லிருந்து வந்த கட்சிமுறையிடம் ஜனங்களுக்கு ஏற்பட் டிருந்த அதிருப்திதான். எல்லாக் கட்சி வேற்றுமைகளை யும் ஒழித்துவிடவேண்டும் என்ற உத்தேசத்துடன்கூட ஒரு தேசியக் கட்சியாகக் காங்கிரஸ் தேர்தலில் வெற்றி பெற்றது. சில மாகாணங்களில் வகுப்புவாதமே இன்னும் கட்சி யடிப்படையாக இருந்து வருகிறது. இன்னும் சில வற்றில் இப்போதைக்கு அது ஒருபடுதாவைப் போர்த்துக் கொண்டிருந்த போதிலும், அதன் அபாயகரமான எதிர் கால சாத்தியங்களை அசட்டை செய்ய முடியாது. கட்சி முறை நடக்கவேண்டுமென்றால் பெரிய பிரச்னைகள்மீது தெளிவான, உண்மையான வேற்றுமைகள் அவசியம். இந்நாட்களில் அத்தகைய வித்தியாஸமெதுவும் இல்லாம லிருப்பதால்தான் இங்கிலாந்தில் கட்சிகள் சிதறிவிட்டன. விழிப்புப் பெற்றதொரு தேசிய மனோபாவம் அத்தகைய வேற்றுமைகளைக் குறைத்துக்கொண்டு எல்லாப் பெரிய பிரச்னைகள்மீதும் அதிகமான உடன்பாட்டை ஏற்படுத் திக்கொள்ளவும் செய்கிறது. இந்தியாவிலும் இதே போக்கைத்தான் காண்கிறோம். உதாரணமாக மது விலக்கு, சுதேசி, நிலத் தீர்வைக் குறைவு, ஆலயப் பிர வேசம் முதலியவை (அவற்றை நடத்திவைக்கும் முறைகள் ஒரு புறமிருக்க) எல்லாக் கட்சிகளுக்கும் வகுப்புகளுக்கும்

பொதுவானவை. சர்ச்சை மிகுதியாயுள்ள கல்வி போன்ற பிரச்னையில் இங்கிலாந்தில் அரசியல் கட்சிகளிடையே தீவிர அபிப்பிராயபேத மிருந்தது. ஆனால் இங்கே இதன்மீது கட்சியாகப் பிரியவேண்டிய அளவுக்கு உறுதி யான திடநம்பிக்கைகள் நமக்கு ஏற்படவில்லை. பழைய வழியினர், மிதவாதிகள், தீவிரவாதிகள் என்ற உண்மை யான பிரிவினைகள் இந்தியாவில் சாத்திய மல்ல. இந்தி யாவின் இறுதியான லட்சியத்தைப் பற்றிக் காங்கிரஸுக் கும் முஸ்லிம் லீகுக்கு மிடையே ஒரேவிதமான அபிப் பிராய மிருந்து வருகிறது. வேறு மாதிரிக் கருத்துள்ள செயலாற்றும் பிரிவோ, பயனுள்ள வகையில் உழைக்கும் கட்சியோ கிடையாது. இந்தியாவில் கட்சிகளின் பிரி வினைக்குப் பொருளாதார நலன்கள் ஸ்திரமான அடிப் படையாக இருக்கக்கூடியதும் துர்லபமே. ஸ்திரமாக இருந்து பயனுள்ள வகையில் உழைக்கக்கூடிய தனிக் கட்சி களை அமைக்கக்கூடிய நிலைமையில் ஜமீன்தார்களோ, நிலச்சுவான்களோ, வர்த்தகர்களோ, லேவாதேவிக்காரர் களோ அல்லது தொழில் முறை வகுப்பினரோ இல்லை. நாட்டின் ஜனத்தொகையில் மிகப் பெரும்பான்மையினர் விவசாயிகள், அவர்களுக்கு சாசுவத விரோதியாக எந்தக் கட்சியும் தோன்ற முடியாது. வேளாண்மையி லீடுபட் டிருப்போருக்கும் தொழிலாளருக்கும் தீவிரப் பகைமை யெதுவும் கிடையாது. சோஷலிஸப் பிரச்னைமீது எதிர் காலத்தில் ஒருகால் மக்கள் பிரியக்கூடும். அப்படி யாயின், இங்கிலாந்தில்போல அது பயனற்றதாகிவிடும். இல்லாவிடில் இந்தியாவில் இப்பொழுதுள்ள சமுதாய அமைப்பை அழித்துவிட்டுக் கட்சியே இல்லாத ஒரு புது அமைப்பை அது தோற்றுவித்து விடும்.

இங்கிலாந்தில் கட்சி–சர்க்கார் முறை வெற்றிகர மாய் நடந்திருக்கிறது என்றால், அதற்குக் காரணம் அதில் உள்ளூர ஏதோ குண விசேஷம் இருப்பதல்ல: பெருங் குறைகளிருந்துங்கூட அது பலித்திருக்கிறது. மற்ற விஷயங்களிற்போலவே இதிலும், ''விவரணங்களிலும் பொதுக் கோட்பாடுகளிலும் உள்ள அவநம்பிக்கை என்ற

நற்குணத்துடன்கூட", 24 ஆங்கிலேயர்கள் தங்கள் ஜாதிக்கென இருந்துவரும் சாமர்த்தியத்துடன், சம்பிரதாயப்படி, தங்களிடையே தோன்றிய ஸ்தாபனங்களை மிகச் சிறந்தவாறு பயன்படுத்திக் கொள்கிறார்கள். அந்த ஸ்தாபனங்கள் எவ்வளவுதான் முரண்பாடுகள் நிறைந்தனவாக, அசங்கியமாக, விபரீதமாக இருந்தாற்கூட அவர்கள் பொருட்படுத்துவதில்லை. இன ஒற்றுமை, விரு விருப்புடன் கூடிய பொதுஜன அபிப்பிராயம், இவ்விரண்டும் பலமாக இருப்பதன்மூலம் கட்சிமுறையின் கேடுகள் இங்கிலாந்தில் மிதப்பட்டிருக்கின்றன. குறை கூறுவதையும் எதிர்ப்பையும் லட்சியம் செய்யாமல், அக்கிரமமாகத் தன் பலத்தைப் பிரயோகிப்பதினின்றும் மெஜாரிடிக் கட்சியைத் தடை செய்ய வல்லது, செயலாற்றும் பலத்துடன்கூடிய, எண்ணிக்கை நிறையவுள்ள, மத்திய அபிப்பிராயந்தான். அதைச் சிருஷ்டிப்பது அல்லது நிலை நிறுத்துவது சிரமமாக இருப்பதற்குக் காரணம், மெஜாரிடி அபிப்பிராயத்தை ஆதரிக்கும் போக்கு பலமாக இருப்பதும், மைனாரிடிகளுக்குத் தைரியமில்லாம விருப்பதும் தான். ஆங்கில ராஜீய வாழ்வின் அஸ்திவாரமே, விட்டுக் கொடுத்துச் சமரசம் செய்துகொள்ளும் சுபாவந்தான். இந்தியாவிலோ பலத்துடன் கூடிய ஒரு மெஜாரிடிக் கட்சியானது விட்டுக் கொடுப்பது அரிது. மைனாரிடிக் கட்சியானது போரிடுவதற்குப் பதிலாக, சமரஸத்தில் ஆரம்பித்துச் சரணாகதியில் முடிகிறது. சுதேச யதேச்சாதிகாரத்துக்கும் அந்நிய ஆட்சிக்கும் நெடுநாளாக இந்தியா அடிமைப் பட்டிருந்திருப்பதன் விளைவுகள் தாம் இவை. இவற்றைக் கட்சிச் சார்பற்ற ஜனநாயகம் நெடுநாள் அமல் நடப்பதன் மூலமாயன்றி வேறு வகையில் வேரறுக்க முடியாது. தனி விவகாரங்களில் நற்குணமென மதிக்கப்படுபவைகளைப் பொது விவகாரங்களில் புகுத்தக் கூடிய தன்மை யுடையவர்கள் நாம். பல நூற்றாண்டுகளாயுள்ள மதப்பற்றே இதற்குக் காரணம் என்பதையும் நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். இந்தியாவில் எந்த அரசியல் கட்சியும் ஒரு மதப்பிரிவுடன் ஐக்

24 'தற்கால சரித்திரம்.' லார்ட் ஆக்டன். 6-து பக்கம்.

கியப்படும் போக்கில் செல்லக்கூடும். எதிர்ப்பையும் குறை கூறலையும் கண்டு அது சகியாமற் போகலாம்.

சமாதான காலத்தில் சாத்தியமே

ஒவ்வொரு ஜனநாயக நாட்டிலும், தேசிய நெருக்கடி தோன்றும்போதெல்லாம், கட்சி முறையைக் கைவிட்டு ஒரு தேசிய அல்லது கட்சிச்சார்பற்ற சர்க்காரைப் பதவியில் அமர்த்துவதுதான் சகஜம். கட்சி-சர்க்கார் உள்ளூரவே மட்டமானது என்பது மட்டுமின்றி, கட்சிச் சார்பற்ற சர்க்கார் நடப்பது சாத்தியமே என்பதையும் அது முரணில்லாதவாறு நிரூபிக்கிறது. நெருக்கடிகளின்போது அது விரும்பத் தக்கதென்றால், சாதாரண காலங்களில் அது விரும்பத்தகாததாகி விடுகிறதென்று எப்படிச் சொல்ல முடியும்? கட்சியே யில்லாத ஒரு சட்டசபை ஏற்பாட்டிலும் எவ்விதமான சிரமும் இருப்பதாகக் காணோம். ஒரு குறிப்பிட்ட பிரச்னைமீது ஒரே மாதிரி நினைக்கும் மெம்பர்கள் ஒருவரை யொருவர் ஆதரித்து அதன்மீது ஒன்று சேர்ந்து வோட்டளிப்பர். கட்சி யுணர்ச்சி இல்லாமலிருந்தால், சட்ட சபையில் விவாதிக்கப்படும் ஒரு பிரச்னைமீது ஏற்படும் உடன்பாடு, முன்னைவிட அதிகமாகவும் உண்மை நிலையை இன்னும் சிறப்பாகப் பிரதிபலிப்பதாகவும் இருக்கும். அதற்கு எதிர்ப்பும் கட்சிச் சார்பற்றதாகவே இருக்குமாகையால் அது கட்டாயம் அந்த அளவுக்குப் பலங் குன்றி யிருக்கும். சோல்ஜர்கள் போலக் கீழ்ப்படியும் கட்டுபாட்டுடன் கூடிய ஒரு கட்சியாக மெம்பர்களை வலித்திழுத்து வைத்திருக்க முடிந்தாலொழிய, சட்டசபை மெம்பர்களில் பெரும்பான்மையோர் சர்க்காரைக் கவிழ்த்துவிடவே சாதாரணமாக முயல்வர் என்று கருதுவது ஜனநாயகத்தில் நம்பிக்கையின்மையையும் குழப்பம் நிறைந்த சிந்தனையையுந்தான் காட்டுகிறது.

அமெரிக்க பிரெஸிடெண்ட் ஆட்சி முறை மொத்தத்தில் வெற்றிகரமானதென்றே சொல்ல வேண்டும். ஸ்திரமான சர்க்கார் அதன்மூலம் அமைகிறது என்பது

வாஸ்தவம். ஆனுல் நடை முறையில் அதில் ஒரு பெரிய குறைபாடு புலப்படுகிறது. சர்க்கார் சட்ட சபைக்குப் பொறுப்பு வாய்ந்ததல்ல. இரண்டுக்குமிடையே சுமுக மான ஒத்துழைப்பு இருந்துவரும் என்ற உத்தரவாத மில்லை. எனவே அவ்வப்பொழுது நெருக்கடி தோன்று கிறது. நமக்குத் தேவையானது, ஆங்கில அமெரிக்க முறைகள் இரண்டின் அம்சங்களுமடங்கிய ஒரு ஏற்பாடு தான். ஷை இரண்டின் குறைகளையும் விலக்கி அதைத் தயாரிக்க வேண்டும். அவற்றின் சிறந்த அம்சங்களைவிட இத்திட்டம் தெளிவான சீர்திருத்த ஏற்பாடாக இருக்க வேண்டும்.

ஸ்விஸ் ஜனநாயகம் கட்சி சர்க்காரையோ, நல்ல கட்டு திட்டங்களுடன் கூடிய கட்சி முறையையோ அங்கீ கரிக்க வில்லை.25 இந்திய நிலைமைகளைக் கவனிக்குமிடத்து ஒரு தேசிய சர்க்கார்தான் பலமும் ஸ்திரத்தன்மையும் உள்ளதாக இருக்க முடியும் என்பது தெளிவாகிறது. இரண்டு அல்லது அதிகமான கட்சிகளிருக்கும் முறையை விட ஒரே கட்சி முறை ஜனநாயகத்துக்கு அதிக அபாயமுள்ளது. எனவே இந்தியாவின் தேசிய சர்க்கார், கட்சிச் சார்பற்ற ஜனநாயகத்தின் கட்சிச் சார்பற்ற சர்க்காராக இருக்கவேண்டும். பெயரளவிலன்றி, துல்லிய மான நியாயம் வழங்குவதை லட்சியமாகக் கொண்டு, இந்தியாவின் உணர்ச்சி மிகுந்த ஜனநாயகத்தில் தேவைகள் பூர்த்தியாக வேண்டுமானுல் உண்மையான பொறுப்பாட்சி ஏற்பட வேண்டும்.

மந்திரி சபையைத் தேர்ந்தெடுக்கலாம்

ஒரு பொதுத் தேர்தலில் மற்றப் பிரதிநிதிகளுட னேயே மாகாண மந்திரி சபையையும் தேர்ந்தெடுக்கலாம். இதன்மூலம் மந்திரிகள் சட்டசபை மெம்பர்களா யிருப்பர். அமெரிக்க முறையிலுள்ள குறைபாட்டை இவ்வாறு தவிர்க்கலாம். சாதாரணமாக அவர்கள் அடுத்த தேர்தல் நடந்து சட்டசபை கூடும்வரை பதவி

25 'பிரைஸ்'—1 பக்கம், 390.

வகிப்பர். மெம்பர்களில் மூன்றிலிரண்டு பங்கினர் போன்ற ஒரு விசேஷ மெஜாரிட்டியுடன்கூடத் திட்டமான நம்பிக்கை யில்லாப் பிரேரணையை நிறைவேற்றினுலொழிய, எந்த ஒரு குறிப்பிட்ட திட்டம் அல்லது கொள்கைமீது தோல்வியேற்பட்டால்அவர்கள் ராஜிநாமாச்செய்யவேண்டியதில்லை. எந்தப் பிரச்னைமீதாயினும் பாதகமான வோட் அளிக்கப் படுமாயின் அதை நம்பிக்கையில்லா வோட் என மதித்து ராஜிநாமாச் செய்ய மந்திரிசபைக்கு உரிமை கிடையாதென பிரைஸ்-ம் லஸ்கியும் கூறுவதை நான் ஒப்புக்கொள்கிறேன்.26 கூட்டுப் பொறுப்பு விதி இருந்துவரவேண்டும். எந்த நிர்வாக அல்லது நியாய மன்றத்திலும் போலவே மந்திரி சபையின் மெஜாரிட்டித் தீர்மானத்தை மந்திரி சபையின் தீர்மானமாகவே பாவிக்கவேண்டும். மந்திரிசபையில் இடைக்காலத்தில் காலியாகும் ஸ்தானங்களைச் சட்டசபை பூர்த்தி செய்யலாம். மந்திரிசபைக் கூட்டங்களுக்கு ராஜாங்கத்தின் தலைவர் அக்ராஸனம் வகிக்கக்கூடாது. மந்திரிகள் தரும் யோசனைப்படி அவசர காரணங்களை முன்னிட்டுச் சட்டசபையைக் கலைக்க அவருக்கு அதிகாரம் இருக்கலாம். ஒரு மந்திரி சபை ராஜிநாமாச் செய்ததன் பேரில், அதற்குப் பதிலாக வேறு மந்திரி சபையைத் தேர்ந்தெடுக்குமாறு அவர் சட்டசபையைக் கேட்கலாம்.

சட்டசபைக்கு ஜவாப் சொல்லவேண்டியதும், அதனுல் பதவியிலிருந்து விலக்கப் படக்கூடியதுமான மந்திரிசபையிருந்தால் பொறுப்பாட்சியின் சோதனைகளில் ஒன்றில் தேறியதாகக் கொள்கிறேும். சட்டசபையில் கட்சி மெஜாரிடியை நம்பி அதன்மீது ஆதிக்கம் செலுத்தும் மந்திரிசபைக்குப் பதிலாகக் கட்சிச் சார்பற்ற மந்திரிசபை ஏற்படுவதால், விவகார அமைப்பில் மற்ெருரு மாறுதல் அவசியமாகிறது. இப்பொழுது பண விஷயங்களில் மட்டு மின்றி மற்ற எல்லா விஷயங்களிலும் சர்க்காரைக் கட்டுப்படுத்தக்கூடிய தீர்மானங்களை நிறைவேற்றச் சட்டசபைக்கு அதிகாரம் இருக்கவேண்டும். சட்டசபைதான்

26 லஸ்கி. ''ராஜீயத்தின் இலக்கணம்'' 348-ம் பக்கம். பிரைஸ் 2. 513-பக்கம்.

உண்மையில் ஜனநாயகத்தின் பிரதிநிதி. சாத்தியமான அளவுக்கு அது ஆளவேண்டும். இக்காலத்திய சட்டசபை பழைய அதீனிய ஜனத்திரளோ அல்லது பொதுக்கூட்டமோ அல்ல. ஏறக்குறைய பயிற்சி பெற்ற மக்கள் அன்று டம் கூடி பட்ஜெட், நிதிமசோதாக்கள், வேறு சட்டங்கள் முதலியவைமீது தீர்ப்புக் கூறுவதற்கு வேண்டிய யோக்கியதை யுள்ளவர்கள் கொண்ட சபை இது. எனவே தன் விருப்பப்படி எவ்வளவு நிர்வாக விவகாரங்களில் சாத்தியமோ அந்த அளவுக்கு நிர்வாக சர்க்காரைக் கட்டுப்படுத்தக் கூடியதாகத் தீர்மானங்களை நிறைவேற்றும் சக்தி ஏன் இதற்கு இருக்கக்கூடாது என்பதற்குக் காரணங்கள் இல்லை. சம்பந்தப்பட்ட மந்திரியின் யோசனைகள் நியாயமானவையா யிருந்தால் அவை ஒப்புக்கொள்ளப்படும், வேறுவிதமாய் நினைக்கக் காரணமில்லை. சட்டசபையின் தீர்மானங்கள் சிபார்சுகளாகவே அமையவேண்டு மென்பது இப்போதைய விதி. ஆனால் இப்பொழுது கட்சி-சர்க்கார் இருப்பதைக் கவனிக்குமிடத்து, யதேச்சையாகவே தவிர வேறு விதத்தில் ஒரு தீர்மானத்தைச் சட்டசபை நிறைவேற்றுவது துர்லபம். சர்க்கார் ஒப்புக்கொண்டால் அல்லது கட்சிப் பிரச்னையாக்காவிட்டால் தீர்மானங்கள் நிறைவேறலாம். கட்சிச் சார்பற்ற சர்க்கார்த் திட்டத்தில் சட்டசபையின் தீர்மானம் எதுவும் சிபார்சாக இராது. இப்போதைய நடைமுறை சட்டசபை மெம்பர்களை ஒரு தர்ம சங்கடத்தில் வைக்கிறது. சர்க்காரின் நிர்வாகச் செயல்கள் எவ்வளவு தவருகவோ அல்லது மோசமாகவோ இருந்தபோதிலும் அவற்றை ஒப்புக்கொள்ளவேண்டும், அல்லது ஒன்றிரண்டு நிர்வாகத் தவறுதல்களுக்காக மந்திரி சபையை நீக்கிவிடவேண்டும் என்ற நிலைமை இருந்து வருகிறது. நிதி அல்லது வரையறுக்கப்பட்ட இதர விஷயங்கள் தவிர மற்றவை சம்பந்தமாகச் சபையின் தீர்மானங்களைப் பொருட்படுத்தாம லிருப்பதற்கு மந்திரி சபைக்கு இப்பொழுது யுக்தானுசார அதிகாரம் இருந்து வருகிறது. இது கட்சி சர்க்கார் முறையின் விளைவுதான். நிர்வாக விஷயங்களில் சட்டசபையின் அதிகாரத்தை இது கணிச

மாகக் குறைத்து விடுகிறது. இந்த நிர்வாக விஷயங்கள் சட்டத்தையோ அல்லது மான்யக் கோரிக்கைகளையோ போல முக்கியமானவையாக இருக்கலாம். இதற்கு ஒரே ஒரு பாதுகாப்பு அவசியம் என நான் நினைக்கிறேன். எதிர் பாராத நிர்வாக அல்லது இதர கஷ்டங்கள் போன்ற போதுமான காரணங்கள் இருந்தால், தன் தீர்மானத்தைப் புனராலோசனை செய்யுமாறு ஒரு பிரேரணை மூலம் சட்ட சபையைக் கேட்க மந்திரி சபைக்கு அதிகாரமிருக்க வேண்டும். அதன்பேரில் சட்டசபையானது தன் அசல் தீர்மானத்தைத் திருத்திக்கொள்ளலாம், ரத்து செய்யலாம் அல்லது ஊர்ஜிதப்படுத்தலாம். மேலேகூறியுள்ள விவகார சாதனத்தின் மூலம், சட்டசபைக்கு முழு ஜவாப்தாரித் வம் உள்ள ஒரு சர்க்கார் ஏற்பாடாகும். அது பலமும் ஸ்திரத்தன்மையும் உள்ளதாகவும் இருக்கும். ஜனநாயக மானது இடது சாரி அல்லது வலது சாரி ஸர்வாதிகார மாகச் சிரழியாமலிருப்பதற்கு இதுவே சிறந்த பாதுகாப் பாகும் என்று என் மனசுக்குப் படுகிறது.

ஆரம்பத்திலிருந்தே பொருளாதார நீதியை அஸ்தி வாரமாகக் கொண்டு இந்திய ஜனநாயகம் உருவாக்கப் படாவிடில், மேற்கத்தி நாடுகளிற் போல இங்கேயும் அது தோல்வி பெறும். ஒரு ஜனநாயக நாடானது சுதந்திரம், ராஜீய சமத்துவம் ஆகியவற்றின் பேரில் அமைக்கப்பட்டிருந்த போதிலும், பொருளாதார சமத் வம் அல்லது பொருளாதார நீதியின் அஸ்திவாரத்தின் பேரிலும் அதை அமைக்கவேண்டும். முதல் விஷயம் இந்தச் சர்ச்சையின் வரம்புக்கு உட்பட்டதல்ல. ஒரு புரட்சிகரமான வேலைத் திட்டம் அதில் உள்ளடக்கமா யுள்ளது. ஆரம்பத்தில் ஓர் இடதுசாரி ஸர்வாதிகா ரத்தில் அது கொண்டுபோய்விடத்தான் செய்யும். ஒரே ஒரு நாட்டில் மட்டுமே அது ஏற்றுக்கொள்ளப் பட்டது. மற்றவை பெரும்பான்மையும் அதை நிராகரித்துவிட்டன. அங்கேயும் அதன் சிறப்பும் சாசுவதத் தன்மையும் இனிப் பரீட்சித்துப் பார்க்க வேண்டியவை.

ஆனல் பொருளாதார நீதியானது அபிவிருத்திக் கொள்கை. அதை எந்த ஜனநாயகத்தாலும் அலட்சியம் செய்ய முடியாது. பழைய சம்பிரதாயங்களேயே இனியும் பின்பற்றிக் கொண்டிருக்க இக்கால அரசாங்கத்தினுல் முடியாது. தன் பிரஜைகளின் உயிர்கள், சொத்து சுதந்திரங்கள் ஆகியவற்றைப் பாதுகாப்பதற்கும், நிர்வாக ஸ்தாபனத்தை அமைத்துக் கொடுப்பதற்கும், மக்களேச் சமமாகப் பாவித்துச் சட்ட மியற்றவும் பலவேறு வசதிகளேச் செய்து கொடுக்கவுமே அது இருப்பதாக இனிக் கருதிக் கொண்டிருக்க முடியாது. நியாயமான ஒரு வாழ்க்கை நிலேயை அனுபவிப்பதற்குப் பரிபூர்ண சந்தர்ப்பங்களேயோ அல்லது சாதனங்களேயோ தன் பிரஜைகளுக்கு அது அளித்தாக வேண்டும். அதாவது எந்த அளவுக்கு வேலேயில்லாத் திண்டாட்டமும் வறுமையு மிருக்கின்றனவோ அந்த அளவுக்கு ஜனநாயகம் தோற்றதாகவே அர்த்தம். எவ்விதமான கஷ்டமு மில்லாமல், ஒவ்வொரு பிரஜையும் நியாயமான வாழ்க்கை வழியொன்றை அடைவதற்கு சர்க்கார் வசதி செய்ய வேண்டும்.

அம்மாதிரித் திறமையைப் பெறும் வரையில் சர்க்காரிலிருந்து ஒவ்வொருவனுக்கும் உதவி கிடைத்துவர வேண்டும். குடும்பத்தினராலோ அல்லது வேறு தனிப்பட்ட முயற்சியின் மூலமோ சம்ரக்ஷிக்கப்படாத வயோதிகர்களேயும் அசக்தர்களேயும், நிர்க்கதியாயுள்ள சிசுக்களேயும் பாதுகாக்கவேண்டியது சர்க்காரே. நவீன ஜனநாயக அரசியல் - சித்தாந்தத்தின் பொருளாதார அஸ்திவாரமானது உற்பத்திச் சாதனங்களேப் பெரும்பான்மையும் சர்க்காருக்குச் சொந்தமாக்குவதாக இருக்கவேண்டும். தனிப்பட்ட பிரஜைகள் சம்பந்தப்பட்டவரை இப்போதைக்கோ அல்லது இன்னும் நெடுநாளேக்கோ தனி நபரின் சொத்துரிமையை எடுத்துவிடுவது அவசியமெனத் தோன்றவில்லே. ஆனல், எல்லாப் பெரிய தொழில்களேயும் தேசத்துக்குச் சொந்தமாக்காமல் பொதுமக்களுக்குப் பொருளாதார நீதியை வழங்கமுடியாது. நாட்டின் கனிவர்க்க வசதிகளேப் பயன்படுத்துவது எப்பொழுதுமே

சர்க்காரின் நேரடியான பொறுப்பாக இருக்கவேண்டும். கம்பெனிகளிடமும் பெரிய ஸ்தாபனங்களிடமும் இப்பொழுது இருந்துவரும் உற்பத்திச் சாதனச் சொத்துக்களெல்லாம் சர்க்காருக்கு மாற்றப்படவேண்டும். எல்லாப் புதுத் தொழில்களும் சர்க்காருக்கே சொந்தமாக இருந்து அவர்களாலேயே நிர்வகிக்கப்படவேண்டும். பங்கு விற்று நிறுவப்படும் கம்பெனி முறையினுல்தான் உலகின் பொருளாதாரம் ரொம்பவும் மோசமான வகையில் அலங்கோலமாயிற்று. எனவே அவற்றை அடியோடு தடை செய்துவிடவேண்டும். கூட்டுத் தொழில் இப்படித்தான் நடக்கலாம், இவ்வளவு பேர்தான் கூட்டாளிகளாக இருக்கலாம் என்றும் கட்டுப்படுத்த வேண்டும். பாங்குகள், இன்ஷ்யுரன்ஸ் தொழில், கப்பல் போக்குவரத்து உட்பட எல்லாவற்றையும் சர்க்காரே முற்றிலும் சொந்தமாக்கிக் கொண்டு நிர்வகிக்கவும் வேண்டும். வேலை யில்லாத் திண்டாட்டத்தையும் வறுமையையும் நிவர்த்திக்கவும், தொழிலாளர் சம்பளம் உயருவதற்காகவும், ஏரி கால்வாய் போன்ற பெரிய நீர்ப்பாசனங்களையும், வேறு பொது நல வேலைகளையும், ஆயுத உற்பத்தியையும் சர்க்கார் திட்டம் போட்டு நடத்தவேண்டும். அதாவது எல்லா வகுப்பினரின் அடிப்படையான மானிடத் தேவைகளைத் திருப்தி செய்விக்கக் கூடியவாறு பொருளாதாரத் திட்டம் வகுத்து நடத்துவதே வேறிடங்களிற் போல இந்தியாவிலும் ஜனநாயகம் வெற்றியடைவதற்கு முதலாவது நிபந்தனை. பாமர மக்களின் பொருளாதார அபிவிருத்திதான் தன் பிரதான நோக்கம் என்று ஜனங்கள் நம்பும்படியாக எந்த அளவுக்குச் செய்ய முடிகிறதோ, அந்த அளவுக்குத்தான் ஜனநாயகம் ஸ்திரமாயிருக்க முடியும்.

நீதி மன்றங்களும் பிரஜா உரிமையும்

பிரதிநிதித்வ ஆட்சி முறையானது 'வெறும் வெற்று' விவகாரமாகிவிடாம லிருக்கவேண்டுமானுல், பிரஜைகளின் சுதந்திரத்தையும் சமத்வத்தையும் அது உறுதி செய்யவேண்டும். தேசிய நலன்களுக்கும் பிரஜைகளின் அடிவுரிமைகளுக்கும் பாதக மில்லாதவாறு சுதந்

திரத்தை அனுபவிக்கத் தனி நபருக்குள்ள உரிமை வரம் பற்றது. நாட்டின் சட்டங்களும் நீதி மன்றங்களும் இந்தச் சுதந்திரத்தை வெகு அக்கரையுடன் பாதுகாத்தாக வேண்டும். நாட்டின் பாதுகாப்பு அல்லது பொதுவாகப் பிரஜைகளின் க்ஷேமலாபம் இவற்றிற்கு அவசியமான அளவுக்குத் தனி நபரின் செய்கைக்குத் தடைகளை விதிக்க லாம். ஆனால் அப்படிச் செய்கையில் சட்ட நிரூபணங் களிலும் நிர்வாக நடத்தைகளிலும் சுதந்திரச் சுற்றுணர்ச் சியை வெகு சிரத்தையுடன் நிலைநிறுத்த வேண்டும். ஒரு யதேச்சாதிகார அல்லது அதிகார வர்க்க சர்க்காருக்கு எதிராகத் தனி நபரின் பிரஜாவுரிமைகளைப் பாதுகாப்பது எவ்வளவு அவசியமோ, அதே அளவுக்கு ஜனநாயக ஆட்சியின்கீழ் நடைபெறும் கட்சி சர்க்காருக்கு எதிரா கவும் பாதுகாப்பு இருக்கவேண்டும். கட்சி முறை அமல் நடக்குமிடங்களில் ஜனநாயக லட்சியங்கள் மட்டுமே போதிய பாதுகாப்பாகமாட்டா. எனவே இந்தியாவின் புது ஜனநாயகத்தின்கீழ் பிரஜைகளின் ஜீவாதார உரிமைகளை அரசியல் சட்டத்தில் சேர்த்தெழுதி உத்தர வாதம் செய்யவேண்டும்.

நீதி பரிபாலனமும், மக்களிடையே நியாயம் வழங்கு வதும் நீதி மன்றங்களின் பொறுப்பாக இருக்கவேண்டும். அவை அரசியல் சட்டத்துக்கும், சர்க்கார் சம்பந்தப்பட்ட வரை பிரஜைகளின் உரிமைகளுக்கும் பாதுகாப்பு அளிக் கும் சக்தியாக விளங்கவேண்டும். அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் பலவேறு வழிகளில் இந்த நோக்கம் கைகூடும்படி செய்திருக்கிறார்கள். புது ஜனநாயக ஆட்சி யின்கீழ் இந்தியாவில் நீதி மன்றங்களின் சுதந்திரம் அந் நாடுகளிற் போலவே வெகு முக்கியமானது. நிர்வாகம் நடத்தும் சர்க்காரோ பொதுஜனக் கூச்சலோ தம் ஜோலியைப் பாதிக்கும்படியாக நீதிபதிகள் விடக்கூடாது, ஜனங்களுக்கும் சர்க்காருக்கு மிடையே, மெஜாரிடி கட்சி மெம்பர்களுக்கும் மைனாரிடிக்கு மிடையே நடு நாயகமாய் ஹைகோர்ட்டார் நியாயம் வழங்க வசதி யிருக்கவேண்டு மானால், நீதிபதிகளின் உத்தியோக காலத்தை அல்லது

சம்பளத்தை அவர்கள் பதவி வகிக்கையில் அனுகூலமாக வோ பிரதிகூலமாகவோ மாற்ருமலிருக்க வேண்டியது அத்தியாவசியகம். மிகவும் முற்போக்காயுள்ள அரசியல் சட்டங்களில்கூட இந்த ஏற்பாடு காணப்படுகிறது. நடத்தை சரியாயிருக்கும்வரை அவர்கள் பதவியி லிருக்கவேண்டும். கீழ்த்தர நீதிபதிகளையும் மாஜிஸ்ட்ரேட்டுகளையும் முதலில் நியமனம் செய்யவேண்டியது சர்க்கார். ஆனல் பிறகு அவர்களுடைய உத்தியோக உயர்வு, மாற்றம், நிர்வாக ஆதிக்கம் முதலியன ஒவ்வொரு மாகாணத்திலு முள்ள ஹைகோர்ட்டிடம் இருக்கவேண்டும். வக்கீல்கள் சுதந்திர உணர்ச்சியுடன் இருந்துவருவது ஜனநாயகத்தின் மற்ருெரு கோட்டை. நீதி மன்றங்கள் சரிவரக் கடமை செலுத்துவதற்கும், நீதிபதிகள் சரியாக நியமிக்கப்படுவதற்கும் மட்டுமின்றி, சர்க்காரின் நிர்வாக யந்திரத்தையும் சட்ட நிரூபணத்தையும் நிபுணர்களின் கண்ணேட்டத்துடன் கவனித்து வருவதற்கும் வக்கீல்கள் சுதந்திரர்களா யிருப்பது அவசியமாகிறது. ஜனங்களின் அபிலாஷைகள், நோக்கங்கள், வேலைகள் ஆகியவற்றில் சென்ற இருபது ஆண்டுகளாக வக்கீல்கள் ஐக்கியப்பட்டிருக்கிருர்கள் என்பது வாஸ்தவம். இப்பொழுது புது ஜனநாயகம் நிலைத்து வருவதால் இதற்கு முன்னுலிருந்ததைவிட அதிகமான கவனத்தை ஒரு விஷயத்தில் வக்கீல்கள் செலுத்தவேண்டியது கடமையாகிறது. பொய்ப் பிரசாரம், கட்சியுணர்ச்சி. மூடநம்பிக்கையுடன் கூடிய ஆவேசம், வகுப்புவாத மாற்சரியங்கள் முதலியவற்ருல் மக்கள் வழி தவறிவிடாதவாறு அவர்கள் பார்த்துக்கொள்ள வேண்டும். மனேபாவம், கொள்கைகள், சட்ட நிரூபணம் முதலியவற்றில் தைரியத்துடனும் புத்திசாலித்தனமாகவும் புது மாறுதல்கள் ஏற்படும்படியான வழியில் பொதுஜன அபிப்பிராயத்தைத் திடப்படுத்தி உருவாக்கவேண்டியது வக்கீல்களின் கடமை.

கட்டாய ராணுவ சேவை

அந்நிய ஆக்கிரமிப்பினின்றும் உள்நாட்டுக் குழப்பத்தினின்றும் ஒரு ஜனநாயக நாட்டைப் பாதுகாக்கும்

வேலை முக்கியமான பிரச்னைகளைக் கிளப்புகிறது. பயிற்சி, சாதனம், மனேதிடம் ஆகியவற்றில் உலகில் வேறு எதற்கும் மட்டமாயில்லாத ஒரு ராணுவ ஸ்தாபனம் இந்தியாவின் பாதுகாப்புக்காக இருந்துவருவதன் அவசியம் தெளிவாயிருக்கிறது. இதை அசட்டை செய்ய முடியாது. மற்ற நாடுகளுடன்கூட, அவற்றிற்கு உட்பட்ட அல்லது சம அந்தஸ்துடன் கூடிய ராணுவ ஐக்கியங்களையோ அல்லது மனேபாவ வழிகளையோ மட்டும் நம்பியிருந்தால் எந்த ஜனநாயகமும் பத்திரமாக இருக்கமுடியாது. எனவே, தேசியப் பாதுகாப்பானது, இந்திய ஜனநாயகத்தின் பிரதானத் தேவை. அது அவசியமான தேவையுமாகும். சென்ற யுத்த முடிவில் ஏற்பாடான எல்லா விவகாரப் பைசல்களும் எவ்வாறு சென்ற இருபது வருஷங்களில் சிதைவுற்றன என்பதைக் கண்கூடாகப் பார்த்தோம். ஜனநாயகம் தழைத்தோங்குவதற்காக உலகம் பந்தோபஸ்தாக்கப்பட்டிருப்பதாகவோ, இனி அம்மாதிரி ஆகுமென்றே நம்புவதற்கு ஐரோப்பிய--ஆசிய நிலைமைகள் இடந் தரவில்லை. எப்பொழுதுமே சரித்திரம் கற்பித்து வந்துள்ள உண்மைகளை உணர்ந்து பகுத்தறிவு—வழியை நாம் விடாமல் பற்றிச் செல்ல வேண்டும். சமாதானம் நிரந்தரமாய் நிலவக் கூடிய சகாப்தத்தை நோக்கி மனித வர்க்கம் முன்னேறுவதாக நம் கண்களுக்குப் புலப்படவில்லை; அல்லது அந்த முன்னேற்றம் நம்பக் கூடாதவாறு அவ்வளவு மெதுவானதாக இருக்க வேண்டும். அன்பு, சாந்தி என்ற திருக்கோயில்களுக்கு அவ்வப்பொழுது நாம் யாத்திரை சென்றபோதிலும், நாம் இன்னும் காடு வாழ் விலங்குகளாகவே இருந்து வருகிறோம். எனவே, கட்டாய ராணுவ சேவைக் கொள்கை இந்தியாவில் அங்கீகரிக்கப்படவேண்டும் என்று எனக்குத் தோன்றுகிறது. இதற்குக் காரணங்கள் பல உண்டு. ஐரோப்பாவில் மக்கள் லௌகிக மனேபாவமுள்ளவர்கள். கண்ணிமைப் பொழுதில் சமாதான அடிப்படையிலிருந்து யுத்த அடிப்படைக்கு மாற அவர்களால் முடியும். இங்கிலாந்தில் ராணுவ சேவை இஷ்டபூர்வமானதாக இருந்துங்கூட,

யுத்தம் வருமென எதிர் நோக்கிக் கட்டாய சேவை முறையின்மூலம் அந்நாட்டினர் தங்களைத் தயார்ப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்தியாவில் வாழ்வைப் பற்றிய நமது சம்பிரதாயக் கருத்து இப்பிரச்னை விஷயத்தில் நமக்குச் சிரத்தையில்லாமல் செய்துவிட்டது. ஒரு தலைமுறைக்குள், ராஜீய வகையில் விசேஷச் சுறுசுறுப்பை நாம் காட்டிவிட்டோம். ஆனால் நம்முடைய வீடுகளையும் சுதந்திரங்களையும் பாதுகாப்பதற்கு இஷ்டமும் திறமையுமுள்ளவர்களாக்கிக் கொள்வது பற்றி நமது மனோபாவம் விசேஷமாக மாறவில்லை. நமது முன்னோர்கள் காலத்துப் போக்கையே இன்றும் காண்கிறோம். நமது மொத்தத் தேவைகளை மதிப்பிட்டுப் பார்க்குமிடத்து, இங்குமங்கும் காணப்படும் சில்லறைச் சீர்திருத்தம் ரொம்பவும் அற்பமானது. வயது வந்த ஒவ்வொரு இந்திய ஆண் பிள்ளையும் வழக்கமான வயது வரம்புகளுக்கு உட்பட்டு ஒரு குறுகிய காலத்துக்குக் கட்டாயம் ராணுவப் பயிற்சி பெற்றுச் சேவை புரிய வேண்டும். புது ஜனநாயகத்தை அது ஊக்கப்படுத்தும். அதன் மூச்சுப்பை தைரியத்தையும் சுதந்திரத்தையும் சுவாசிக்கும். இப்பொழுதிருப்பதைவிட ஆண்மை அதிகமாயுள்ள ஒரு சமுதாயம், தன் வீபரீதங்களையும் குயுக்திகளையும் மறந்து, வகுப்புவாத — பிரிவினை மனோபாவங்களைக் கைவிட்டு, புத்தி பூர்வமான அல்லது உணர்ச்சி வெள்ளத் தடைகளிலிருந்து விடுபட்ட புதிய பொதுஜன சர்க்கார் ஸ்தாபனத்தை அமல் நடத்தும். விவாத சாதுரியம், அதிகார அந்தஸ்து, பணம் அல்லது விளம்பர ஆசையின்மீது அமைக்கப்பட்டுள்ள நம்பிக்கையற்ற சமுதாய, அரசியல் கட்டுப்பாடுகளுக்குப் பதிலாக, பழுத்த தேசபக்தியில் வேரூன்றிய ஓர் உண்மையான கட்டுப்பாடு தோன்றும். நம்மெல்லோர் மனத்திலும் இப்பொழுது இருந்து வரும் பரஸ்பர அவநம்பிக்கைக்குப் பதிலாகச் சிறப்பான மனப்போக்கைக் காணலாம். அப்பொழுது தான், சர்க்காருக்கு எதிராகப் பிரஜைகளின் உரிமைகள், மெஜாரிடிகளுக்கு எதிராக மைனாரிடிகளின் உரிமைகள் முதலியவற்றில் உண்மையுணர்ச்சியையும் பொருளையும் காணலாம். அப்பொழுதுதான் வளர்ந்

தோங்கிய மனக் கருத்து தைரியமாய் வெளிப்பட முடியும், மனச் சாக்ஷிப்படி நடக்கும் சுதந்திரமும் இருக்க முடியும். மற்றச் சமுதாயங்கள் பாதுகாப்புக் கலைகளை எப் பொழுதும் அலட்சியம் செய்ததே யில்லை; ஆனால், இந்தியரும் சீனரும் தங்கள் தத்துவத்தையும் மத வழி களையும், ஏராளமான ஜனசங்கியையையும், ஆயுத பலத் துக்குப் பதிலாக நம்பி வந்துள்ளனர். புராதன ஹிந் துக்கள் நாட்டின் பாதுகாப்பை ஒரு ஜாதியிடம் ஒப்படைத் தனர். போர்வீரன் தொழில் கேவலமானது என்பது சீனர் கருத்து. பிழைப்புக்காக ராணுவ சேவை புரிவோ ரடங்கிய ஸைன்யங்களை மட்டுமே ஹிந்துக்களும் சீனரும் அனுமதித்தனர். இந்தியாவின் இயற்கைப் பாதுகாப்புகள் அபாரமா யிருந்துங்கூட, படையெடுத்து வந்த ஒவ்வொரு வனும் நம் நாட்டை ஆட்கொண்டான் என்பதைச் சரித் திரம் காட்டுகிறது. ஸ்திரமான சர்க்காரைப் பொதுஜன அடிப்படையிலோ அல்லது வேறு வகையிலோ, நெடு நாட்களுக்கு நம்மால் அமைக்க முடியவில்லை என்பதையும் சரித்திரம் காட்டுகிறது. மூன்று மதங்களும் தூய் மையும் சக்தியும் நிறைந்தனவா யிருந்தபோதுங்கூட, யோக சித்திகள் பிரபலமாக இருந்தபோதிலும், நமது முன்னோர்களால் நாட்டைக் காக்க முடியவில்லை. ஒரு சில கூட்டங்களின் போர்க்குணமும் பல குடும்பங்களின் வீரமும், மக்களில் மிகப்பெரும்பான்மையோரின் அசிரத் தையைப் பிரகாசமாய் எடுத்துக் காட்டுபவையாகவே இருந்தன. ஒன்றிரண்டு நூற்றாண்டுகளுக்குப் பிறகு, நம்மை யடுத்து வசிப்போருக்கு நாம் லேசான ஆபத்தாகக் கூடுமே என்பதற்காக, புதிய சக்தியைப் பெற முயலாமல் நாம் பின்வாங்குவது சரியாகுமா? புயலடிக்கையில், அலட்சிய உணர்ச்சியுடன் பணிந்து கொடுப்பது தத்துவ வகையில் கம்பீரமானதாயிருக்கலாம்; ஆனால் அது விவகார வழியாகாது.

ஜனநாயகத்தை அழிப்பதற்கு, கலவரத்தை உண்டு பண்ணிச் சமுதாயத்தை சிதைப்பதற்கு, சந்தர்ப்பம் வராதாவென்று சில சக்திகள் காத்திருக்கும். அவற்றை

எதிர்ப்பதற்குச் சமுதாயம் பூராவையுமே தயார்ப்படுத்தி வைத்திருந்தாலொழிய, ஜனநாயக அரசியலின் அஸ்திவாரம் பந்தோபஸ்தாயிருக்க முடியாது. ஜனநாயக நாட்டில் தரப்படும் கல்வி, ஜனநாயக ஆட்சியைக் காப்பாற்றுவதையே நோக்கமாகக் கொண்டிருக்கவேண்டும். ஜனநாயகத்தில் புத்திபூர்வமான நம்பிக்கை இல்லாததால் தான், ஐரோப்பாவில் ஸர்வாதிகார அமல்களின் பிரசாரத்தை எதிர்ப்பதற்கு வேண்டிய மனோதிடம் இல்லாமற்போய்விட்டது. யுத்தம், தோல்வி, பொருளாதார மந்தம், இயற்கையின் சீற்றம் ஆகியவற்றைப் போதிய முன்னேற்பாடுகளுடன் சமாளிப்பது எப்பொழுதுமே சாத்தியமல்ல. ஆனால் மக்களின் வெள்ளை மனத்தையும, அறியாமையையும், மூடநம்பிக்கைகளையும் பேராசைக்காரர்களான யோக்கிய மற்றவர்கள் தலைமை வகித்துப் பயன்படுத்திக் கொள்வதினின்றும் எழும் கெடுதல்களான லஞ்சம், சுரண்டல், கொடுமை, மக்களிடையே விரோதவுணர்ச்சி முதலியவற்றைச் சரியான போதனையின் மூலம் தடை செய்யலாம், அல்லது மட்டுப்படுத்தலாம்.

ஏற்கெனவே நான் கூறியுள்ளபடி இந்தியாவில் எல்லோருக்கும் கட்டாயமாக உயர் தரக் கல்வி போதிக்கப் படவேண்டும். ஆனால் ஜன சமூகத்தில் எல்லோருக்கும் அது கிடைக்கும்வரை, முதியோர் கல்வி ஓர் அளவில் அவசியமாகிறது.

அனுபவத்தை யொட்டிப் பயனுள்ள விஷயங்களையே முக்கியமாகக் கற்பிக்கவேண்டும். விஞ்ஞான பாடங்கள் அவற்றில் சேர்ந்திருக்கவேண்டும்.

கலாசாரம் (‘கல்சர்’)

‘கல்சர்’ என்ற கலாசாரத்திற்குச் சுகபோக மதிப்புத் தானுண்டு. அதைப் பிரமாதமாக வற்புறுத்தக் கூடாது. எப்பொழுதுமே அது வர்க்க ரீதிக் கல்வியின் தனி யடையாளமாக இருந்து வந்திருக்கிறது. சில சமயங்களில் சீரழிந்துவரும் ஒரு சமுதாயத்தின் ஊழல்களும் விகற்பங்களும் வெளியே புலப்படாமலிருப்பதற்கும் அது பயன்படுகிறது.

சமுதாயத்திலுள்ள எந்தத் தனிப்பகுதியின் விசேஷமான தராதரங்களை அடிப்படையாகக் கொண்ட கல்வி முறையும், ஜனநாயகம் ஸ்திரமாயிருப்பதற்கு ஒத்தாசையாயிராது. இதை ஒவ்வொரு நாடும் உணர்ந்திருக்கிறது. சாதாரண ஆடவர் பெண்டிருக்கு, பொதுமக்க

ளுக்கு என்று ஒரு கல்வியைப் போதிப்பதே நமது லட்சிய மாக இருக்கவேண்டும். போதிய அளவு கல்வி கூடா தென்றே, ஒரு பகுதிக்குச் சிறுமை யுணர்ச்சியையும் மற் றென்றிற்குப் பெருமை யுணர்ச்சியையும் தரக்கூடியதாகக் கல்விமுறை இருக்கவேண்டுமென்றே நான் கூறவில்லை. சாதாரண ஆண் பெண் மக்களின் விவகாரங்களுடன் ஐக்கியப்படாத எந்த வர்க்கம் அல்லது பகுதியினுலும், புது இந்திய ஜனநாயகத்துக்குச் சேவை புரிய முடியாது.

தேசபக்தி, சுதந்திரம், தைரியம், நியாயம், மக்களின் சேவை, ராஜீய நேர்மை ஆகிய நற்குணங்களைப் போதித் தால் அவை மேலும் விருத்தி யடையும். சகிப்புத் தன்மை, புத்தி பூர்வமான நடத்தை, குணதோஷங்களை எடுத் துரைக்கவும் எதிர்ப்பதற்கும் உரிமை, அபிப்பிராயம் சரி வர உருவாவதில் அவற்றின் பங்கு, துவேஷத்தையும் கட்சி யுணர்ச்சியையும் ஒழிப்பதன் அவசியம் முதலிய வற்றை, பள்ளி மாணவர்களுக்கும் வயது வந்தவர்களுக் கும் அளிக்கும் கல்வியில் சேர்க்கவேண்டும். ராஜீயத்தைப் பொருளீட்டும் சாதனமாகக் கொண்டுள்ளோரிடம் வெறுப்புக்கொள்ள வேண்டுமெனவும், யோக்கியதைக்கும் ஸத்தியத்துக்கும் மதிப்புத் தரவேண்டுமெனவும் மக்களின் மனத்தில் பதிய வைக்கவேண்டும். கட்டுப்பாட்டைப் பற்றி ஸர் பிலிப் ஹார்டாக் பின் வருமாறு கூறியுள்ளது தகுதி யான வார்த்தை :—

> "சர்க்கார் ஸ்திரமாக இருப்பதற்கு அவசியமான அளவு கட்டுப்பாட்டை முன்னேற்றத்துக்கு அவசியமான சிந்தனைக்கும் செயலாற்றுவதற்கும் வசதியுடன் கூட இணைப்பது ஜன நாயகத்துக்கு அத்தியாவசியம்.''27

முதியோருக்கு அளிக்கப்படும் கல்வியில் கட்டுப்பாட்டின் உபயோகம், துஷ்பிரயோகம், வரம்புகள் முதலியவற்றை உதாரணங்களுடன் கூட ஜாக்கிரதையாக விளக்க வேண்டும்.

உண்மையான ஜனநாயகம் ஒவ்வொன்றிலும் தனி மனிதன் ஒரு கருவியாக இல்லாமல், இறுதியான கவனத் திற்குரிய தனி நபராக மதிக்கப்படுகிறன். லார்ட் பால்ட் வின் கூறியதுபோலக் கல்வி என்பது புனிதமான பொறுப்பு. உபாத்தியாயரின் பிரதான சிரத்தை குழந்தை யின் மனேவிலாஸத்தை விஸ்தரிப்பதாக இருக்க வேண்டுமே ஒழிய, கட்சியின் வெற்றியைப் பெருமைப் படுத்துவதாக இருக்கக் கூடாது. அதாவது தனி

27 "ஜன நாயகத்துக்காகக் கல்வி'' கோஹென், டிராவெர்ஸ்.

கோஷ்டியின் அல்லது கட்சியின் நோக்கங்கள் நிறை வேறுவதற்காகக் கல்வியை துஷ்பிரயோகம் செய்யக் கூடாது. ஒவ்வொரு பிரச்னையையும் பற்றி ஆட்சேப சமாதானங்களைக் குழந்தைகளுக்கு மட்டுமின்றி முதியோர் களுக்கும் எடுத்துரைப்பதே அரசியல் - கல்வி. மக்களில் பெரும்பான்மையோர் தாங்கள் படிப்பதை நம்புகிறார்கள் என்பது உண்மை. இதை உணர்ந்து, பத்திரிகைகளையும் ரேடியோவையும் கடுமையான கட்டுப்பாட்டுக்கு உட் படுத்துவது நவீன ஸர்வாதிகாரங்களின் மனோ தர்ம அடிப் படையாக இருந்து வருகிறது. எனவே விஷயத்தை மிகைப்படுத்திக் கூறும் பிரசுரங்களையும் கட்சிப் பிர சாரத்தையும் சந்தேக புத்தியுடன் கவனிக்கவும், உண் மையைத் தெளிந்தறியவும் போதிய திறமையைத் தரும் கல்வியையே மக்களுக்கு அளிக்கவேண்டும். வேறு சர்க்கார் முறைகளில் இருப்பதைவிட ஜன நாயகத்தில் குண தோஷங்களை ஆராய்ந்து முடிவு கூறும் திறமையை அபி விருத்தி செய்து உபயோகிப்பது அத்தியாவசியம். பத் திரிகைகளும் ரேடியோப் பிரசாரமும் சுயேச்சையாகவும் தைரியமுள்ளதாகவும் இருக்கும்படியாக ஊக்கப்படுத்தும் பயிற்சியும் மக்களுக்கு அளிக்கப்படவேண்டும்.

''மந்தைப் புத்தி'' (முன்னால் செல்கிறவனை அப்படியே பின் பற்றுவது) எனப்படுவதை விருத்தி செய்து, புத்தி பூர்வமாக நடவடிக்கை எடுக்கும் குணத்தை வளர்க் காத, தனிக் குணவிசேஷங்கள் வெளிப்பட வசதி இல் லாத, பொதுஜனக் கல்வியானது குறைகள் நிறைந்தது. தனி நபர் இருப்பது தேசத்துக்காக அல்லது அதை ஆளும் கட்சிக்காக மட்டுமே என்ற அபிப்பிராயத்தை, என்ன வாயினும் சரி, எதிர்த்தாக வேண்டும். குழந்தைகளுக்கோ அல்லது முதியோருக்கோ கல்வி போதிக்கும் எந்த உபாத் தியாயரும், எந்த ராஜ தந்திரியும், தலைவனும், அரசியல் வாதியும், பத்திரிகைக்காரனும், எழுத்தாளனும் இதற்கு இடந்தரவே கூடாது.

எல்லா சர்க்கார் முறைகளிலும், பெரிய மனுஷ்ய னுக்கு எப்பொழுதுமே மதிப்புண்டு. ஆனால் ஜனநாயகங் களுக்கு இவர்களால் விசேஷ ஆபத்துண்டு. ஹிட்லர், முஸோலினி, நெப்போலியன், ஸீஸர் ஆகியோர் இந்த நிரந்தரமான உண்மைக்கு உதாரணங்கள். மேதாவி களால் அல்லது பெரிய மனிதர்களால் நடத்தப்படும் ஒரு சர்க்காரை விட, நடுத்தர மனிதர்களால் நடத்தப்படும் சர்க்காரால் ஜனங்களுக்கு க்ஷேமம் அதிகமுண்டு; அந்த

சர்க்கார் அதிக ஸ்திரமுள்ளதாகவும் இருக்கும். சுய மரியாதையை உயர்த்துவது, வீரனைப் பூசிப்பதை மட்டுப் படுத்துவது, எந்த மிகப் பெரிய மனுஷ்யனின் உதவியு மில்லாமல் ராஜ்ய விவகாரங்களை வெற்றிகரமாய் நடத்த முடியும் என்ற நம்பிக்கையைச் சிருஷ்டிப்பது ஆகியவை ஜனநாயக போதனையில் உள்ளடக்கமா யிருக்கின்றன.

ராஜீயத்துக்கு ஒரு நியதியும், சொந்த நடத்தைக்கு ஒரு திட்டமும் நம்மிடையே வந்துவிடக் கூடும். குற்ற மிழைத்ததாக ருசுவாகும்வரை, ஒவ்வொருவனையும், நிரபராதியாகவே பாவிக்க வேண்டும் என்ற கோட்பாடு வக்கீல், ஜட்ஜ் ஆகியோரை மட்டுமே கட்டுப்படுத்தும்.29 ராஜீயத்தின், சரித்திரத்தின், உலக விவகாரத்தின் தேவை இதற்கு நேர்மாறுனது. சாணக்கியனும் மாக்கியவெல்லி யும் நம்மெல்லோரின் ஹிருதயத்திலும் குடிகொண் டிருக்கிருர்கள்.30 அவர்களை அங்கிருந்து வெளியேற்ற இதுவரை மதமோ, கல்வியோ ஒத்தாசை புரியவே யில்லை. இந்தியாவில் அளிக்கப்படும் புதிய கல்வியானது அரசியல் - சுற்றுணர்ச்சியை உலகின் மற்றப் பாகங்களில் இருப்பதைவிட அதிக இன்பமுள்ளதாகவும் பரிசுத்த மானதாகவும் செய்ய வேண்டும். நன்ருகச் சிரிக்கவும், பரிகாசத்தை ரஸிக்கவும் விரிவாகக் கற்றுக்கொள்ள வேண்டும்.

ஜனநாயக சமுதாயத்தில் கல்வி முற்றிலும் லௌகி கத் தன்மை வாய்ந்ததாகவும், புத்தி பூர்வமானதாகவும் இருக்க வேண்டும். விஞ்ஞான ஆதாரங்களுடன் கூட வெளியிடப்பட்டுள்ள கீழ்க்கண்ட சமீபகால அபிப் பிராயம் சரியானது: "குடும்பம்—அதாவது தாய், தந்தை, குழந்தைகள் கொண்ட பிரிவு — மனித வர்க்கத்தின் பிரதானக் கல்வி வசதி ஸ்தாபனமாகப் பெரும்பான்மை யும் இருந்து வந்திருக்கிறது.' 31 எனவே மதக் கல்வியை முற்றிலும் குடும்ப விவகாரமாய் விட்டுவிடலாம். கோஹெனும் டிராவெர்ஸும் இவ்விஷயமாய்க் கூறு கிருர்கள் :—

"போதனு முறைகள்மூலம் அல்லது பொதுப்படை யான மதக் கல்வியின்மூலம் நற்குணங்களைக் குழந்தை

---

29 சரித்திர ஆசிரியன் கூறுவதைக் கூட (அவனுடைய நேர்மை நிர்த்தாரணமாகும் வரை) அப்படியே நம்பிவிடக் கூடாது என்று லார்ட் ஆக்டன் கூறியிருக்கிருர்.

30 "இங்கிலாந்தைப் பற்றி" பால்ட்வின் 93-ம் பக்கம்.

31 கோஹென், டிராவெர்ஸ். "ஜனநாயகத்துக்குக் கல்வி."

களுக்கு உட்செலுத்த முயல்வது வியர்த்தமாகும். தார்மிகத்தை முறைப்படி போதிப்பது பயனற்றது என்பதை பிரான்ஸில் உணர்ந்திருக்கிறார்கள்.

முதியோருக்கு அல்லது இளைஞர்களுக்குப் போதிக்கப்படும் கல்வியில் கீழ்க் கண்டவற்றைத் தெளிவாக்குவது, இந்திய நிலைமைகளின் கீழ் அத்தியாவசியமாகிறது. ஜன நாயக சர்க்காருக்குச் சொந்தமான மதம் என்பது கிடையாது. ராஜீயம், மதம் — இரண்டின் வரம்புகள் வெவ்வேறு. ஒரு நாட்டின் மன்னர் ஹிந்து அல்லது முஸ்லிமா யிருப்பதால், அது ஹிந்து அல்லது முஸ்லிம் நாடாகி விடுவதில்லை. ஒரு மாகாண மந்திரி சபையில் இருக்கும் நபர்களைக் கொண்டு அதை ஹிந்து அல்லது முஸ்லிம் மந்திரி சபை என்று சொல்ல முடியாது. மனச்சாக்ஷியின் சுதந்திரம் அடிப்படையானது. எந்த மதக் கட்டுப்பாடு, கொள்கை அல்லது நம்பிக்கைக்கும் தேசத்துக்கும் சம்பந்தமே இல்லை.

அரசியலையும் மதத்தையும் கலந்ததன் மூலம் ஒவ்வொரு நாட்டிலும், சகாப்தத்திலும், பின்னால் நிவர்த்திக்க முடியாத அளவுக்குக் கெடுதல் ஏற்பட்டிருக்கிறது என்பது சரித்திர பூர்வமான, சாசுவத உண்மை. பிறப்பினாலும் கல்வியின் மூலமும், தான் அடைந்த யோக்கியதாம்சங்கள் தாம் ஒருவனது பொது வாழ்விலோ, சமூக சேவையிலோ, அல்லது தொழில் நடவடிக்கையிலோ பிரதி பலிக்கின்றன. மதமும் ஆத்மார்த்தக் கட்டுப்பாடும் திண்ணமாக யோக்கியதாம்சங்களை உருப்படுத்துகின்றன. பொது வாழ்வில் ஒருவன் அந்த யோக்கியதாம்சங்களையும் அவற்றை ஊக்கப்படுத்தும் உணர்ச்சியையும் பயன்படுத்திக் கொள்ளலாமே ஒழிய, பொது மக்கள்மீதோ அல்லது அவர்களில் ஒரு பகுதியினர்மீதோ திணிப்பதற்காக எந்த மதக்கோட்பாட்டையோ, நம்பிக்கையையோ அல்லது ஆத்மார்த்தக் கட்டுத் திட்டத்தையோ பொதுவாழ்வுக்குள் கொண்டுவரவே கூடாது.

இந்தியர் எல்லோரும் ஓர் இனம்

இறுதியாகக் கவனிக்கவேண்டியவை இவைதாம். உபாத்தியாயர்களோ, எழுத்தாளரோ, அரசியல் வாதிகளோ, நிர்வாகிகளோ, தலைவர்களோ யாராயினும் சரி, அவர்கள் அளிக்கும் புதிய கல்வியின் பிரதான வேலை, தாங்கள் ஒரே தேசிய இனத்தவர் என்ற உணர்ச்சியை இந்திய மக்களிடையே பலமாக ஏற்படுத்துவதுதான்.

ஒரே தேசீயத்வம், ஒரே இனம் என்ற அஸ்திவாரத்தின் மீதல்லாது வேறு வழியில் பலமுள்ள அல்லது ஸ்திரமான ஜனநாயக அரசியலமைப்பு சாத்தியமே அல்ல. உள்ளர்த்தத்துடன்கூடிய சக்திகள் உலகில் இரண்டுதான் உண்டு. அவைதாம் தேசிய இனமும் மதமும். உலகில் ஒவ்வொரு நாட்டிலும் மதமானது தேசியக் கட்டுப்பாடாக இருக்கும் தன்மையை இழந்துவிட்டது. ராஜாங்கத்திலிருந்து பிரிக்கப்பட்டதனால் அது அதிக பரிசுத்தமுள்ளதாகித் தனி நபரின் கட்டுப்பாடாகிவிட்டது. இந்த மாறுதலுக்காக நாம் வருந்தவேண்டியதில்லை. மதம் பல சமயங்களில் மக்களைப் பிரித்து வைத்திருக்கிறது; ஆனால் தேசிய இனமானது எப்பொழுதுமே ஒன்றுபடுத்தி வந்திருக்கிறது. உலகமெங்கும் இக்காலத்தில் தேசியத்வமும் இனமும் புத்துயிர் பெற்று விளங்குவதற்குக் காரணம் உள்ளூர அது பெற்றுள்ள பலமும், அதன் மதிப்பை மக்கள் உணர்ச்சி - பூர்வமாக போற்றிப் பேணுவதுந்தான். மற்ற இடங்களிற் போலவே இந்தியாவிலும் மத, சமூக வேற்றுமைகளால் தேசிய இனம் என்ற பந்தத்தின் சத்தை உறிஞ்சிவிட முடியாது. ஐரோப்பாவிலுள்ள ஸர்வாதிகார அமல்களை எதிர்க்கும் சில விஞ்ஞானிகளும் எழுத்தாளரும் தேசிய இனத்தின் கோரிக்கைகளைப் பரிகாஸம் செய்வது வழக்கமாய்விட்டது. 32 அக்கரையுடன் செய்யப்படும் இந்தப் பிரசாரத்தின் அடிப்படைக் கருத்தே தவறானது. ஆரிய ஜாதி என ஒன்று இருப்பதாகவோ, அல்லது நார்டிக் (வட ஐரோப்பிய) ஜாதிதான் கலப்பற்ற தென்றோ உயர்ந்ததென்றோ, கூறப்படுவதை நிராகரிக்கும் அளவுக்கு அவர்களுடைய வாதம் செல்லுபடியாகும். ஆனால் ஹிட்லர் எந்த நிலப் பாறைமீது தன் கட்டுக் கோப்பை அமைத்திருக்கின்றாரோ அதை அசைக்கக்கூட இதனால் முடியாது. ஆனால் அந்தக் கட்டுக் கோப்பு பித்துக் குளித்தனமானது, நிலைத்திருக்கக் கூடியதல்ல, ஹிட்லர் ஆட்சியின் அதிக்கிரமங்களினின்றும் நாமெல்லோரும் ஒரு விஷயத்தை உணர்ந்திருக்கிறோம். பலாத்கார ஆக்கிரமிப்பைக் கிளப்பக்கூடியதாக, பழி வாங்கும்

---

32 "ஐரோப்பியர்களாகிய நாம்."—ஜூலியன் ஹக்ஸ்லி, ஏ. சி. ஹாடன் (1939)

"இனம் - நவீன மூடநம்பிக்கை"—ஜாக்விஸ் பார்ஸன் (1937)

"ஹிட்லரும் நாஜி ஸர்வாதிகாரமும்"—ஷுமன் (1936)

"இனத்துவம்"—மாக்னஸ் ஹர்ஷ்பெல்ட் (1938)

ரீதியில் எதிர் நடவடிக்கை வரும்படியாக ஆத்திரமூட்டும் ரீதியில் அல்லது அயலாரைத் துன்புறுத்துவதற்கு அல்லது சித்திரஹிம்ஸை செய்வதற்கு இடந் தரும்படியாக, தேசிய உணர்ச்சியைக் கேவலமான வழிகளில் வளர்க்கவே கூடாது.

'தேசிய இனம்' (Race) என்பதை உபயோகப் படுத்துவதை ஜூலியன் ஹக்ஸ்லியும் ஹாடனும் கண்டித் திருப்பது பெரும்பான்மையும் சொல்லலங்காரந்தான்; விவாத விஷயத்துக்கு அது பொருத்தமானதல்ல. "தேசிய இனம்" என்றாலும், கலப்படமாயுள்ள ஜாதீயப் பிரிவு என்று சொன்னாலும், தாத்பர்யமென்னவோ பாதிக்கப் படவே யில்லை.33 பல தலைமுறை விட்டுப்போன பங் காளிகளிடையே அல்லது ஒரே ரிஷியின் கோத்திரத்தில் உதித்தவர்களிடையே காணப்படும் உறவு - உணர்ச்சியை விட, முதல் தலைமுறைப் பங்காளிகளிடையே காணப்படும் பாந்தவ்யம் அதிக பலமுள்ளது. இந்தியர்களும் மற்ற உலக மக்களும் ஒரே மானிட வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லும்போது ஏற்படும் உணர்ச்சியைவிட, சகோதர இந்தியர்களா யிருப்பதிலிருந்து எழும் தேசிய உறவுணர்ச்சி நிரம்பவும் பலமுள்ளதாகும்.

இந்தியர்களாகிய நாமெல்லோரும் கலப்பட மக்கள். ஹிந்துக்கள், முஸ்லிம்கள், சீக்கியர், கிறிஸ்தவர்கள் ஆகிய எம்மதத்தினரா யிருந்தாலும் சரி, பிராம்மணர்கள் அல்லது ஹரிஜனங்களாக இருந்தாலும் சரி, தமிழ், தெலுங்கு, மலையாளம், மராத்தி, ஹிந்தி, குஜராத்தி, வங்காளி, உரியா, பஞ்சாபி, பஷ்தோ அல்லது ஹிந்தி ஆகிய எந்தப் பாஷை பேசும் மக்களாய் இருந்தாலும் சரி, நாமெல்லோரும் ஒரே தேசிய இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பது என் அசைக்க முடியாத திடநம்பிக்கை.

---

33 நீக்ரோ, மங்கோல், காகேஷியன் இனங்கள் பூர்விகத் தில் தனி இனங்களா யிருந்ததாக ஜூலியன் ஹக்ஸ்லியும் ஏ.சி. ஹாடனும் கருதுகிறார்கள். ஆனால் இப்பொழுது அதை ஒப்புக்கொள்ள முடியாது. கலப்பற்ற இனங்களே இப் பொழுது இல்லை. இப்பொழுதுள்ள மக்களெல்லோரும் ஏற்றக் குறைவான கலப்படமுள்ளவர்கள். "இந்திய இனம்" "ஜெர்மன் இனம்" போன்றவைகளுக்குப் பதிலாகக் "கலப்பு இனத்தொகுதி" என்று கூறவேண்டும்............... ....ஒரு சில பூர்வக்குடிகள் தவிர இந்திய மக்கள் மொத்தத்தில் நிலையான குணவிசேஷங்கள் கொண்ட கலப்பட இனத்தவர்தாம்.

அரசியல் பரீட்சார்த்த வகையில் தேசியத்வம் என்பதற்குத் தரப்படும் வெறும் யுக்தி பூர்வமான கருத்தானது, தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்ளக்கூடாத அல்லது ஒருகாலும் உறுதியாகத் தன் மனோபீஷ்டத்தைச் சாதித்துக் கொள்ளக்கூடாத, சக்தியற்ற, ஒரு தேசியத்தில்தான் கொண்டுபோய் விடும். நமது வாழ்வில் ஆழமாக வேரூன்றியதாகவும், மனத்தைப் பரவசப்படுத்தக் கூடியதாகவும் இருக்கவேண்டும் தேசியத்வம்—இனம் என்ற கருத்து. இதை நம்முடைய ரத்தத்தில் காணலாம். ஆனால் இதை நாம் கொஞ்சம் சாவதானமாகவே உணர்ந்து கொண்டிருக்கிறோம். நம்முடைய ஹிருதயங்களை ஊடுருவிப் பார்ப்போமாகில் நாமெல்லோரும் ஒரே இனத்தவர் என்பதை நிச்சயமாகக் காண்போம். தேசிய ஒருமையுணர்ச்சி ரொம்பவும் உன்னதமானவைகளில் ஒன்று. அதைப் போற்றி வளர்க்கவேண்டும். அதுவே நமக்குக் கலப்பற்ற மகிழ்ச்சியைத் தரும். பலவேறு மாறுதல்களிடையே நம்மை ஒன்றாகப் பிணைத்து வைத்திருக்கக்கூடிய மர்மமான ஒரே ஒரு சக்தி அதுதான் என்பது என் திடமான கருத்து.

எதிர்காலத்தில் நமக்கு என்ன வரப்போகிறது என்பதை நாம் அறியோம். நாம் பிரமையாகிய ஒரு தீவைச் சுற்றிக் குறுகிய யாத்திரையே செய்து கொண்டிருக்கக்கூடும்; அல்லது ஒரு புயலில் சிக்குண்டு பாதாளத்தில் போய்விடவுங் கூடும். அல்லது நம் கனவுகள் பலித்து, எங்கும் வேலையின் விருவிருப்பு ஒலிக்க, நீதி தைரியம் இரண்டும் எப்பொழுதும் அரசு செலுத்த, சுதந்திரமும் சந்தோஷமும், செழுமையும் சமத்வமும், சுமுகமும் ஜோதியும் சேர்ந்து உலாவக் கூடியதாகச் சொந்த நாட்டை நாம் உருப்படுத்தவும் கூடும். புத்தப் புதியதான அந்த ஜனநாயகம் உலகிற்கு ஒன்றிரண்டு அழியாப் படிப்பினைகளைக் கற்பிக்கவும் கூடும். நாம் ஒரு புராதன மக்கள். அசாதாரணமான, சுலபமாய்ப் புலப்படாத உணர்ச்சி படைத்தவர்கள். ஆனால் ஒரு புது ஊக்கமும் ஒரு புதுமைத் தைரியமும் நம்மிடையே காணப்படுகின்றன. நமது பழைய சந்தேகங்களையும் கற்பனைகளையும் எதிர்த்துப் புதிய அபிலாஷைகள் ஓயாமல் மல்லுக்கு நிற்கின்றன. விரலைச் சுட்டிக் காட்டி நம்மை அழைக்கும் அந்தச் சக்தியைக் காண்பிக்கக் கூடிய ஓர் அபூர்வமான ஒளி வீசப் போகிறது என்று நம்புகிறேன். காலமும் விதியும் நம்மைப் பலவீனப் படுத்திய போதிலும், முயன்று பார்த்துத் தேடிப் பிடித்துப் பணியாமலிருப்பதற்கு வேண்டிய மனோதிடம் இன்னும் நம்மிடம் இருந்து வருகிறது.

Indian Express, Branch Press, Madras.

கைக்குப் பூஷணம் | வீட்டுக்குப் பொக்கிஷம்

தினமணி வெளியீடு

பதிப்பாசிரியர் : பி. ஸ்ரீ.

		ரூ.	அ.
1.	மகாத்மா காந்தி—நினைவு மாலை [2-ம் பதிப்பு] ...	0	12
2.	ரவீந்திரநாத டாகுர் ...	0	8
3.	கைலாஸம்-மானஸரோவர் (பிரதிகள் கைவசமில்லை)	0	8
4.	போலந்து—பின்லந்து ...	0	12
5.	சிறு கதை மஞ்சரி ...	1	0
6.	ஹாஸ்ய நாடகங்கள், கட்டுரைகள் ...	2	0
7.	தில்லைக் கோவிந்தன் ...	1	0
8.	அன்னை கஸ்தூரிபா ...	0	12
9.	முன்னிலா ...	0	12
10.	தளவாய்த் தாத்தா (அரியநாயக முதலியார்) ...	0	12
11.	மௌலானா ஆஜாத் ...	1	0
12.	கதை வனம் ...	1	0
13.	நவ ரஸங்கள் ...	0	12
14.	வீர ரஷ்யா (பாகம் I) ...	0	12
15.	காந்தீயத் திட்டம் ...	1	8
16.	தற்காலப் போர்க் கருவிகள் ...	1	0
17.	கதா நாடக மஞ்சரி ...	0	8
18.	வீர ரஷ்யா (பாகம் II) ...	0	8
19.	கபீர் தாஸர் ...	0	8
20.	ஐசுவரிய அமெரிக்கா ...	0	8
21.	தஞ்சை நாயக்கர் ...	0	8
22.	ஜீவ கலை ...	0	8
23.	அமிர்த சந்திரன் ...	1	0
24.	சீனா ...	0	8
25.	உத்தம வாழ்க்கை ...	0	8

(ஒவ்வொன்றுக்கும் தபால் செலவு பிரத்தியேகம்)

என் தந்தையார் (எஸ். ஸ்ரீநிவாஸையங்கார் நினைவுகள்)

புரட்சி முரசு அல்லது இரட்டை நீதி